Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් டிச. 24-30,2000

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 388

## இந்தியாவின் கண்களை உறுத்துகின்ற முள் எது?




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## மனித உரிமைகள்!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

வருட இறுதியில் ஒருநாளை
மனித உரிமைகள் தினமாக ஒதுக்கி
ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும்
நடத்தி,
உலகெங்கும் நிகழ்ந்த,
நிகழ்ந்து வருகின்ற
மனித உரிமை மீறல்களுக்காகக்
குரல் கொடுக்கும் வழமைப்படி
இம்முறையும் இலங்கையில்
இத்தினம் மிகவும்
முனைப்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

சமாதானத்தை வலியுறுத்தி
நோர்வே தூதரகத்துக்கு
ஊர்வலமாகச் சென்று மகஜர் ஒன்றும்
சமர்ப்பிக்கப்பட்டது.

மனித உரிமை என்பது
நாட்டின் மொத்த
சமாதானத்தோடு
பின்னிப் பிணைந்ததென்று
உணர்ந்ததனாலேயே
இத்தகைய நடவடிக்கையில்
மனித உரிமை அமைப்புகள்
இறங்கத் தலைப்பட்டுள்ளன.

அத்தகைய சமாதானமொன்றை
இந்த நாட்டில்
நிலைநாட்டுவதானால் அதற்கு
மூன்றாம் தரப்பு
மத்தியஸ்தம் ஒன்று
அவசியம் என்ற
புரிதலையும் கூட
இங்கே காணக்கூடியதாக உள்ளது.

இத்தகைய ஒரு
மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை-
உள்நாட்டு விவகாரத்தில்
வெளிநாடுகள் தலையிடுவதாக
எடுத்துக்கொள்ள முடியாதென்பதை
இது வெளிக்காட்டுகிறது.

இருந்த போதிலும்,
சொற்ப நாட்களுக்கு முன்னால்
பிரித்தானிய வெளிநாட்டமைச்சர்
இலங்கைக்கு வருகைதந்து
இனப்பிரச்சனை தீர்வு குறித்து
அக்கறை செலுத்தியபோது
அவர் நிகழ்த்தவிருந்த சொற்பொழிவை
ஆட்சேபித்து,
அவருக்கு எதிராக
இனவாதிகளின்
ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

இதேபோல்,
நோர்வே நாட்டின்
மத்தியஸ்த முயற்சிக்கு
எதிராகவும்கூட
பலத்த எதிர்ப்பு
இவர்களால் காட்டப்பட்டது.

இத்தகைய செயற்பாடுகளை
அன்னிய நாடுகளின்
தலையீடு குறித்த
அச்ச உணர்வாக மட்டும்
பார்க்க முடியாது.

எமது நாட்டில்
நிலவுகின்ற
அநீதிகள் யாவும்
சர்வதேச நியாயங்களினால்
அம்பலப்பட்டுவிடும் என்ற
குற்ற உணர்வே இங்கு
மேலோங்கி நிற்கிறது.
இனப்பிரச்சனையென்பது
இங்கேயொரு
தீராத வியாதியாகிவிட்டதன் பின்
அதற்கு மருத்துவம் பார்க்க
உள்நாட்டு மருத்துவர்களால்
முடியாத கட்டத்தில்
வெளிநாட்டு மருத்துவர்களைத்
தருவிப்பதென்பது
தவறானதல்ல;
வியாதி குணமாகவேண்டும் என்பதே
முக்கியமானதன்றி
யார் மருத்துவம் பார்க்கிறார்கள் என்பது
முக்கியமானதல்ல.

இன்றைய வியாதியின்
பாரதூர நிலையை உணர்ந்து
மனித உரிமைவாதிகள்
நோர்வே அரசாங்கத்துக்கு
மகஜர் கொடுத்தது
இந்த வகையில்
பொருத்தமான ஒன்றே.

இதேவேளை
மனித உரிமை பற்றிய
கருத்துக்கள் இப்போது
மிகவும் விரிவடைந்துள்ளமையை
நாமும் சற்றுப் புரிந்துகொள்வது அவசியம்.

தனிமனிதன் என்ற அடிப்படையில்
ஒருவனுக்கான மனித உரிமைகளை
வரையறை செய்வதாக மட்டுமன்றி,
சமூகப் பிரதிநிதி என்ற
கண்ணோட்டத்திலும் மனித
உரிமைகள் பற்றிச் சிந்திக்கப்பட வேண்டும்.

இயல்பான ஒரு சமூக வாழ்க்கைக்கு
உட்பட்டதாகத்தான் மனித உரிமைகள்
அமைகின்றன என்ற புரிதலில்
தனிமனிதனுக்கும் சமூகத்துக்குமான
உறவுநிலையைப் பேணுவதென்பதும்
இங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகின்றது.

இந்த வகையில் இங்கே
சமூகங்களின் பாதுகாப்பு பற்றியும்
பல்லின சமுதாயத்தில்
சமூகங்களிடையிலான
புரிந்துணர்வைப் பேணுவது பற்றியும்கூட
மனித உரிமைவாதிகள்
சிந்திக்க வேண்டியதாக உள்ளது.

அத்தோடு,
தற்போதைய உலகப் போக்கில்
மனித உரிமை மீறல்கள் என்பது
அரசாங்கங்களால் மட்டும்
பொறுப்புக்கூற வேண்டிய
ஒன்றாகவன்றி,
அது தொடர்பான
சகல காரணிகளுக்கும்
பொறுப்பானதாக மாறிவிட்டதை
உணர்வதும் அவசியம்.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

# ஆன்மீகம்

## உறுதியான ஆன்மீக அறிவு எது?



தமது புத்தியில் நிலைத்து, உணர்வுக்கதவுகளைத் திறந்து, உலகத்தை உள்ளபடியே நோக்குபவர் ஞானி. எலெக்ட்ரிகல் இன்ஜினியர் ஒருவர் நகரத்துக்கு வருகிறார். இருட்டிவிடுகிறது. திரும்பிய இடமெல்லாம் அலங்கார விளக்குகள், அற்புதமான காட்சி. அவர் கேட்கும் கேள்வி "இது என்ன ஏ.சி.யா? டி.சி.யா?"

இப்போது அதே நகரத்திற்கு ஒரு கிராமத்தான் வருகின்றான் என்று வைத்துக் கொள்வோம். அவருக்கு ஒரே ஆச்சரியம். "திரியும் இல்லாமல், எண்ணெயும் இல்லாமல் எப்படி இவ்வளவு விளக்குகள் எரிகின்றன?" அவருக்கு அதிசயமாயிருக்கிறது. அவரைப் பொறுத்த வரையில், மின்சாரம் என்ற நினைப்பே கிடையாது. அதனால், ஏ.சி., டி.சி. பிரச்சனை இல்லை. இன்ஜினியர் பார்க்கும் மின்சார உலகம், அந்தக் கிராமத்தானுக்குத் தென்படவில்லை. அதேபோல், கிராமவாசியை அதிசயிக்க, பிரமிக்க வைத்த அதிசய உலகம் இன்ஜினியருக்கு இல்லை.

அதைப்போன்று தான் சாதாரண மனிதன் காணும் அகந்தையை மையமாகக் கொண்ட, வரையறைக்குட்பட்ட உலகம் வேறு. இறையுணர்வில் நிலைத்துவிட்ட மனிதர் காணும் உலகம் வேறு. எனவே, உறுதியான ஆன்மீக அறிவு பெற்றவர், இன்ப அகந்தையில் குறுகிய சுயநல வாழ்வில் காணும் துன்பங்களை அனுபவிப்பதில்லை.

ரீ.குணவர்த்தன-களுவாஞ்சிக்குடி.

## நோன்பாளிக்கு புலனடக்கம் வேண்டும்

நோன்பு நோற்பதென்றால் புலன்களை எல்லா வகையான பாவச் செயல்களிலிருந்தும் தடுத்துக் கொள்ளல் வேண்டும். புலனடக்கம் இன்றேல் இறைவனை உண்மையில் பணிந்து நடப்பது என்பது நடைபெறாது; வெறும் போலிவேடமாகவே அமையும். எனவே, நோன்பின் பெரும் பயனான இறை சிந்தனை, இறை தரிசனம் ஆகியவற்றை தடைசெய்யும் காரணிகளை நீக்கிவிடவேண்டும். நோன்பு திறந்ததும் வகைவகையான உணவுகளை உண்டு குடித்துவிட்டால், ஏற்படும் விளைவோ பயங்கரமானது. உண்டமயக்கத்தில் 'ஷைத்தான்' புகுந்து தனது சேஷ்டைகளை வெளிக்காட்ட ஆரம்பித்து விடுவான். இதனால் இரவு வணக்கம், சிந்தனை யாவும் தடைப்பட்டுவிடும். எனவே, ஆசைகளை அடக்கி ஆன்மாவை இறைவனுக்கு நெருக்கமாகக் கொண்டுவருதே நோன்பின் உயரிய நோக்கமாகும்.

நோன்பு திறக்கும் நேரத்தில் அளவுக்கதிகமாக உண்பவரதும், குடிப்பவரதும் நோன்பு எவ்வித பெறுமதியுமற்றது. எத்தனையோ நோன்பாளிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நோன்பினால் கிடைக்கும் பலன் பசியும் தாகமுமே ஆகும். (நபிமொழி)

நன்றி : ரமழானின் சிறப்பு  எம்.சி.கலீல்-கல்முனை-05.

## பாலகன் பிறந்திட்டார்!

மார்கழி மாதத்திலே
பனி கொட்டும் இரவினிலே
பாலகன் இயேசு
வந்துதித்தார் இம்மண்ணிலே!
சிலுவையில் இரத்தம் சிந்தி
பாவத்தின் பிடியில் வாழும்
மானிடரை மீட்டிடவே
தாழ்மையின் உருவாய்
ஏழ்மையின் வடிவாய்
அவதரித்த நன்னாளே
நத்தார் தினமாகும்!
இப்போது,
வாழ்த்து மடல்கள்
பட்டாசுகள் புத்தாடைகள்
தின்பண்டங்கள்,
இவைகளின் மத்தியில்
நத்தாரின் உண்மையான
தாற்பரியம், மேன்மை
மறக்கப்பட்டு விடுகின்றது
இல்லையா?
எமது நத்தார்
கொண்டாட்டங்களில்
இயேசுவின் நாமத்துக்கு
மகிமை சேருகிறதா?
அவருடைய நாமம்
மகிமை படும் வண்ணம்
எங்கள்
களியாட்டங்கள்
கொண்டாட்டங்கள்
இருக்குமானால்
அது
எவ்வளவு இனிமையான
சந்தோசமான
நத்தாராயிருக்கும்!
இயேசு எங்கள்
மீது கொண்ட
எல்லையற்ற
அன்பை எண்ணி
மகிழ்ந்து, அவரை
துதித்து,
போற்றுகின்ற
இனிய நத்தாராக
அமையட்டும்
உங்கள்
நத்தார்!

திரு. வேதமாணிக்கம்.

## கவிதைப் போட்டி இல.388



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 30.12.2000

கவிதைப் போட்டி இல.388
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல. 385

### பரிசுக்குரிய கவிதை

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**



### (ச)ம(ா)(தா)னத் திட்டுக்கள்!

சமாதான யுத்தத்தால்
சகலதையுமிழந்து
உடலில் மிஞ்சிய
உயிரை மட்டும்
உடைமையாக்கிக்
கொண்டு
சரணடையச்
சென்ற இடமும்
நடுக்கடல்
திட்டுத்தானா....?

ம. மணியம்-ஹேவாஎட்டை.

### அழிப்பு

உணர்வழித்து
உரிமை அழித்து
உணவையும் அழித்து
உடுத்தும் உடையும் அழித்து
உள்ளது அத்தனையும்
அழித்துவிட்டும்
இப்போது...
முகவரியையும் கிழித்துவிட்டார்கள்!

எம். ஆர். நதீராபானு-மட்கோ.

### இருளை அகற்றிட....

போதுமடா நீ அறியாமை
என்னும் இருளுக்குள் இருந்தது;
எழுந்து நில்லடா இருளை அகற்றடா!
சமுதாயத்தையும் நாட்டையும்
காப்பாற்றடா....!

மு.பி. ;.பாரா-காத்தான்குடி.

### ஏன்?

மானிடரே!
விடியலின் வரவை எதிர்பார்த்துக்
காத்திருக்கிறாயா? அல்லது
சமாதானத்தின் வரவை எதிர்பார்த்து
காத்திருக்கிறாயா?

எஸ். சூட்டி-நீர்கொழும்பு.

### சமாதான மாயை

சமாதானச் சத்தம்
கேட்கின்ற மாதிரி;
தேடிப் பார்க்குது
அகதிகள் கூட்டம்!!!

லி. கிரிசாந்தி-மட்டக்களப்பு.

### தேடல்

இக் கரையிலிருந்து
இளைஞர்கள்-
நீங்கள் இருளதனில்
எதைத் தேடுகிறீர்கள்?

முகமது முஷைராக்-ராஜகிரிய

### இன்றுமட்டும் இன்பம்

வீடு வாசல் இழந்தோம்!
விளை நிலம் இழந்தோம்!
கூடி வாழ வழி இல்லை;
ஓடிப் போக முடியவில்லை!
நாடி விழும் குண்டுக்கு
நாளை நாம் அழிந்தாலும்,
பாடிக்களித்திருப்போம்,
பகலவன் வருமுன்னே!

நா. ஜெயபாலன்-பிபிலை.

### ஆவிகள்!

உடைந்துபோன
வாவியில்...
உருக்குலைந்துபோன
ஆவிகள்!

டி. ஜோர்ஜ்-நுவரெலியா.

### புதுவாழ்வு.....??

காரிருள் சூழ்ந்த இவ்வுலகில்-நாம்
கைவிளக்கிற்றானும் கருமமாற்றலாம்,
போரிருள் சூழ்ந்த நம்நாட்டில்
போரரக்கன் கொடுமை நீங்கி
புதிய வாழ்வு காண்பதெப்போ??

சிவம்-குருக்கள்மடம்.

### புறப்படுங்கள்....

இருட்டில் துயரில்...
இன்னும் எத்தனை காலம்...?
இனியும் வேண்டாம்...
இனிய வாழ்விற்காய்
இன்றே புறப்படுங்கள்...
இல்லையேல் உம் வாழ்வு
இறுதிவரை தொடராது!

சி. மதியழகன்-திக்கம்.

### கறுப்புப்படம்

நாங்களும்
தமிழ் பேசும்
மக்கள் என்பதாலேயா,
இருட்டில் வைத்து
படம் பிடித்தீர்கள்....?

க. அஜந்தகுமார்-
அக்கரைப்பற்று.

### தேடுங்கள்

அஸ்தமனம்
நெருங்கி விட்டது...!
அதற்குள்
மனிதர்களே தேடுங்கள்
எம் விடிவிற்கான
ஆரம்பத்தை....!

லோ. சுதர்மன்-கெங்கல்ல.

### அனுமதி

சுகமாய்ப் பிரசவிக்க வைத்த
இறைவனுக்கு
சுதந்திரமாய் வாழவிட வழி
தெரியவில்லை!
அதனால்தான் என்னவோ...
மறுகரைக்குச் செல்லக் கூட-
மாற்றான்
அனுமதி தேவைப் படுகிறது!

எஸ். கே. ரமேஷ்-பெரிய போரதீவு.

# வாசக[ர்]சாலை

இனிய முரசே!
இலங்கைத் தீவிலே
உருவெடுத்த நீ!
உலகம் சுற்றும் முரசாக
எல்லோர் மனத்தையும்
உனது இடமாக்கி
இன்பத்தில் திளைக்க வைக்கிறாய்.
உனக்குள் அடங்கும்
அனைத்து அம்சங்களும்
அறிவு மிக்கதும் ரசனை உடையதுமாய்
இருக்கின்றன உன்பணி இன்றுபோல்
என்றும் வளர்ச்சி பெற வாழ்த்து
கிறேன்!

கவிதா சாந்தலிங்கம்-ஏறாவூர் 05.

முரசே!

இலக்கிய நயம் நனி சொட்டச் சொட்ட இலக்கிய உலகில் மலரும் மலரே தினமுரசு. உன்னிலிருந்து யான் பெற்ற அறிவியல் அம்சங்களோ அளக்க முடியாதவை. உனக்கு நிகர் நீயே. என்பதை வாராவாரம் விளங்கிக் கொள்கிறேன். நான் பெரிதாக மதிக்கும் எஸ்.டி.எஸ்.சிவநாயகத்தின் வரலாறு சூப்பர். நீ நீடூழி வாழ்க!

எஸ். எல். லொறன்ஸோ-மட்டக்களப்பு.

வியாழனில் விறுவிறுப்பான தொடருடன் வீறு நடை போட்டு வியக்க வைக்கும் வீர 'முரசே' நீ தரும் அத்தனை அம் சங்களும் வெரி வெரி ஃபைன். முரசம் முதல் முடிவு வரை அத்தனை அம்சங்களும் முத்தானவைகள்.

ஏ. எம். நளீம்-வாழைச்சேனை 05.

## கண்ணதாசன் தொடர்

முரசு ஆசிரியருக்கு;

வாரம் தவறாமல் முரசைப் படித்து வருகின்ற ஆயிரமாயிரம் நேயர்களிலே... நானும் ஒருவன். பொதுவாக முரசிலுள்ள எல்லா அம்சங்களுமே மிக அருமை... இதை நான் வெறும் புகழ்ச்சிக்காக மட்டுமே சொல்லவில்லை. அனுபவரீதியாக நானுணர்ந்து... ஆக்கங்களை சுகித்து.... அதன் விளைவாகவே கூறுகின்றேன்....

'கண்ணதாசனின் அனுபவங்களே திரையிசைப் பாடல்களாக வெளிவந்தன...' எனப் பலரும் பொதுவாகச் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறோம் ஆனால்... முரசு தருகின்ற 'தத்துவம் பாடிய முத்தையா' வைப் பார்க்கின்ற போதுதான் அது எவ்வளவு தூரம் யதார்த்தமென்பது எமக்குப் புலப்படுகின்றது.

இப்படி.... ஒரு பல்சுவைத் திரட்டாய் விளங்குவதனாலேயே முரசு இன்னும் முன்நிற்கின்றது... இனியும் முன்நிற்கும்!!!

எனவே உங்களிடம் நான் பணிவாக வேண்டிக் கொள்வது; தயவு செய்து, கண்ணதாசன் தொடரை இடைநிறுத்தி, எங்கள் ஏக்கங்களை சம்பாதித்துக் கொள்ளாதீர்களென்பதே...

கலையன்பன் நிலாம்-தாராபுரம்.

அன்பின் முரசே...!

அனைவரையும் ஆனந்தப்படுத்தும் வார இதழாய் வலம் வரும் தினமுரசே! உனக்கு எனது வாழ்த்துக்கள். உன்னை நேசிப்பதிலும், வாசிப்பதிலும் பல்லாயிரக் கணக்கான வாசகர்களில் நானும் ஒருவன். பார்த்துப் பார்த்து கண்கள் பூத்திருப்பேன். நீ எப்போது வருவாயென்று. நீ வந்ததும், உனது அம்சங்களில் கவிதை போட்டி, ஆன்மீகம், அரசியல் தொடர், பாப்பா முரசு, தேன் கிண்ணம், என்பனவற்றை விசுவாசமாக வாசிப்பேன். மேலும் மேலும் உனது பணி தொடர எனது இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

வி. ஜீவராசா-அக்கரைப்பற்று 07.


உண்மையின் ஜன்னலே முரசே!

அலசுவது இராஜதந்திரி காலத்திற்கு ஏற்ற சிறப்பான கட்டுரை. நரனின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' மிகமிகச் சிறப்பாக உள்ளது. அதிரடியாரின் நுட்பமான செய்திகள் என்றும் போல சிறப்பாகவே உள்ளன. குத்தியனின் கட்டுரை நகைச்சுவை ஊடுருவும் சிறப்பான கட்டுரைத்தொடர்.

சிந்தியாவின் பதில்களில் ஒவ்வொரு கேள்வி பதில்களுக்கிடையில் போடும் படங்களைக் கூட ரசிக்கக் கூடியதாக இருக்கின்றன. மற்றும் அனைத்து அம்சங்களும் சிறப்பாக உள்ளன.

திறமையானவர்களைக் கொண்டிருக்கும் தினமுரசே என்றும் வாழ்க! வாழ்க!

க. சத்தியறாஜி-அளவெட்டி தெற்கு.




அறிவிற்கினிய செய்திகளை அள்ளி வரும் தினமுரசு வாரமலரில் இடம் பெறும் ஒவ்வொரு அம்சங்களும் சிந்தையைக் கவர்கின்றன. அரசியல் கட்டுரைகள் நாட்டு நிலவரங்களையும், அவ்வப்போது வெளிநாட்டு வாசகர்கள் மனதை மட்டுமன்றி அனைவரையும் முரசின் பக்கம் ஈர்க்கின்றது என்று கூறினால் மிகையாகாது.

மேலும், 'அரசியல்', 'சிறுகதை', 'தொடர் கதை', விளையாட்டு, சினிமா, சிந்தியா பதில்கள், எக்ஸ்ரே ரிப்போர்ட், வெளிநாட்டு செய்திகள் போன்ற இன்னோரன்ன அம்சங்களும் முரசை மெருகூட்டுகின்றன.

வாழ்க உனது தொண்டு!

ஏ. சீ. எம். முஸம்மில்-குளியாப்பிட்டிய.

என் அபிமான தினமுரசே!
அதிசயத் தகவல்களை
சூடுகுறையாமல் அள்ளித்தரும்
தினமுரசுக்கு எனது பலகோடி
வாழ்த்துக்கள்.
கே. அக்கீத்-
செட்டிக்குளம்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல்(Fax):- 074-513266

# இனப்பிரச்சனைத் தீர்வுக்கு இணக்கப்பாடு

## ஏற்படுவது குறித்து நோர்வே மகிழ்ச்சி!

இலங்கை அரசாங்கத் தரப்பும் தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசியல் ரீதியான அமைதிப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதற்கு விருப்பம் தெரிவித்திருப்பது குறித்து நோர்வே அரசாங்கம் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தன்று அவ்வியக்கத்தின் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது இயக்கம் தயாராக இருப்பதாக அறிவித்தார். கடந்தவாரம் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அவர்களும், அதைத்தொடர்ந்து பாரிஸ் நகரில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிக்காவும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்.

எனவே இலங்கையில் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் இரு தரப்பினருக்குமிடையே இருந்து அமைதிப் பேச்சு வார்த்தைக்கு விருப்பம் தெரிவிக்கப்பட்டிருப்பது தொடர்பாக நோர்வே நாட்டின் இராஜாங்க அமைச்சர் ரேமண்ட் ஜோஹான்சன் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். அவர் இது குறித்து கருத்து வெளியிடுகையில், இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்காக பேச்சு வார்த்தைகளுக்கு ஏற்ற நல்ல சாதகமான அறிகுறிகள் வெளியாகியிருப்பது தமது நாட்டின் சமரச முயற்சிகளுக்கு உற்சாகமளிப்பதாகத் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்தச் சந்தர்ப்பத்தை நோர்வே நாடு உரிய வகையில் பயன் படுத்தி, தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொள்ள தீவிரமாக இயங்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் நத்தார் கொண்டாட்டங்களும் அதனைத் தொடர்ந்து புதுவருடக் கொண்டாட்டங்களும் அடுத்தடுத்து வருவதால், புதிய ஆண்டின் நடுப்பகுதியிலேயே நோர்வே தமது சமரச முயற்சிகளை மீளவும் ஆரம்பிக்கலாம் எனத் தெரியவருகின்றது.

இவ்வார முற்பகுதியில் பாரிஸ் நகரில் நடந்த இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் ஜனாதிபதி சந்திரிக்கா தமது அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கு தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். இதைத் தவிர தமிழீழ விடுதலைப்புலிகளும் சர்வதேச சமூகத்திடம் இலங்கை இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகளுக்கு உதவ முன்வரவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இசைவேள்வி

கொழும்புக் கம்பன் கழகம் வழக்கம் போல் இவ்வாண்டும் ஸ்ரீ இராம நாம கானாமிர்த இசைவேள்வியை நடத்துவதற்கு விரிவான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் இம்மாதம் 24ம் திகதியன்று தொடங்கவிருக்கும் இவ்விசை வேள்வி 31ம் திகதி வரை மாலை வேளைகளில் நடைபெறவிருக்கின்றது. இந்நிகழ்ச்சிகளில் உள்ளூர் கலைஞர்களுடன் தமிழ்நாட்டைச் சேர்ந்த இசை விற்பன்னர்களும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

தமிழ்நாட்டின் பிரபல கர்நாடக இசை விற்பன்னர் மதுரை ரி.என்.சேஷ கோபாலன் திருமதி.காயத்திரி கிரிஷ் ஆகியோரும் நாதஸ்வர வித்துவான்களான மாம்பலம் எம்.கே.எஸ்.சிவா-நடராஜன் குழுவினரும் பங்கு பற்றி சிறப்பிக்கவிருக்கின்றனர்.

## கிழக்கில் புதிய முகாம்கள்!

கிழக்கில் தமது பாதுகாப்பு நிலைகளைப் படையினர் பலப்படுத்தி வருகின்றனர். சில இடங்களில் புதிய இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு-கொழும்பு வீதியில் களுவன்கேணிச் சந்தியில் படையினர் புதிதாக முகாம் அமைத்துப் பலப்படுத்தி வருகின்றனர்.

கிழக்குக் கடலில் பயணம் செய்யும் புலிகள் களுவன்கேணிக் கடற்கரையில் தரையிறங்கி, களுவன்கேணி வீதிக்கு ஊடாகவே தமது கட்டுப்பாட்டிலுள்ள பதுளை வீதிக்குப் பயணம் செய்கின்றனர் என்ற தகவலை அடுத்தே படையினர் சந்தியில் புதிய முகாம் அமைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## திருமலைத் தெருக்களில் அலைந்து திரியும் பெண்கள்?

உறவினர்களால் கைவிடப்பட்ட மனோநிலை பாதிக்கப்பட்ட பெண்கள் சிலர் திருகோணமலை நகர வீதிகளில் நடமாடி வருகிறார்கள். இவர்களுள் 'ரோஸி' என்று இளைஞர்களால் அழைக்கப்படும் நடுத்தர வயதுப் பெண்ணும் 'காத்தாயி' என்று செல்லமாக அழைக்கப்படும் வயோதிபப் பெண்ணும் அனைவருக்கும் தெரிந்த பெண்களாவர்.

இவர்களால் மக்களுக்கு எவ்வித இடைஞ்சல்களும் இல்லாத போதிலும், சில சமயங்களில் இவர்களுடைய உடை பெண்களைத் தலைகுனிய வைக்கும் விதமாக அமைகிறது. தம் நிலையை உணர முடியாத இவர்கள் மிக மோசமாக உடை தரித்த வண்ணம் மக்கள் கூடிநிற்கும் இடங்களில் காட்சியளிப்பதால், அவ்விடத்திலுள்ள மனிதர்களின் நிலைமை தர்மசங்கடமாகிவிடுகிறது.

இவர்கள் இருவருக்கும் திருகோணமலையில் உறவினர்கள் இருக்கின்ற போதிலும், எவரும் இவர்களைப் பராமரிப்பதாக இல்லை. பொது ஸ்தாபனங்கள் கூட இவர்களைக் கண்டு கொள்வதாக இல்லை.

பெண்கள் விடயத்தில் அக்கறை கொள்வதாகக் கூறும் அமைப்புகளாவது இவர்களுக்கு உதவி, பெண்களின் தலைகுனிவைக் களைய மாட்டார்களா?

## அம்பாறை தமிழ் மகா வித்தியாலயம் மூடப்படும் அபாயம்

(காரைதீவு நிருபர்)

அம்பாறை வலயத்திலுள்ள ஒரேயொரு தமிழ்ப் பாடசாலையான அம்பாறை தமிழ் மகா வித்தியாலயம் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது.

1952 ஆகஸ்ட் 01ம் திகதி ஆரம்பமான இப் பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரை வகுப்புக்கள் உள்ளன, ஆனால் ஆக இரண்டே இரண்டு ஆசிரியர்களே உள்ளனர்.

ஒருவர் அதிபர், அவர் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர். மற்றவர் ஆரம்பக்கல்வி ஆசிரியை. இவர் முஸ்லிம் சமுகத்தைச் சேர்ந்தவர். இதைவிட ஒரு தொண்டர் ஆசிரியை பணியாற்றுகிறார். இவர் கல்முனையிலிருந்து தினமும் பயணம் செய்து வருபவராவார்.

இங்கு தமிழ் மாணவர்களே கல்வி பயின்று வருகின்றனர். ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்கள் பாடசாலைக்கு வர மறுக்கிறார்கள். இவ்வாண்டில் மட்டும் 100 மாணவர்கள் பாடசாலையிலிருந்து இடை விலகியுள்ளார்கள் என பெற்றார் ஆசிரியர் சங்க செயலாளர் சி.தனபாலசிங்கம் முறையிட்டுள்ளார். இங்கு ஏலவே 33 ஆசிரியர்கள் கடமையாற்றியிருந்தனரென்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் நிவாரணம் பெறுவோரின் வருமானம் பற்றிப் பரிசீலனை

யாழ்குடா நாட்டில் நிவாரண உதவிகளைப் பெற்று வரும் குடும்பங்களைப் பற்றி பரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. நிவாரணம் பெறும் எந்தவொரு குடும்பத்திற்கும் ஏதாவதொரு வகையில் ரூபா. 750க்கு மேல் வருமானம் கிடைக்குமானால் அத்தகைய குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது பற்றி மறுபரிசீலனை செய்யப்படுமென்று தெரியவருகிறது.

மீன்பிடி வள்ளங்கள், படகுகள் சொந்தமாக வைத்து தொழில் செய்பவர்கள்; தொலைத்தொடர்பு உரிமையாளர்கள்; வீடுகளில் தொலைபேசி இணைப்பை பெற்றுள்ளவர்கள்; வெளிநாட்டிலிருந்து வருமானம் பெறுபவர்கள்; வாகனம் வைத்திருப்பவர்கள்; வர்த்தக நிலையங்களை நடத்துபவர்கள்; மாதாந்த வருமானம் பெறும் தனியார்துறை ஊழியர்கள், சமயா சமய அரச ஊழியர்கள் உட்பட அரசாங்க ஊழியர்கள்; விவசாயம் மூலம் வருமானம் பெறுபவர்கள் ஆகியோர் நிவாரணம் பெறும் வாய்ப்புகளை இழக்க வேண்டி நேரலாம்.

சாதாரணமாக உயர் வருமானம் பெறுவோர் பலர், வசதி குறைந்தவர்களுக்கான நிவாரணத்தில் பங்கெடுப்பதைத் தவிர்க்கும் முகமாகவே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகத் தெரிகிறது.

## குடும்பத்தினர் படம் தொங்கவிடப்படவேண்டும்! மலையகத்தில் புதிய கெடுபிடிகள்!

(நமது நிருபர்)

மலையகத்தோட்டப் புறங்களில் குறிப்பாக கண்டிப்பிரதேசத்தில் புதிய பாதுகாப்பு விதிகளைப் பொலிஸார் அமுல் செய்து வருவதாக அறிய வருகிறது.

தமிழ்த் தோட்டப் புறங்களில் உள்ள குடியிருப்பாளர்கள் தங்கள் குடும்ப, சகிதம் படம் பிடித்து விவரங்களுடன் அதை வீட்டின் முன்புறம் தொங்க விடவேண்டும். அவற்றின் பிரதிகளில் ஒன்றைப் பொலிஸ் நிலையத்திற்கும், மற்றொன்றை தாங்கள் வசிக்கும் தோட்டத் துரையிடமும் கையளிக்க வேண்டுமென்று கேட்கப் பட்டுள்ளனராம்.

இதுவரை வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் அனுபவித்து வந்த நெருக்கடிகளும், கெடுபிடிகளும் மலையக மக்களையும் பாதிக்கத் தொடங்கியிருக்கின்றன.

ஏற்கெனவே தோட்ட மக்கள் பல்வேறு வாழ்க்கைப் போராட்டங்களை அனுபவித்து வருகிறார்கள். அத்துடன் பாதுகாப்புக் கெடுபிடிகளும் அவர்கள் மீது அதிகரித்தால் சொல்லொணாத் துயரை எதிர்கொள்ள வேண்டி வரும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

மலையகத்தில் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காகவும், புலிகளின் சதிவலைக்குள் சிக்க மலையகத் தோட்டப் புறத் தமிழ் மக்களை அழிவுப் பாதையிலிருந்து தடுத்துக் கொள்ளவதற்காகவுமே இத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாகப் பொலிஸார் காரணம் தெரிவிக்கின்றனர்.

## நோர்வேயின் மத்தியஸ்தத்தை தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்கிறது

"நாட்டில் நீண்ட காலமாக புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வினைக் காணுமுகமாக நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்தை வரவேற்று அரசின் நிலைப்பாட்டை நாம் பெருமனதுடன் வரவேற்கிறோம்" என்று கல்வியமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவிடம் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் நேரில் தெரிவித்துள்ளது.

இசுருபாயவில் நடைபெற்ற சந்திப்பில் சங்கச் செயலாளர் த.மகாசிவம் இதனைக் கூறினார். பதிலுக்கு கல்வியமைச்சர் புன்னகையுடன் நன்றி தெரிவித்து, இந்த யுத்தத்தால் நாடு-குறிப்பாக கல்வி உலகம் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதையும் குறிப்பிட்டார்.

அத்தோடு இலங்கையின் கல்வியை மேலும் மேம்படுத்த எடுக்கும் சகல உறுதியான நடவடிக்கைகளுக்கும் தமது சங்கம் பரிபூரண ஆதரவினை நல்குமென மகாசிவம் மேலும் குறிப்பிட்டார்.

வன்னிப் பிரிவிலுள்ள முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு ஆட்டோ வாகனம் வழங்கியதைப் போன்று துணுக்காய் வலயத்திற்கும் ஆட்டோ வழங்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் உறுதியளித்தார்.

## மட்டக்களப்பில் புலிகளின் எச்சரிக்கையால் புதிய சிக்கல்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினரின் முகாம்களை அண்டி வாழும் பொதுமக்கள் அப்பகுதிகளை விட்டு அகன்று விட வேண்டுமென்று சமீபத்தில் புலிகள் எச்சரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே.

இந்த எச்சரிக்கையின் பின்னர் படையினர் உஷாரடைந்துள்ளனர். முகாம்கள் பலப்படுத்தப்படுவதோடு படைப் பலமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகள் விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளன என்பது தெரிந்ததே.

இதனிடையே புலிகளின் எச்சரிக்கைக்குக் கட்டுப்பட்டு இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளிலிருந்து பொதுமக்கள் எவராவது தமது வீடுகளை விட்டு வெளியேறுகிறார்களா என்பது பற்றி படையினர் மிக உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர்.

தமது எச்சரிக்கைக்குக் கவனமெடுக்காத பொதுமக்களைப் பற்றிப் புலிகளும் கவனித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

எனினும் புலிகளின் எச்சரிக்கையின் பின் படையினரின் முகாம்களை அண்டி வாழும் பொதுமக்கள் எவரும் இதுவரை வெளியேறியதாகத் தகவலில்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

சென்ற ஆண்டும் புலிகள் இவ்வாறான எச்சரிக்கையைப் பொதுமக்களுக்கு விடுத்திருந்தனர் என்பதும், ஆனால் பொதுமக்கள் ஒருவரும் வெளியேறவில்லை என்பதுடன் அசம்பாவிதங்கள் எதுவும் நிகழவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பலத்த மழை பெய்து வரும் இந்த மார்கழிப் பருவ மழைக் காலத்தில் தமது இருப்பிடங்களை விட்டு அகதிகளாக எங்கு வெளியேறுவது என்று பொதுமக்கள் கேள்வி எழுப்புகிறார்கள். இரு பக்கப் பலப் பரீட்சையில் பொதுமக்கள் சிக்கித் தவிக்கிறார்கள்.

## மலையகத் தோட்டங்களில் மாயமாய் மறையும் சமூர்த்தி அபிவிருத்தி நிதி

(நமது நிருபர்)

மலையகத் தமிழ்த் தோட்டப் புறங்களில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் (பிரதேச செயலாளர்) பிரிவிற்கும் சுமார் இரண்டரை இலட்ச ரூபாய் சமூர்த்தி அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கென ஒதுக்கப்படுகிறது.

ஆனால் தமிழ்த் தோட்டப் புறங்களுக்கென்று வருடத்தில் ஒரேயொரு தடவை கிடைக்கும் இந்த நிதிதானும் அப்பகுதி அபிவிருத்திக்குச் செலவிடப்படாமல், மறைமுகமாக பெரும்பான்மை சிங்களப் பிரதேச அபிவிருத்திக்குச் செலவிடப்படுவது தெரிய வந்திருக்கிறது.

சிங்களப் பகுதிகளுக்கென்று விசேட அபிவிருத்தித் திட்டமுள்ளது. அது தவிர கால வரையறையில்லாது அவ்வப்போது சமூர்த்தி அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழும் ரூபா 4 இலட்சம் வரையிலான நிதி ஒதுக்கப்படுகிறது. இவை இருந்தும் வருடத்தில் ஒரு முறை தமிழ்த் தோட்டப்புறங்களுக்குக் கிடைக்கும் நிதியைத் தானும் விட்டு வைப்பதாயில்லை. அவற்றைச் சந்தர்ப்பம் பார்த்து சிங்களப் பகுதிகளுக்கு மாயமாய் மாற்றி விடுகிறார்கள்.

தமிழ்த் தோட்டப் புற சமூர்த்தி அபிவிருத்திக் கருத்திட்ட நிதி அந்தப் பகுதிகளுக்குரியவைதான் என்று நன்கு தெரிந்தும், அதனுடன் சம்பந்தப்பட்ட சமூர்த்தி அபிவிருத்தி முகாமையாளர், தொழிநுட்ப உத்தியோகத்தர் உதவி அரச அதிபர் ஆகியோரே அந்நிதியை சிங்களப் பகுதிகளுக்கு வழங்க அனுமதித்திருப்பது திட்டமிட்ட புறக்கணிப்பாகும், என்று விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர ஏற்கெனவே சமூர்த்தி நிவாரணம் பெறத் தகுதியான தோட்டப் புற தமிழ் மக்களுக்குரிய சமூர்த்தி உணவு முத்திரைகள் இன்னமும் வழங்கப்படாதிருக்கிறது என்று மலையக அதிகாரி ஒருவர் 'முரசு'க்குத் தெரிவித்தார்.

இந்த விடயங்கள் குறித்து மலையகத் தமிழ் அரசியல்வாதிகள் உடனடிக் கவனமெடுக்க வேண்டுமென்று அப்பகுதி நலன் விரும்பிகள் கருதுகின்றனர்.

மலையகத்தின் தமிழ்ப் பகுதிகளுக்கு சிங்கள சமூர்த்தி உத்தியோகத்தர்களை நியமிப்பதும், தோட்ட மக்களுக்கு சமூர்த்தி உணவு முத்திரைகள் வழங்கப் படாதிருப்பதும், சமூர்த்தி கருத்திட்ட அபிவிருத்தி நிதிகளை சிங்களப் பகுதிகளுக்குச் செலவிடுவதும், திட்டமிட்ட புறக்கணிப்புத் தான் என்று அந்த அதிகாரி கவலை வெளியிட்டுள்ளார்.

## அப்பாவி இளைஞர்கள் பலர் காரணமின்றி கொல்லப்படுகின்றனர்

நிலாவெளி கோபாலபுரத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் புதன்கிழமை (13.12.2000) இரவு கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மகாலிங்கம் தாமிரன் (21 வயது) சண்முகராசா ஸ்வர்ணஹாசன் (21 வயது) ஆகிய இருவருமே திருகோணமலையிலிருந்து, கோபாலபுரம் நோக்கிச் செல்கையில் 7ம் கட்டையில் வைத்துச் சுடப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் இருவரது சடலங்களும் 7ம் கட்டையிலுள்ள குளத்தருகில் காணப்பட்டதாக ஊர்வாசிகள் தெரிவிக்கிறார்கள்.

இரண்டு இளைஞர்களும் தோட்ட வேலை செய்பவர்கள். தாமிரன் குடும்பத்தில் மூத்த பிள்ளை. தம்பியும் இரு தங்கையரும் இருக்கிறார்கள். ஸ்வர்ணஹாசன் தந்தையை இழந்தவர். தாயையும், தமக்கையையும் இவர்தான் காப்பாற்றி வருகின்றார்.

புதன் கிழமை காலை திருகோணமலை நகருக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரும் தமது காரியங்களை முடித்துக் கொண்டு மாலை 6.30 மணியளவில் வீடு நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த வேளையில், ஆளரவமற்ற பகுதியில் வைத்தே கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

சம்பவம் நடந்த இடத்துக்கருகே உள்ள ஊர்மக்கள் இரவு பதினொரு மணியளவில் வெடிச்சத்தம் கேட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்த 22ம் திகதி கோபாலபுரத்தைச் சேர்ந்த பிரசாந்தன், ஜெயகாந்தன், விஜயகுமார், ஜெயப்பிரதாப் ஆகிய நான்கு இளைஞர்கள் மீன்பிடிக்கச் சென்ற வேளை கடற்படையினரால் சுடப்பட்டதும் கோபாலரபுர மக்கள் திரண்டு கடற்படையினருக்கு எதிராக வீதிமறிப்புப் போராட்டம் செய்ததும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

## ஓட்டமாவடியில் ஒன்பது இளைஞர்கள் கடத்தப்பட்டனர்!

மட்டக்களப்பு-ஓட்டமாவடியில் ஒன்பது முஸ்லிம் இளைஞர்கள் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 17ம் திகதி இரவு எட்டரை மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. வாவிக்கு ஊடாக தோணி மூலம் வந்திறங்கிய புலிகள், அவ்விடத்தில் நின்றிருந்த ஒன்பது இளைஞர்களையும் மடக்கிப் பிடித்து தோணியில் ஏற்றி மறுகரைக்குக் கொண்டு சென்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

குறித்த இளைஞர்கள் கடத்தப்பட்டதற்கு முக்கியமான காரணம் எதுவுமிருக்கவில்லை. இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை முடித்து விட்டு, கதைத்துக் கொண்டிருந்த இளைஞர்களே இவ்வாறு பிடித்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

புனித றமழான் நோன்பு காலத்தில் இச்சம்பவம் இடம் பெற்றதால், சிறிது பரபரப்பு ஏற்பட்டபோதும், பின்னர் நிலைமை சுமுகமானது.

ஓட்டமாவடிப் பகுதியைச் சேர்ந்த முஸ்லிம் விவசாயிகள், வியாபாரிகள், தனவந்தர்கள், மீனவர்கள் ஆகியோரிடமிருந்து புலிகள் அவ்வப்போது நிதி வசூல் மற்றும் வேறுபல உதவிகளையும் பெற்றுவருகின்றனர். அவ்வாறான போதும் பதற்றத்தை உண்டாக்கக் கூடிய இவ்வாறான வேலைகளில் ஈடுபடுவது கவலைதரும் விடயம் என தமிழ்-முஸ்லிம் சமூகநல விரும்பிகள் தெரிவிக்கிறார்கள்.

பல்வேறுதரப்பிலிருந்து எடுக்கப்பட்ட முயற்சிகளின் பின்னர், கடத்தப்பட்டவர்கள் 08 பேர் அன்றிரவு புலிகளால் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து

**டெ**ம்பள்ஸ் டோ றொசால்லவைச் சேர்ந்த திரு-திருமதி டி.பரமசிவம் தம்பதிகளின் செல்வப் புதல்வி திலானி தனது முதலாவது பிறந்த தினத்தை 06.12.2000 அன்று தனதில்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா-அம்மா, அண்ணா ,அக்கா, அண்ணிமார்', அத்தைமா, மாமா-மாமி, பாட்டி, தாத்தா, மச்சான் மற்றும் வங்ஓயா பாட்டி-தாத்தா, அட்டன் கண்ணா' நுவரெலியா அப்பா-அம்மா, டயகம பாட்டி அம்மா, அக்கா' கொழும்பில் வசிக்கும் அக்கா ஜி.விஜயலெச்சுமி உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.



**செல்வி திலானி / 06.12.2000**



உலகப் புகழ்பெற்ற

# எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி




**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

**SINGHA HOLDINGS (PVT) LTD**
14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984


## குணசேகராவின் புதிய கட்சி!

**சி**ஹல உறுமய கட்சியைத் தோற்றுவித்த பிரபல சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகரா அக்கட்சியிலிருந்து வெளியேறியமை தெரிந்ததே. அவருடன் அக்கட்சியில் இணைந்திருந்த வேறு பலரும் வெளியேறினர்.

இவ்வாறு வெளியேறியவர்கள் தென்னிலங்கையிலுள்ள பல்வேறு இயக்கங்களுடன் இணைந்து புதிய அரசியல் கட்சியொன்றைத் தோற்றுவிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். இப்புதிய கட்சிக்கான அமைப்புக் கூட்டம் இம்மாத நத்தார் விடுமுறைக்காலத்தில் நடத்தப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

புதிய கட்சிக்கு 'சிங்களத் தேசிய காங்கிரஸ்' என்று பெயர் சூட்டப் போவதாகத் தெரிகிறது. சிஹல உறுமய கட்சியின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகவே, சிங்கள தேசிய காங்கிரஸின் கொள்கைகளும் இருக்குமென்றும் வேறுபல முக்கியமான அம்சங்களும் இதில் சேர்க்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

சிங்கள தேசிய காங்கிரஸின் தொடக்கமும் மாநாடும் ஜனவரி 7ம் திகதியன்று கொழும்பில் நடைபெறுமென்றும் கூறப்படுகிறது.

## சிஹல உறுமயவில் மற்றுமொரு பிளவு!

**ஆ**ரம்பித்து சில நாட்களுக்குள்ளே சின்னாப் பின்னப்பட்ட சிஹல உறுமய கட்சியில் மற்றுமொரு பிளவு ஏற்பட்டிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காக ஏற்பட்ட இழுபறியில் அக்கட்சியின் அமைப்பாளர் எஸ்.எல்.குணசேகராவும் மற்றும் சிலரும் கட்சியை விட்டு வெளியேறினர்.


இப்பொழுது கட்சியின் பணத்தைக் கையாடினார்கள் என்ற குற்றச்சாட்டு இக் கட்சியின் சில உறுப்பினர்கள் மீது சுமத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஐரோப்பாவிலும் ஏனைய பல நாடுகளிலும் வாழும் சிங்களப் பிரமுகர்களிடம் 'சிஹல உறுமய' கட்சியின் வளர்ச்சிக்காக ஏராளமான பணம் வசூலிக்கப்பட்டு இங்கு அனுப்பி வைக்கப்பட்டதாம்.

ஆனால் அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட பணம் யாரிடம் போய் சேர்ந்துள்ளது என்று தெரியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இக்கட்சியின் தலைவர்கள் என்று கருதப்படுவோர் ஆளையாள் குற்றஞ்சாட்டி பொருதி வருவதாக அறியப்படுகிறது.


## 1வது பிறந்த நாள் வாழ்த்து

செல்வி • மதுமிதா

26 ❖ 12 ❖ 2000



**சு**விஸ் லொசானில் வசிக்கும் கமலேஸ்வரன்-வனஜா தம்பதியினரின் செல்வப்புதல்வி மதுமிதா தனது 1வது பிறந்த நாளை 26.12.2000 அன்று சுவிஸில் தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார். மதுமிதாவை அன்பு அப்பா-அம்மா, கனடாவில் வசிக்கும் அம்மம்மா கொழும்பில் வசிக்கும் பெரியப்பா பெரியம்மா, கனடாவில் வசிக்கும் அப்பப்பா-அம்மம்மா, பெரியப்பா-பெரியம்மா, சித்தப்பாமார், சின்னம்மாமார், மாமா, மாமி, கிருஷாந்தன், கீர்த்தனா, சிந்துஜா, சுதர்ஷன், தினோத், வினித், மாதங்கி, சுபாங்கி, ஹரிஸ், விசாகன் ஹரிணி, சுவிஸில் வசிக்கும் அண்ணன்மார் அன்ரி குடும்பம் மற்றும் யாழ்ப்பாணத்தில் இருக்கும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் மதுமிதாவை நல்லூர் முருகன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.


## இளம் தாயின் உயிர் காக்க உதவுங்கள்



**சா**வகச்சேரி மீசாலை பங்களாவீதியில் வசித்து தற்போது இடம்பெயர்ந்துள்ள திருமதி சுபாசினி நகுலேந்திரன் ஓர் இருதய நோயாளி. ஒரு குழந்தைக்கு தாயாரான இவருக்குப் பலவகைச் சிகிச்சை செய்யப் பட்டபோதும் 'இதயமாற்று சிகிச்சை, அவசியம் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன் பிரகாரம். 'சென்னை மெடிக்கல் மிஷன்" வைத்தியசாலையில் இதயமாற்று சிகிச்சை செய்ய ஏற்பாடாகியுள்ளது. இந்தச் சிகிச்சைக்கு இலங்கைப் பணத்தில் எட்டு இலட்சம் ரூபா தேவைப்படுகின்றது. ஆனால் நோயாளியின் குடும்பப் பொருளாதார நிலமை அதற்கு உகந்ததாக இல்லை இந்த இளந்தாயின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் உதவிநிதி ஒன்றை ஆரம்பித்துள்ளது.

கருணை உள்ளம் கொண்டவர்களின் உதவியினால் இதுவரை எமக்கு (332413-22) ரூபாய் சேர்ந்துள்ளது. இந்த நிதிக்கு பணம் சேகரித்து உதவுவதற்கு யாழ். பல்கலைக்கழக மாணவாகளும் வடமராட்சி, தென்மராட்சி, பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களும் இன்னும் பல பரோபதாரிகளும் முன் வந்துள்ளனர். ஒரு தாயின் உயிரைக்காப்பாற்றுவதற்கு உங்களால் இயன்ற நிதிவழங்கி உதவுங்கள். நீங்கள் அன்பளிப்புச்செய்யும் நிதியை இலங்கை வங்கியின் சாவகச்சேரிக்கிளையில் (தற்பொழுது) பருத்தித்துறை யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது. இதற்கென தொடங்கப்பட்டுள்ள 16524 கணக்கு இலக்கத்திற்கு அல்லது கொழும்பு வெள்ளவத்தை கிளை இலங்கை வங்கி 10023-2174816 என்ற கணக்கு இலக்கத்திற்கு செலுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தர்மம் தலைகாக்கும். ஒரு குழந்தையின் தாய்க்கு உதவுங்கள். இயன்றதை அனுப்புனுங்கள். சிறுதுளி பெரு வெள்ளமாகிவிடுமல்லவா!


சுவிற்ஸர்லாந்தில் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மற்றும் அனைத்து சஞ்சிகைகள், ஒரிஜினல் வீடியோ கொப்பிகள் வாடகைக்கும்-விற்பனைக்கும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்-

**Tarmu Trading**
Aarauer Strasse-76
4600-Olten- Swiss.
T.P.& Fax : 062-2971070 Natel :- 079-2771573


## விளம்பரப் பகுதி


சுவிஸ் லவுசான் மாநகரில் உங்கள் கனவுகள் நனவாகிவிட

**என்.ரி.றேட் விண்ட்-N.T.TRADE WIND**

(Jewellery & Garments)

காலத்துக்கேற்ற வகையில் நவீன வண்ணங்களினாலான அசல் 22 கரட் தங்க நகைகளா? மனங்கவரத்தக்க புத்தம் புதிய வடிவங்களில் சிறுவர் சிறுமியர், பெண்கள், ஆண்களுக்கான ஆடைகளா? ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.

ch.Des Rosiers -3
1004-Lausanne
Switzerland.
Tel: 021-6462025 - 078-6231639

**கணினி வகுப்பு** பாலர் வகுப்பிலிருந்து தரம் மூன்று வரையான மாணவர்களுக்கு Pentium iii கணினியில் பயிற்சியளிக்கப்படும்.
வயதெல்லை : நான்கிலிருந்து எட்டு வரை கட்டணம் : மணித்தியாலத்திற்கு ரூ 125/=

**Tulliyam Data Managements**
31A, Galpotha Street, Colombo 13. Sri Lanka Tp. 074-613486, 078-686996

**K.N.S.SHOPPING CENTRE &TAKEAWAY-SWISS.**


மளிகைப் பொருட்கள், ஒறிஜினல் வீடியோ, ஓடியோ, கசற்றுக்கள் COMPACT டிஷ்குகள், வீடியோ C.Dகள், 22 கரட்டில் தங்க நகைகள், பத்திரிகை, சஞ்சிகைகள் இலங்கை, இந்திய, சுவிஸ் உணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் இலகுவாக நீங்கள் பெற்றுக்கொள்ள


K.N.S.SHOPPING CENTRE
K.N.SUKUMARAN
ANKER-STR-16
8004 Zurich Switzerland.
T.P 01-2427111 FAX 01-2427144

வாரத்தில் 7 நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 12 மணிவரை (ஞாயிறு உட்பட) கடை திறந்திருக்கும்.



## மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**
Tel-466620, 466820 **தேவைகளுக்கு:-**

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



## மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P. ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஒடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலைமிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் டிசம்பர் 17 முதல் 23 திகதி வரை**

(செல்டெல் இலக்கம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-722841, 074-715546 செல்டெல்: 072-664867

**கல்முனையில் ஜனவரி 06, 07 திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் ஜனவரி 09, 10 திகதிகளில்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
NO.51/5. Koolavady Road,
Batticaloa. SRI LANKA.


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**இராமு.வினாசித்தம்பி**
(யூனியன் தொழிலாளி, யாழ் டவுன்)
**மலர்வு:** 04.03.1923
**உதிர்வு:** 22.11.2000

**பொ**ன்னாலையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொட்டடியைப் வதிவிடமாகவும் கொண்ட திரு. இராமு வினாசித்தம்பி அவர்கள் 2000.11.22 அன்று இல. 120 விவேகானந்த மேடு, கொழும்பு என்னும் இடத்தில் காலமானார். இவர் காலஞ்சென்ற இராமு-நாகி தம்பதிகளின் மகனும் நாகம்மாவின் அன்புக் கணவனும், தர்மகுலசிங்கம் (கனடா) கலாறஞ்சனி, பவானி, ஈசன் குடும்பம் (சுவிஸ்) காஞ்சனா ஆகியோரின் தந்தையும். அகிலா, ஜீவானந்தம், வரதராஜா, (சுவிஸ்) ஐங்கரநாதன் (ஃபிரான்ஸ்) ஆகியோரின் மாமனும். கீர்த்தனன், பிரகாஷ், விதூஷா, அபிநயா, வியாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு பாட்டனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 2000.11.22 அன்று கொழும்பில் நிறைவுற்றது. அவர்களின் மரணச்சடங்குகளில் கலந்து அனுதாபம் தெரிவித்து, எமக்கு வேண்டிய உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம்.

தகவல்: செல்லத்தம்பி, கண்மணி (கொழும்பு)
சேனாதிராஜா (திருகோணமலை)

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# இந்தியாவின் கண்களை உறுத்துகின்ற முள் எது?

இந்தியா!
எங்கள் அயல் நாடு.
மிகப் பெரிய நாடு.
வலிமை மிக்க நாடு.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தலைமைப் பாத்திரம் வகிக்கும் நாடு.

தமிழ் நாட்டில் 5 கோடித் தமிழர்களைக் கொண்டிருந்து இலங்கைத் தமிழர்களோடு நெருங்கிய கலாசார பிணைப்புகளையும் கொண்டிருக்கும் நாடு.

இந்த யதார்த்தங்களின் மத்தியில் தான் இலங்கையின் இனப்பிரச்சனையில் அது கொண்டிருக்கும் ஈடுபாடும் மதிப்பிடப் படவேண்டும்.

இந்தியா என்ற ஒரு நாடு எமருகில் இல்லாதிருந்தால், இலங்கைத் தமிழர்களின் நிலைமையும் இலங்கையில் இனப்பிரச்சனையைக் கையாண்டிருக்கும் விதமும் எவ்வாறு இருந்திருக்கும் என்று கேட்டால் பதில் கூறுவது கடினம்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா வகிக்கும் பாத்திரத்தை எவராலும் குறைத்து மதிப்பிட முடியாது. இங்குள்ள நாடுகளோடு இந்தியா கொண்டிருக்கும் உறவுகளை ஒப்பிட்டுப்பார்த்தால், இலங்கையோடு சற்று மேம்பட்ட ஒரு உறவுநிலையை அது கடைப்பிடித்து வந்ததைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அதன் ஒருபுறம் அமைந்துள்ள பலம் வாய்ந்த அண்டை நாடு பாகிஸ்தான். அதுவே அதன் பிரதான எதிரி நாடாக ஆகிப் போயுள்ள நிலை. இந்தியாவின் பாதுகாப்பு ஏற்பாடுகளின் பிரதானமான எச்சரிக்கை உணர்வுக்கு அடிப்படையாக அமைந்திருப்பதும் பாகிஸ்தானே. கடந்த வருடம் இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று போட்டியாக அணுகுண்டுகளை வெடிக்க வைத்து தம் புஜ பலத்தை வெளிக்காட்ட விளைந்த நிலைமைக்கு இந் நாடுகளைத் தள்ளிக் கொண்டு வந்ததும் இந்த எச்சரிக்கை உணர்வே.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இருந்த காஷ்மீர் என்ற ராஜ்யத்தின் வெவ்வேறு பகுதிகளைத் தம்வசமாக்கிக் கொண்ட இருநாடுகளும் இன்று காஷ்மீர் யாருடையது என்பதற்காக மோதிக்கொள்கின்றன. இதேவேளை காஷ்மீர் பிரிவினை வாதிகளின் போராட்டத்தையும் பாகிஸ்தானும், பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள இந்துக்களின் கிளர்ச்சிகளை இந்தியாவும் பயன்படுத்தி ஒன்றையொன்று குடைந்த வண்ணமுள்ளன. அண்மையில் நிகழ்ந்த கார்க்கில் பனிமலை யுத்தம் இந்த ஊடுருவலின் ஒரு வெளிப்பாடாக விளைந்திருந்தது.

காஷ்மீரைப் போலவே இந்தியாவின் மற்றொரு சிறிய எல்லை நாடாக இருந்த 'சீக்கிம்' என்ற நாட்டையும் இந்தியா தன்னோடு வலிந்து இணைத்து தனது பிராந்தியமாக்கிக் கொண்டது.

இதேபோல் மறுபுறம் உள்ள பங்களாதேஷுடனான உறவு நிலையும் பகைமை உணர்வுடன் கூடியதாகவே இந்தியாவுக்கு உள்ளது. பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்து செல்ல இந்தியாதான் உதவிய போதிலும் பின்னர் அவ்வாறு உருவாகிய பங்களாதேஷிலும் இந்தியாவுக்கு எதிரான அரசியல் நிலைமையே தோன்றியது.

இன்னொரு புறத்தில் அமைந்திருக்கும் பாரிய நாடான சீனாவுடனும் இந்தியாவுக்கு பெருத்த பகைமையே ஏற்பட்டு பாரிய யுத்தமாகவும் வெடித்தது. அத்துடன் நில்லாது சீனா இந்தியாவுக்கு எதிரான ஒரு தத்துவார்த்த எதிரியாகவும் விளங்கி இந்தியாவில் நக்ஸல் பாரி கம்யூனிசக் கிளர்ச்சிகளுக்கு வழிவகுக்கச் செய்தது. இன்னும் அதன் செல்வாக்கு அங்கு இருந்துகொண்டே உள்ளது.

மேலும் மற்றைய அண்டை நாடான பர்மாவுடனும் இந்தியாவுக்கு எல்லைத் தகராறுகளும் மலைவாசிப் பழங்குடியினரின் கிளர்ச்சிக்கான பின்புலமாக விளங்குவது குறித்த பிணக்குகளும் இருந்தவண்ணமுள்ளன.

பூட்டான், நேபாளம் போன்ற அயல் நாடுகளும் இந்தியாவின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட நாடுகளாகவே இந்தியாவால் பேணப்பட்டு வருகின்றன. இந்த வகையில் இந்தியாவைச் சுற்றிவரப் பார்த்தால் அதன் எல்லையோர நாடுகள் யாவும் இந்தியாவுடன் ஏதோ ஒரு விதத்தில் பகைமை பாராட்டுபவையாக அல்லது இந்தியாவின் ஆதிக்கத்துக்கு கீழ் இயங்குபவையாகக் காணப்படுகின்றன.

அந்த வகையில் அந் நாடுகளுடன் இலங்கையை ஒப்பிட்டுப்பார்த்தால், சற்று மாறுபட்ட உறவு நிலைதான் காணப்படுகிறது. ஏனோ ஒரு விதத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் நல்லுறவு காப்பாற்றப்பட்டு வந்துள்ளதை அவதானிக்கலாம்.

இருந்தபோதிலும், பல்வேறு கட்டங்களில் இலங்கையுடன் சில பிணக்குகளும் அவ்வப்போது தோன்றியுமிருந்தன. பாகிஸ்தான் பங்களாதேஷ் யுத்தத்தின் போது, பாகிஸ்தான் யுத்த விமானங்கள் இலங்கையின் ஆகாயப் பரப்பினூடாக பறக்க அனுமதிக்கப்பட்டிருந்ததில் இந்தியாவுக்கு மனஸ்தாபம் இருந்தது. கச்சைத் தீவு பிரச்சனையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பிணக்கு ஏற்பட்டிருந்தது. எனினும் அப்பிணக்கு ஒருவாறு இணக்கத்துக்கு கொண்டுவரப்பட்டுவிட்டது. இலங்கையில் குடியேற்றப்பட்ட இந்திய வம்சாவளி தமிழர்கள் தொடர்பாகவும் இந்தியாவின் கரிசனை இருந்தது. இதன் தொடர்பாகவே சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் விளைவாகவே இலங்கையின் மலையகத் தமிழர்களின் ஒரு பகுதியினர் இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்பட்ட கசப்பான நிகழ்வுகள் நிகழ்ந்தேறின.

இவற்றைவிட இலங்கையில் இஸ்ரேலுக்கு தூதரகம் வழங்கப்பட்டமை, திருகோணமலை எண்ணெய்க் குதங்களை அமெரிக்காவுக்கு வழங்கமுற்பட்டமை, இலங்கையில் 'வொய்ஸ் ஒ.ஃப் அமெரிக்கா' தளமொன்று ஏற்படுத்த விளைந்தமை போன்ற விடயங்களும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் மனஸ்தாபங்களைத் தோற்றுவித்தன. எனினும் இவற்றுக்கு இந்திய இலங்கை ஒப்பந்தத்துடன் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டன.

இவையாவற்றையும் விட இந்தியாவை இலங்கை மீது தலையீடு செய்யக் களமமைத்துக் கொடுத்த விடயம்தான் இலங்கையின் இனப்பிரச்சனை. இப்பிரச்சனைகுறித்து ஆரம்பத்தில் மெத்தனப்போக்கைக் கடைப்பிடித்த இந்தியா, 1983 ஜூலைக் கலவரத்தையடுத்து தீவிரம் காட்ட ஆரம்பித்தது. 1976ல் தமிழீழக் கோரிக்கையை முன் வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணி, மிக விரைவிலேயே இலங்கை அரசாங்கம் முன் வைத்த மாவட்ட சபைகள் திட்டத்தை ஏற்றுக் கொண்ட போதிலும் அத் திட்டம் படுதோல்வியடைந்தது. ஆயினும் அதையொட்டிய பேச்சுவார்த்தைக்கு அப்போதைய இந்தியாவின் இந்திராகாந்தி அரசாங்கம் முக்கிய ராஜதந்திரியாக விளங்கிய பார்த்தசாரதியை 'அனெக்சர் சீ' என்ற தீர்வு ஏற்பாடுகளுடன் அனுப்பி வைத்தது. இவ்வாறு மெதுவாக ஆரம்பித்த அதன் ஈடுபாடு '83 ஜூலைக் கலவரத்தையடுத்து, வேறு கோணத்தில் மறைமுகமான நேரடித் தலையீட்டாக உயர்ந்தது.

தமிழர்களின் விடுதலை இயக்கங்களுக்கு இந்தியா தமிழ் நாட்டைப் பின்தளமாக பயன்படுத்த அனுமதித்தது. அவர்களின் தலைமைக் காரியாலயங்கள் இயங்க அனுமதித்தது. ஆயுதப் பயிற்சி வழங்கியதுடன் ஆயுதங்களையும் வழங்கியது. இந்தியாவின் வெவ்வேறு வட்டாரங்களுக்கூடாக நிதியுதவியும் செய்தது. போதாக்குறைக்கு தமிழ்நாட்டின் பல்வேறு அரசியற்கட்சிகளும் தம் தம் பங்குக்கு இவ் ஆயுத இயக்கங்களுக்கு ஆதரவு வழங்கின. அப்போதைய தமிழ்நாட்டு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளுக்கு பகிரங்கமாகவே 3 கோடி இந்திய ரூபா நிதியுதவி வழங்கினார். இவ்வாறான செய்கைகள் அங்கு ஓர் அரசியற் போட்டியாகவே நிகழத்தொடங்கின. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கருணாநிதி சேகரித்து வழங்கிய ஐம்பதாயிரம் ரூபா நிதியை புலிகள் மறுதலித்து எம்.ஜி.ஆர். மீதான தமது விசுவாசத்தைக் காட்டிக் கொண்ட சம்பவத்தை அண்மையிலும் முதலமைச்சர் கருணாநிதி சுட்டிக் காட்டி தன் மனக் கசப்பை வெளிப்படுத்தியிருந்தார். இவ்வாறு வெவ்வேறு விடுதலை இயக்கங்களை வெவ்வேறு அரசியற் கட்சிகள் ஆதரித்துப் பேணுமளவுக்கு தாராளமான அளவில் இலங்கைக்கு எதிரான தீவிரவாதிகளின் செயற்பாடுகள் அங்கு அனுமதிக்கப்பட்டிருந்தன.

தென்னிந்தியாவுக்கு பெருமளவு இலங்கைத் தமிழ் அகதிகள் சென்று குவிந்ததும் இந்தியாவுக்கு இலங்கை விவகாரத்தில் தலையிடக்கூடிய நியாயத்தை வழங்குவதாக இருந்தது. அத்தோடு அதன் தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்பட்ட உணர்வலைகளையும் அது மதிக்க வேண்டிய சூழ்நிலை நிர்ப்பந்தத்தையும் அது தனக்கான அழுத்தங்களாகக் காண்பிக்க முடிந்தது. மேலும் தனது நாட்டின் பிரிவினைப் போராட்டங்களை இது தூண்டிவிடும் அபாயம் உள்ளதென்ற தனது உள்நாட்டு நலன் பற்றியும் அது குரல் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

இப்படியாக இந்தியா 'தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளும்' ஒரு நாடகத்தை இலங்கை விவகாரத்தில் மேற்கொள்ள விளைந்தது. தமிழ் விடுதலை இயக்கங்களுக்கு ஒரு புறம் ஆயுதம் வழங்குவது, மறுபுறம் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது அதன் இருவழிச் செயற்பாடாக இருந்தது. இந்த வகையில் நடத்திய 'திம்பு' பேச்சுவார்த்தை, பெங்களூர் பேச்சுவார்த்தை என்பன தோல்வியில் முடிந்தன. எனினும் இவற்றின் விளைவுகளை அது தனக்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டது.

இதன் மூலம் ஒருபுறம் இலங்கை அரசாங்கம் உரிய தீர்வெதையும் முன்வைப்பதாக இல்லை என்ற கருத்தை ஏற்படுத்துவது, மறுபுறம் விடுதலை இயக்கங்கள் இப்பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளாத நிலைமையை காரணம் காட்டி அவர்களுக்காக தனது பங்கை முதன்மைப் படுத்துவது என்பன அதன் சாதுரியமான செயற்பாடாக இருந்தது.

இதனால் இந்தியா மூன்றாம் தரப்பாகத் தலையிட்டு இப்பிரச்சனைக்கு தீர்வு வழங்க வேண்டும் என்ற அபிப்பிராயத்தை இலங்கைத் தமிழர் மத்தியிலும், தென்னிந்தியாவிலும், உலக மட்டத்திலும், வலுவடையச் செய்தது. இத்தகைய ஒரு தயாரிப்புடன் இலங்கை அரசாங்கம் யாழ்ப்பாணத்தின் மீது கடுமையான ஒரு தாக்குதலை முன்னெடுத்த தருணம் பார்த்து, ஆகாய மார்க்கமாக உணவுப் பொதிகளைப் போட்டபடி தனது நேரடித் தலையீட்டை மேற்கொண்டது. இதன்மூலம் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் மாகாண சபைத் தீர்வையும் ஏற்படுத்தி அதை அமுலாக்க தனது படைகளையே நேரடியாக இலங்கையில் ஈடுபடுத்தியது.

ஆனால் அது இந்தியாவுக்கு மிகவும் கசப்பான அனுபவங்களுடனான தோல்வியாகவே இறுதியில் முடிந்தது. இரண்டு காரணிகள் இதற்கு பிரதானமான காரணங்களாக அமைந்தன. ஒன்று, இந்தியா தனது திட்டப்படி அனைத்து தமிழ் விடுதலை இயக்கங்களும் செயற்படும் என்று நம்பியிருந்தது பொய்த்துப் போனது. விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவின் இம் மாகாணசபைத் தீர்வை நிராகரித்ததுடன் இந்தியப் படைகளின் பிரசன்னத்தையும் எதிர்ந்தனர். மறுபுறம் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஜே.ஆர். ஓய்வுபெற்று கடும் இந்திய எதிர்பாளரான பிரேமதாஸா ஜனாதிபதியானார். அவரின் ஆட்சிக்கு சவாலாக அமைந்த ஜே.வி.பி.யினர் முன்னெடுத்த இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேவும் விதத்தில் அவர் இந்தியப் படைகளைத் திரும்ப அனுப்புவதில் தீவிரமாக இறங்கினார். இக் கட்டத்தில் புலிகளும் பிரேமதாஸாவும் இந்தியாவுக்கு எதிரான ஒரு பொது இணக்கப் பாட்டுக்கு வந்திருந்தனர். இப்புறநிலைக் காரணிகள் ஒருபுறம் நெருக்கடியாக எழ, இந்தியாவில் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்துடன் இம் முயற்சியிலிருந்து இந்தியா பின்வாங்க வேண்டி ஏற்பட்டது.

இதுவரை வரவர எவ்வளவு முனைப்பாக இந்தியா இலங்கைப் பிரச்சனையில் ஈடுபட்டு வந்ததோ அதற்கு நேரெதிராக இந்தத் தோல்வியுடன் இந்தியா சூடுகண்ட பூனையாகப் பின்வாங்கி விட்டது. அத்தோடு அது இலங்கையில் தலையிடாக் கொள்கை எனும் போர்வையால் தன்னை இழுத்து மூடிக்கொண்டது.

எனினும் தனது கைக்காவலுக்காக இலங்கை பிரச்சனையில் தலையிடுவதற்கான ஒரு சில பிடிமானங்களை அது தன்னகத்தே வைத்துக் கொண்டது.

அதில் ஒன்று இந்திய இலங்கை ஒப்பந்தம் செல்லுபடியற்ற ஒன்றாக இன்னும் இந்தியா அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடவில்லை. அதற்கான உத்தரவாதப் பாத்திரத்தை அது இன்னும் தனது உரிமையாகவே கொண்டுள்ளது.

இந்தியப் படைகளைத் திரும்ப எடுத்துக் கொண்டபோது வட-கிழக்கு மாகாண சபை முதலமைச்சரான வரதராஜப் பெருமாளையும் தனது பாதுகாப்பில் எடுத்துக் கொண்டது. அவரை இன்னும் அரச செலவிலேயே பேணி வருகிறது. இதனை இவ் ஒப்பந்தம் தொடர்பான தனது கடப்பாட்டை இன்னும் கொண்டுள்ளதற்கான குறியீடாகவே பாக்கக் கூடியதாக உள்ளது.

மேலும் ராஜீவ் காந்தி படுகொலை விவகாரம். அப்படுகொலை வழக்கில் விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் அவரது உளவுப்படைத் தலைவர் பொட்டு அம்மானையும் ஒரு குற்றவாளிகளாக தீர்த்துள்ளதுடன் மட்டுமல்லாது அக் குற்றவாளிகளை தமது நாட்டுக்கு நாடு கடத்த வேண்டுமென இலங்கை அரசாங்கத்திடம் கோரியும் உள்ளது.

அத்தோடு இன்னும் அது தன்னகத்தே பெரும் தொகையான இலங்கை அகதிகளைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டு உணர்வுகள், இந்திய தீவிரவாதிகளுடன் இலங்கைத் தீவிரவாதிகளுக்கு உள்ள தொடர்புகள், இந்தியப் பிரிவினைவாதத்துக்கு இலங்கை நெருக்கடி உந்துதல் வழங்கும் அபாயம், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பதட்டமற்ற நிலையைப் பேணவேண்டிய இந்தியாவின் அவசிய நிலைமை என்று பல அடுக்கக்கூடிய காரணங்களையும் அது மேலதிகமாக வைத்துக் கொண்டேயுள்ளது.

இருந்த போதிலும், இந்திய இலங்கை ஒப்பந்த அனுபவத்தின் பின் அது பின்வாங்கி தலையிடாக் கொள்கையையே நீண்ட காலமாகக் கெட்டிப்பிடியாகக் கடைப்பித்து வந்தது. அவ்வாறான அதன் பின்வாங்கலானது படிப்படியாக வேறுபல புதிய நிலவரங்களைத் தோற்றுவித்து விட்டன.

இப்பிரச்சனை இலங்கை இந்தியா என்பவற்றையும் தாண்டி சர்வதேச ரீதியான அளவில் பிரபலமானதாகிவிட்டது. தமிழ் அகதிகள் பிரச்சனை சர்வதேச நாடுகளுக்கும் பிரச்சனையாகிவிட்டது. படிப்படியாக பல சர்வதேச அமைப்புக்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும், மனித உரிமை ஸ்தாபனங்களும் இதில் ஈடுபாடு செலுத்தி செயற்பட ஆரம்பித்து விட்டனர். மெதுவாக ஐரோப்பிய, அமெரிக்க நாடுகள் இப்பிரச்சனை குறித்து விவாதிக்கவும் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தலைப்பட்டன. ஐ.நா.சபை விசேட தூதுவர் வருகை தந்து அவதானம் செலுத்தியிருந்தார். இவையாவற்றினதும் பெறுபேறாக இந்தியாவைக் கடந்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்துவமாக நோர்வே நாட்டின் மத்தியஸ்தம் சர்வதேச அங்கீகாரத்துடன் ஏற்படுத்தப்பட்டு விட்டது.

இது இந்தியாவின் ராஜதந்திரத்துக்கு விழுந்த மிகப் பெரிய அடி. இந்தியா இருக்கக்கூடியதாக அதைக் கடந்து மேற்கு நாட்டு மத்தியஸ்த்தம் ஒன்றை அயல்நாடான இலங்கையின் பிரச்சனையில் ஏற்படுத்துவது என்பது, இந்தியாவை நியாயபூர்வமான ஒரு நாடல்லவென்று மறைபொருளாகக் கூறுவதாகவே அமைகிறது. அத்தோடு இற்றை நாள்வரை இலங்கைப் பிரச்சனையில் இந்தியா காட்டிவந்த ஈடுபாடும், அதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் அர்த்தமற்றவையாக மாறிவிடும் ஏமாற்றத்தையும் அது இந்தியாவுக்கு வழங்குவதாகிறது.

புலிகள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற நடத்திய இராணுவத் தாக்குதலின் போது, இலங்கையின் வேண்டுகோளுக்கு பல்வேறு நாடுகளும் உதவியளிக்க முன்வந்தமை-குறிப்பாக தனது எதிரி நாடான பாகிஸ்தானே இராணுவ தளபாடங்கள் வழங்க முன்னின்றமை இந்தியாவை விழிப்புற வைத்தது.

அத்தோடு அமெரிக்கா இதில் கூடுதலான அக்கறை செலுத்துவதும், அதன் பின்னணியிலேயே நோர்வே அரசாங்கம் முன்னரங்கப் பாத்திரம் வகிப்பதும் அதற்குப் புலப்பட்டு இலங்கை விவகாரம் படிப்படியாகத் தனது கையை விட்டு நழுவிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை உணர வைத்தது. இந்தியாவின் அனுசரணையுடனேயே பேச்சுவார்த்தைகள் நிகழும் என்று அமெரிக்காவும் நோர்வேயும் கூறிக்கொண்டாலும், அது ஒரு சமாதானத்துக்குக் கூறும் வாக்கியமாகவும், பேச்சுவார்த்தையின் தலைமைப் பொறுப்பு நோர்வேயின் கரங்களிலே வழங்கப்பட்டு விட்டு, இந்தியாவை அதன் முயற்சியோடு இசைந்து போகும்படி வலியுறுத்தும் ஒன்றாகவுமே அமைந்துள்ளதென்பதை இந்தியா உணர்ந்து கொண்டது.

எனவே திரும்பவும் தன்னை முன்னிலைப் படுத்த வேண்டிய அவசியம் அதற்கு ஏற்பட்டுள்ளது. அதற்கான தனது பிடிமானத்தை அதிகரித்துக் கொள்ளும் விதத்திலேயே இப்போது இலங்கை அரசாங்கத்துக்கு அதிகளவிலான இராணுவ உதவிகளை அது செய்ய முன்வந்துள்ளது. புலிகள் யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் நடத்தியபோது தான் மனிதாபிமான உதவிகளை மட்டுமே இலங்கைக்கு வழங்கப்போவதனாகக் கூறிக் கொண்ட இந்தியா இப்போது இந்த மனிதாபிமானத்தையும் கடந்து நிதி, போர்க்கப்பல்கள் என்று 'யுத்தாபிமான' உதவிகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

இந்நிலையில் நோர்வே அரசாங்கம் சற்று அதிகமாக இயங்கி ஒரு திருப்புமுனையாக புலிகள் தலைவர் பிரபாகரனை முல்லைத் தீவுக்கே நேரடியாகச் சென்று சந்தித்து கதவுகளைத் திறந்து விட்டுள்ளதாக அறிவித்துள்ளது. அதற்கேற்ப புலிகள் தலைவர் பிரபாகரனது மாவீரர் தின உரையிலும் பேச்சுவார்த்தைக்குத் தயாரென்ற அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தை முகம் கொடுக்கும் இலங்கை இதற்குப் பதிலளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தைக் கொண்டுள்ளது.

எனவே இந்தியாவை மீறிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுமானால் அது இந்தியாவை மிகவும் இக்கட்டுக்குள் ஆழ்த்திவிடும். இலங்கை மீதான அதன் பிடிமானம் தளர்ந்து போய்விடுவது மட்டுமல்ல, இந்தியாவின் பேட்டையாக எண்ணியிருந்த இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் மேற்குலக நாடுகள் புகுந்து விளையாடக் களம் உருவாகிவிடும். அதனால் இப்பேச்சுவார்த்தைகளில் இந்தியா தன்னை எப்படி முன்னிலைப்படுத்துவது என்பது குறித்தும், தன்னை மீறி இப்பேச்சுவார்த்தையின் போக்கு செல்லுமானால் அதற்கு எப்படி முட்டுக்கட்டையிடுவது என்றும் தலையை உடைத்தபடி ஆராய்ந்து வருகிறது. இதற்கு இலகுவான வழி இலங்கையை மடக்கி தனது கமக்கட்டுக்குள் வைத்துக் கொள்வது தான். அதற்கு அது இலங்கையை ஒருபுறம் அரவணைத்தும் மறுபுறம் நிர்ப்பந்தித்தும் வழிக்குக் கொண்டுவர முயல்கிறது. அதில் ஒரு வெளிப்பாடுதான் மீண்டும் புலிகள் தலைவர் பிரபாகரனை தம்மிடம் நாடுகடத்த வேண்டுமென்று இந்தத் தருணத்தில் இந்தியா மீண்டும் சர்ச்சை கிளப்பியுள்ளமை. இப்பேச்சுவார்த்தை விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கும்போது இந்தியா மேலும் பல நடவடிக்கைகளில் குதிக்கலாமென நாம் எதிர்பார்க்கலாம்.

-நரன்-

## செய்திச் சிதறல்

★ இதுவரை தொலைபேசி வசதி எதுவுமில்லாது இயங்கி வரும் உப தபாலகங்களுக்கு உடனடியாக தொலைபேசிகளை வழங்க நடவடிக்கை எடுத்திருப்பதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். நாட்டில் சுமார் 900 உபதபாலகங்கள் தொலைபேசி மற்றும் பக்ஸ், மின்சார வாதிகளின்றி இயங்கி வருகின்றன.

★ மட்டக்களப்பு-சத்துருக்கொண்டான் படை முகாமின் மீது புலிகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் ஒரு கடற்படை வீரர் பலியானார். இச்சம்பவம் 19ம் திகதி நள்ளிரவு 12 15 மணியளவில் இடம் பெற்றது. படுவான் கரையில் தமது கட்டுப்பாட்டுப்பகுதியான மறு கரையிலிருந்தே புலிகள் ஷெல் வீச்சு நடத்தியிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

★ பௌத்த விகாரைகளை மையமாக வைத்து ஒரு தொண்டர் படையைச் சேர்த்து அப்படையினரை விடுதலைப் புலிகளுக்கெதிரான போரில் இறக்குவதற்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறார். இவ்வாறு நாடெங்கணுமுள்ள விகாரைகளில் சேர்க்கப்படும் தொண்டர் படையைக் கொண்டே மூன்று வருடங்களில் விடுதலைப் புலிகளை முறியடித்து, நாட்டில் அமைதியை நிலைநாட்டப் போவதாக பிரதமர் அறிவித்திருக்கிறார். அகிம்சை, சகிப்புத் தன்மை, பொறுமை போன்ற அரிய விழுமியங்களை போதித்த புத்தபிரானை வழிபடும் ஆலயங்கள் இரத்த வெறி பிடித்த போர் வீரர்களை உருவாக்கும் இடமாக மாற்றப்படுவது விசனத்தைத் தருவதாக ஒரு பௌத்த சிங்கள பிரமுகர் தெரிவித்திருக்கிறார்.

★ பெற்றோலியப் பொருட்களின் விலையதிகரித்தமையினாலும் டொலரின் பெறுமதிக்கெதிராக இலங்கை நாணயத்தின் மதிப்பு குறைக்கப்பட்டமையினாலும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில் கிடுகிடு உயர்வு ஏற்பட்டிருக்கிறது. பண்டிகைக்காலத்தில் கொழும்பில் தெருவோர அங்காடிகளில் பொருட்கள் விற்பனை உச்சக்கட்டமாக இருக்கும். தெருக்களில் சாதாரண பொதுமக்கள் நடமாடமுடியாதபடி மக்கள் பொருட்களை வாங்குவதில் முண்டியடித்துக் கொண்டிருப்பார்கள். வழமையாக இடம்பெறும் இந்தக் காட்சி இம்முறை கொழும்பில் மட்டுமல்ல நாட்டின்ன ஏனைய பகுதிகளிலும் காணப்படவில்லை. கடைகளும் வெறிச்சோடிக் கிடக்கின்றன.

★ ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப்புலிகளின் நடமாட்டங்களைத் தடைசெய்யுமாறு இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்து வருகிறது. வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இலண்டன் மாநகர் சென்றிருந்தபோது அந் நாட்டு அதிகாரிகளிடம் புலிகளைத் தடைசெய்யும் படி கோரிக்கை விடுத்துள்ளார். பிரிட்டன் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உருவாக்குவதற்கு திட்டமிட்டிருப்பதாகவும் தெரிகிறது. இதே சட்டத்தின்கீழ் புலிகள் இயக்க நடவடிக்கைகளையும் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி இலங்கையரசு கோரிக்கை விடுத்தது. இந்தக் கோரிக்கைக்கு உரிய பதிலளிப்பதற்கு இன்னும் ஒரு வருடகாலம் காத்திருக்கும்படி இலங்கை அரசுக்கு கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் தெரிவித்துள்ளது.

# அண்டை மண்டலத்தில்....

இந்த அலசல் மிகக் கசப்பான ஒரு விஷயத்தைப் பற்றி. இந்தியாவில் மதச்சார்பின்மை அடிமேல் அடிவாங்கி வருவது பற்றி. எனவே ஒரு சுவையான கதையுடன் துவங்குவோம். புதுடில்லியில் ராமாயண நாடகம் வருடந்தோறும் நடைபெறும். ஒரு சமயம் அனுமானாய் நடிக்க வேண்டிய ஆள் வரவில்லை, அவசர அவசரமாக ஒரு கட்டுமஸ்தான அல்வா கடைக்காரரைப் பிடித்து கெஞ்சிக் கூத்தாடி, ஒத்துக் கொள்ளவைத்தார்கள். "ஒரே ஒரு வசனம் தானய்யா ராவணனைச்சந்திக்கும் போது, அவர் கேட்பார் நீ யாரென்று, நான் ராமபக்தனென்று நீ சொல்லவேண்டும். அவ்வளவுதான்," என்று அவரிடம் கூறப்பட்டது. அந்த நபரும் மேடைக்கு வந்தார்.

மிகப்பிரமாதமான மேக் அப். வசனத்தையும் சொல்லி முடித்தார். அப்புறம்தான் பிரச்சனையே துவங்கியது. கோபமாக ராவணன் தனது வாளை உருவ, ஆடிப்போய்விட்டார் புது நடிகர். "அய்யய்யோ, நான் அனுமனல்ல, அல்வா கடைக்காரன்" என்றார்.

அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்ட

## வாஜ்பேயின் முகத்திரை கிழிந்தது

இடத்தில் ராமருக்கு கோயில் கட்ட வேண்டுமென்பதே இந்தியமக்களின்விருப்பம் என்று பிரதமர் வாஜ்பேயி கூற, பின்னர் எழுந்த விவாதத்தின் போது, தான் நாடாளுமன்றத்தில் லல்லு பிரசாத் யாதவின் கட்சியைச் சார்ந்த ஒரு எம்.பி. அல்வாக் கடைக்காரர் கதையைக்கூறினார்.

பிரதமர் வாஜ்பேயிதான் அந்த அல்வாக் கடைக்காரர். மதச்சார்பற்றவர் போல, மிதவாதி போல வேஷம் போட்டார். ஆர்.எஸ்.எஸ். கத்தியை உருவ, பயந்துபோய் வாஜ்பேயி தான் யாரென்பதை ஒப்புக்கொண்டு விட்டார் என்றார் அந்த எம்.பி. எதிர்க்கட்சியினர் சிரித்தனர். ஆனால் இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றிய கவலை உடையவர்கள் சிரிக்க ஒன்றுமில்லை. வாஜ்பேயி பழைய ஜனசங்கத்துக்காரர், அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமர் கோயில் கட்டுவதே தனது தலையாய பணி என்று அவர் பிரகடனம் செய்வதில் ஆச்சரியமில்லை. ஆனால் திராவிடக் கலாசாரத்தில் ஊறிய வை.கோ. உட்பட பல கூட்டணிக்கட்சித் தலைவர்களும் வாஜ்பேயின் கூற்றினை ஏற்றுக் கொண்டு அவரது மதச்சார்பின்மைக்கு லாலி பாடியதுதான் மிகவும் வேதனையான, கசப்பான ஒரு விஷயம்.

வை.கோக்கள் மட்டுமல்ல, பொதுவாகவே நடுத்தர வர்க்கத்தினர் இந்துத்துவாவை நேரடியாகவோ, மறைமுகமாகவோ அங்கீகரிக்கத் தொடங்கிவிட்டார்கள். என்றாலும் கூட பத்திரிகைகள் கடுமையாக பிரதமரை விமர்சனம் செய்தது சற்று ஆறுதல்தான். கடைசியில் கருணாநிதியே கோயில் விஷயத்தில் ஏடாகூடமாக மத்திய அரசு நடந்து கொள்ளுமானால் தி.மு.க. தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகிவிடும் என்று எச்சரிக்கை விட்டுவிட்டார்.

முஸ்லிம்கள் ரமழான் உபவாசம் இருக்கும் காலம் இப்போது, தானாகவே இந்திய அரசு காஷ்மீரில் போர் ஒய்வு அறிவித்ததன் விளைவாக, மீண்டும் அங்கே அமைதி திரும்பக்கூடும் என்று பலரும் நம்ப, வாஜ்பேயி ஏதோ புதிய சமாதான தூதுவராக சித்தரிக்கப்பட்டார்.

அந்த நேரம் பார்த்து ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார் பிரதமர். இம்மாத முதல் வாரத்தில் துவங்கிய நாடாளுமன்றக்கூட்டத் தொடரில் மசூதி இடிப்பு பற்றிய பிரச்சனையினை காங்கிரஸ் மற்றும் சில எதிர்க்கட்சிகள் கிளப்பின. 1992ம் ஆண்டு டிசம்பர் 6ம் நாளன்றுதான் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. எனவே வருடா வருடம் இதைக் கிளப்புவது ஒரு சடங்கு.

மத்திய அமைச்சர்கள் அத்வானி, முரளி மனோகர் ஜோஷி, உமா பாரதி ஆகியோர் மீது மசூதி இடிப்பு வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருப்பதால், அவர்கள் ராஜினாமா செய்யவேண்டுமென்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கோரினர்.

வாஜ்பேயி செய்தியாளர்களிடம் கூறினார்-மசூதியை இடிக்க அத்வானியும் மற்றவர்களும் அங்கே செல்லவில்லை. மாறாக அங்கிருந்த கூட்டத்தினரை அமைதிப் படுத்தவே அவர்கள் சென்றார்கள்.

எது எப்படியாயினும் அயோத்தியில் ராமர் கோவில் கட்டவேண்டுமென்பது தேசிய உணர்வாகும். அந்த நோக்கம் இன்னும் நிறைவேறவில்லை என்றார் அவர்.

எதிர்க்கட்சிகள் வெகுண்டெழுந்தனர். பாரதீய ஜனதா தலைவராக வாஜ்பேயி எது வேண்டுமானாலும் கூறிக்கொள்ளட்டும். ஆனால் பிரதமராக அவர் இருக்கும்போது இப்படியெல்லாம் சொல்லலாமா, அதுவும் பிரச்சனை நீதிமன்றத்தின் முன் நிலுவையிலிருக்கையில், என்று கேள்விகள் எழுந்தன.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருக்கும் தெலுங்கு தேசம், திரிணாமூல் காங்கிரஸ் போன்ற கட்சிகளும் பிரதமருக்கு ஆட்சேபம் தெரிவித்தன. 'ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்ற கதையாக மறுநாள் வாஜபேயி, தனது கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் அமைச்சர் ஷாநவாஸ் ஹூசேன் அளித்த இஃப்தார் விருந்தில் கலந்து கொள்ள வந்தபோது, மசூதி இடிக்கப்பட்ட இடத்திலேயே ராமருக்கு கோயில் கட்டலாம், மசூதிக்கு வேறு இடம் பார்த்து தரலாம் என்றார். ஒரே ரகளை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும். ஒரு அலுவலும் நடைபெறவில்லை. வாஜ்பேயி ராஜினாமா செய்யவேண்டும், தனது கூற்றினை திரும்பப்பெற வேண்டும், குறைந்த பட்சம் வாக்கெடுப்புடன் கூடிய விவாதம் வேண்டும் என்ற காங்கிரஸார் கோரினர். வெறும் வாயை மெல்பவர்களுக்கு அவல் கிடைத்தது போல, ஏறத்தாழ ஓராண்டு காலமாக பாரதீய ஜனதாவை எதிர்கொள்ள சரியான பிரச்சனை கிடைக்காமல் தவித்தவர்களுக்கு வாஜ்பேயின் கூற்றுக்கள் வரப்பிரசாதமாகவே அமைந்தது.

நீதிமன்றத்தின் முன் அத்வானி உள்ளிட்டோர் மீது வழக்கு இருக்கும் போது, அவர்கள் தவறேதும் செய்யவில்லை என்று கூறுவது நீதிமன்றத்தினை வசப்படுத்தும் அல்லது மிரட்டும் முயற்சி என்ற விமர்சனம் ஒரு புறம்.

இன்னொரு புறம் விரைவில் உத்திரப்பிரதேச மாநிலத்தில் சட்ட மன்றத் தேர்தல்கள் நடைபெறவிருப்பதால், இந்துக்கள் மத்தியில் பா.ஜ.க. செல்வாக்கை அதிகரிக்க, சங்க பரிவாரத்தினை உற்சாகப்படுத்த இவ்வாறு வாஜ்பேயி பேசியிருக்கக்கூடும் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. பொதுவாகவே வாஜ்பேயி மீது சங்கபரிவாரத்தினர், அதாவது ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் சங் (ஆர்.எஸ்.எஸ்.) விஸ்வ ஹிந்து பரிஷத் பஙரங் தல் போன்ற அமைப்பைச் சார்ந்தவர்கள், கடும் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள்.

தேசிய ஜனநாயகக்கூட்டணி அரசு மத்தியில் பிழைக்க வேண்டிய இந்துத்துவக் கொள்கைகளை வாஜ்பேயி புறந்தள்ளுகிறார் என்று அவர்மீது குற்றச்சாட்டு. ராமருக்கு கோவில் கட்டவேண்டும் என்று அறைகூவல் விட்டு, ரத யாத்திரை நடத்தி, வி.பி.சிங் அரசினைக் கவிழ்த்து, பின்னர் மசூதி இடிப்பிற்கும் மூல காரணமாயிருந்த அத்வானி பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டதில் இந்து வெறியர்களுக்கு கோபம். ஆனாலும் ஆட்சி தொடரவேண்டுமே என்ற கவலையில்தான் அவர்கள் அமைதி காக்கிறார்கள்.

புதிதாக ஆர்.எஸ்.எஸ்.சின் பொதுச் செயலாளராகியிருக்கும் சுதர்சன் தீவிரவாதி என்று வேறு பெயர் எடுத்தவர். ஆட்சியிலிருந்தும் இந்துத்துவக் கொள்கைகளை நிறைவேற்ற முடியாவிடில் ஆட்சி எதற்கு என்று அவர் நினைப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த வட்டாரத்தினரையெல்லாம் திருப்தி செய்யும் பொருட்டே உமா பாரதியை காபினெட் அமைச்சராக்கியிருக்கிறார் வாஜ்பேயி. உமா பாரதி ஒரு சன்னியாசி என்று கூறிக் கொள்பவர். ஆனால் வாழ்வதோ ஆடம்பரமாகத்தான்.

இன்னொரு தீவிரவாதி கோவிந்தா சார்யாவைக் காதலித்து, திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவித்தார் உமா பாரதி, ஆனால் சங்கத் தலைமை மறுத்துவிட்டது. ஏமாற்றம். பிறகு பத்திரிகைகளில் பெயர் அடிபடவேண்டுமென்பதற்காக ஏதாவது ஸ்டண்ட் அடித்துக் கொண்டேயிருப்பார் அவர்.

மத்திய பிரதேச மாநில அரசுடன் மோதுவதற்காக தனது இணையமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். அவரது போராட்டங்கள் பிசுபிசுத்துப் போக, மீண்டும் அமைச்சராக விரும்பினார், தான் பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிநிதி என்றார். அப்படியும் வாஜ்பேயி இடம் கொடுக்கவில்லை. அரசியலிலிருந்து ஒய்வு பெற்று அமர்நாத் குகைக்குச் சென்று தவமிருக்கப் போகிறேனென்றார். பிறகு எனது குரு, மக்களுக்குதொண்டாற்ற, அரசியலுக்கு திரும்பப்போகச் சொல்லிவிட்டார். என்று கூறி மீண்டும் புதுடில்லி வந்தார்.

பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது, "இன்னொருமுறை இடியுங்கள், மசூதி தகர்ந்து விடும்" என்ற உமா பாரதி இந்தியில் கோஷமிட அது மிகப் பிரபலமானது. அந்த நேரம் அவர் பேசிய வெறியூட்டும் பேச்சுக்கள் காசட்டுகளாக வெளிவந்தன. அவரைத்தான் குற்றமற்றவர், கரசேவகர்களை அமைதிப்படுத்தவே அவர் அயோத்தி சென்றார் என்றார் பிரதமர். (மசூதியினை இடித்து, கோயில் கட்டும் பணிக்கென ஆயிரக்கணக்கில் குழுமிய தொண்டர் படையே கரசேவகர்கள் எனப்படுவர்.)

கல்வி அமைச்சர் முரளி மனோகர் ஜோஷியோ இந்தியாவில் உள்ள எல்லாவிதமான சாமியார்களுக்கும் சாமியாரிணிகளுக்கும் பாதபூஜை செய்பவர். பா.ஜ.க.வின் முன்னாள் தலைவரான இவர், தன்னாலியன்ற வரை இந்தியாவெங்கும் பாடத்திட்டத்தின் மூலமாக இந்து மதவெறியை மாணவர்களுக்கு ஊட்ட பாடுபட்டு வருகிறார். இவர்களெல்லாம் 1992ல் மசூதி இடிக்கப்படுவதைத் தடுக்க முயற்சி செய்தார்களாம், வாஜ்பேயி கூறுகிறார்.

இறுதி வரை அயோத்தியில் கோவில் கட்டவேண்டுமென்பது மக்கள் விருப்பம், வேறு இடத்தில் வேண்டுமானால் மசூதியைக் கட்டலாம் என்ற தன் நிலைப்பாட்டை பிரதமர் மாற்றிக் கொள்ளவேயில்லை.

இரண்டாண்டுகளுக்கு முன்பு மதமாற்றம் தொடர்பாக குஜராத் பற்றி எரிந்து கொண்டிருந்தபோது, தாக்கப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்காமல், மதமாற்றம் பற்றி தேசிய அளவில் விவாதம் தேவை என்றவர்தானே இந்த வாஜ்பேயி. ஒரு சில மாதங்களுக்கு முன் அமெரிக்காவில் பேசும்போது, நான் இறுதிவரை ஒரு சுயம்சேவகன் (ஆர்.எஸ்.எஸ். தொண்டன்), பா.ஜ.க. விற்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்தால் அயோத்தியில் கோவில் கட்டி முடிக்கப்படும் என்றல்லவா கூறினார் அவர். ஆர்.எஸ்.எஸ். தான் தனது ஆன்மா என்றும் சில ஆண்டுகளுக்கு முன் அவர் ஒரு கட்டுரையில் எழுதியிருந்தார்.

அத்வானியே இந்துத்துவா தீவிரவாதிகளின் ஆதர்ச தலைவராக கருதப்படுகிறார் என்றுணர்ந்து, அந்தப் பகுதியினரிடம் தனது விசுவாசத்தை தெரிவிக்கவே, இப்படியெல்லாம் பேசுகிறார் என்று கருதப்படுகிறது.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவி மம்தா பானர்ஜி மற்றும் தெலுங்கு தேசம் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் எர்ராம் நாயுடு, வாக்கெடுப்பின் போது ஒதுங்கிக்கொள்ளப் போவதாக பயமுறுத்தவே, வேண்டா வெறுப்பாக வாஜ்பேயி, கோயில் கட்டும் விஷயத்தில் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு தான் கட்டுப்படுவதாக உறுதியளித்தார். அதன் பின்பே மூன்று அமைச்சர்களை விலக்கக் கோரும் காங்கிரஸ் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

பாரதீய ஜனாதாவின் தமிழக கூட்டணிக் கட்சிகள் பிரச்சனையில் பெரிதாக அக்கறை ஏதும் எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக ம.தி.மு.க. தலைவர் வை.கோ. நாடாளுமன்ற விவாதத்தின் போது காங்கிரஸை கடுமையாகத் தாக்கினார். அவர்கள் தான் மசூதி இடிபடுவதற்கு காரணமென்றார், வாஜ்பேயி மதச்சார்பின்மையின் பாதுகாவலர் என்று நற்சான்றிதழ் வழங்கினார்.


கூடவே தான் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்றும் மறுபடி பிரகடனம் செய்து கொண்டார். வை.கோ.ராமதாசோ மற்ற பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர்களோ இப்படி ஒரு பிரச்சனை இந்திய அரசியலை உலுக்கிக் கொண்டிருப்பதாக காட்டிக்கொள்ளவில்லை.

தமிழக முதல்வர் கருணாநிதி சில நாட்கள் மௌனமாயிருந்தார். பின்னர் ஏனோ தானோவென்று ஓர் அறிக்கை வெளியிட்டார். தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பொது செயல்திட்டத்திலிருந்து மத்திய அரசு பிறழ்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று மட்டும் கூறினார். பிரதமர் இப்படியெல்லாம் கூறியிருக்கிறாரே என்று கூட தனது வருத்தத்தை அவர் தெரியவிக்கவில்லை.

நாடாளுமன்ற விவாதத்திலும் தி.மு.க. சார்பில் ஓர் இரண்டாம் மட்ட தலைவர்தான் பங்கு கொண்டார். பரபரப்பாக எதையும் அவர் பேசவில்லை.

பத்திரிகைகளில் தெலுங்கு தேசம், திரிணாமூல் காங்கிரஸ் கட்சிகள் ஏதோ பெயரளவிற்காவது தங்களது எதிர்ப்பைத் தெரிவித்தன, வாஜ்பேயியிடமிருந்து வாக்குறுதியைப் பெற்றன என்ற செய்திகள் வர, கருணாதிநிக்கு சற்று மனக்கிலேசம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

தேர்தலுக்கு சில மாதங்களே உள்ளன. சில நாட்களிலேயே ஜெயலலிதாவும் தோழமைக் கட்சித் தலைவர்களும் ஒரு இஃப்தார்



விருந்தில் கலந்து கொள்ள இருந்தனர். அப்போது தன் மீது தாக்குதல் தொடுக்கப்படும் என்றுணர்ந்தார் கருணாநிதி.

தி.மு.க.வை ஆதரிக்கும் ஒரு முஸ்லிம் லீக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்த இஃப்தார் விருந்தில் கலந்து கொண்டு பேசும்போது, அவர் பகிரங்கமாக வாஜபேயிக்கு எச்சரிக்கையே விட்டுவிட்டார். பொதுச் செயல்திட்டத்தை மீறி மத்திய அரசு செயல்பட்டால், தி.மு.க. கூட்டணியை விட்டு விலகிவிடும் என்றார்.

தான் எங்கிருந்தாலும் முஸ்லிம்களின் நண்பன்தான் என்றும் அடுத்த ஆண்டு தேர்தலறிக்கையில் வேலை வாய்ப்பிலும், கல்விக்கூடங்களிலும் முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு பற்றி அறிவிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்தார்.

முரசொலி மாறன் பா.ஜ.க.வை. விரோதித்துக் கொள்ளக்கூடாது என்று கருதுபவர். அவர் ஆலோசனையின் பேரிலேயே கருணாநிதி வாஜ்பேயியுடன் மோதுவதை தவிர்த்து வந்தார். ஆனால் தேர்தல் வருகிறதே. எஞ்சியிருக்கும் முஸ்லிம்களின் வாக்குகளையும் இழக்க அவர் தயாராகயில்லை. எனவே அப்படி ஓர் எச்சரிக்கை.

வை.கோ.வும், ராமதாசும் எப்படியோ போகட்டும், கருணாநிதி, மமதா, சந்திரபாபு நாயுடு போன்றோர் சங்க பரிவாரத்தின் அராஜகங்களை அனுமதிக்க மாட்டார்கள் என்பது தெளிவாகிறது. முஸ்லிம்களின் வாக்குகளை மனதில் கொண்டே இப்படியெல்லாம் செயல்படுவதாக கொண்டாலும், அவர்களது அணுகுமுறையின் காரணமாக ஓரளவேனும் இந்துத்துவ வெறியர்கள் கட்டுக்குள் வைக்கப்படுகிறார்கள். அந்த அளவில் அவர்களைப் பாராட்டலாம். ■

**கானகன்**

# பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

"சபாஷ்.... சரியான போட்டி!" என 'வஞ்சிக்கோட்டை வாலிபன்' படத்தில் பத்மினியும் வைஜந்திமாலாவும் ஆடும் நடனப் போட்டியில் பி.எஸ்.வீரப்பா பேசிய பிரபலமான வசனத்தை என் வாயிலும் வரச் செய்த நிகழ்ச்சியைப் பார்த்தேன். "நோர்வே நாட்டை சமாதான முயற்சியில் ஈடுபட்டு யுத்தத்தை நிறுத்த உதவுக!" என கோஷமிட்டவாறு சென்ற-காணாமல் போன படைவீரரின் பெற்றோர் சங்கம் ஏற்பாடு செய்த பேரணியைத்தான் குறிப்பிடுகின்றேன்.

கடந்தவாரம் வேடர்களின் ஆயுதங்களைச் சின்னமாகக் கொண்ட கட்சியின், நோர்வேயின் சமாதானத்திற்கு எதிரான வீரவிளையாட்டை விவரித்த நான், இந்த ஊர்வலத்தோடு போனஸாக இன்னொரு செய்தியையும் பார்த்தேன்.

'நோர்வே சமாதான முயற்சிக்கு ஆதரவாக பிக்குமார் அமைப்பு சமாதான பேரணி நடத்த ஏற்பாடு!' என்ற செய்திதான் அது. சபாஷ்.... சரியான போட்டி. கோவணப் புத்திக்காரருக்கு சரியான பதிலடி.

வாருங்கள், சேருங்கள், மோதுங்கள் என ஏதோ காணிவேல் காட்ட கூட்டிச் செல்வது போல், ரேடியோவிலும், தொலைக்காட்சியிலும் போட்ட விளம்பரத்தால், துள்ளிக் குதித்து இராணுவத்தில் சேர்ந்து துப்பாக்கி தூக்கியவர்கள், எண்ணிப்பார்க்காத அளவு எறிகணை தாக்குதலாலும், பொறிவெடிகளாலும் நிலைகுலைந்து, நிர்க்கதியாகி சரணாகதியானதால், இன்று காணாமல் போன படை வீரர் சங்கம் உதயமாகி, பெற்றோர் நோர்வே தூதரகம் நோக்கி நடைபவனி.

இழந்தவனுக்குத்தான் இழப்பைப் பற்றித் தெரியும். அதனால் உண்மை நிலை அறிந்து, வெல்ல முடியாத யுத்தத்தை நிறுத்தி தம் சொந்தங்களை காக்க புறப்பட்டு விட்டனர். சொகுசு வாகனங்களில் பாராளுமன்றம் போகும் கோவணப்புத்திக்காரரின் யுத்த வெறியை எதிர்த்தே இவர்கள் சமாதானம் வேண்டி குரல் கொடுக்கின்றனர்.

வியட்நாம் யுத்தத்தில்-அமெரிக்கா மூக்கை ஒட்டி நடாத்திய யுத்தத்தில் தம் பிள்ளைகள் வீணாக பலியாகிறார்கள் என அமெரிக்கப் பெற்றோர் அரசிற்கு எதிராக வெகுண்டெழுந்து நடாத்திய தொடர் போராட்டங்கள் தான் உண்மையில் அமெரிக்க அரசை வியட்நாமில் இருந்து படை வாபஸ் செய்யத் தூண்டியது. அதனை ஒத்த நிகழ்வு இலங்கையிலும் ஏற்பட இந்த பேரணி காரணியாகும் என எண்ணத்தோன்றுகிறது. இந்தப் பேரணி, நாளை பெரும்போராட்டமாக மாறலாம்; மாறவேண்டும்.

யுதத்தத்திற்கு தூபமிடுபவர்கள் எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என செயல்படும் சுய நல பிரகிருதிகளே.

தொடரும் யுத்தம் தமிழர்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டிற்கே ஒரு சாபக்கேடுதான்.

இதில் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய நிகழ்ச்சி, நோர்வே சமாதான முயற்சியில் ஈடுபடவேண்டும் என்ற பிக்குமார்களின் பேரணியாகும். ஏனைய மதத்தலைவர்களையும் இந்த பேரணியில் இணைத்தது, இனப் பிரச்சனையில் ஒரு காத்திரமான தீர்வை தர உதவும் என எதிர்பார்க்கலாம்.

கடந்த காலங்களில் மத சார்பான நடவடிக்கைகளே மனிதர்களை மதம் பிடிக்கச் செய்து இன விரோதத்தை வளர்த்ததென்பது வரலாறு. இன்று அந்த நிலைமாறி போதிமாதவனின் போதனைகள் புடம் போடப்படுவது காலத்தின் தேவையாகும். மத நல்லிணக்கம் தான் மனித இன நல்லிணக்கத்திற்கு அத்திவாரம். இந்த நாட்டில் அரசமரத்திற்கு உள்ள சட்டரீதியான பாதுகாப்பு கூட தமிழனாய்ப் பிறந்த காரணத்தால், அரசரத்தினத்திற்கும், தர்மரத்தினத்திற்கும் கிடைக்கவில்லை.

இதுவே அரசரத்ன, தர்மரத்ன என்றால் கவனிப்பே வேறு. இந்த நிலைதான் இனப்பிரச்சனைக்கு தூபமிட்டு தூண்டிவிட்டது. இன்று நிலைமை முற்றி முழு நாடும் சுடுகாடாகிவிடும் என்ற நிலையில் எண்ணித் துணிந்த கருமமே பௌத்த பிக்குமாரின் காலம் கடந்தாலும்-ஏற்பட்ட ஞானோதயமும், நோர்வே மத்தியஸ்தம் கோரிய பேரணியும்.

அரசையும் அதன் பிரதிநிதிகளையும் நம்பி பிரயோசனம் இல்லை என மக்களும், பௌத்த பிக்குகளும் எடுக்கும் இந்த சமாதான பேரணி பெரும் முன்னணியாக உருவாக, காணாமல் போன படையினரை மீட்க மட்டுமல்ல, கடுமையான சட்டங்களால் சிறைகளில் வாடும் அப்பாவி தமிழ் இளைஞர்களையும் விடுவிக்க குரல் எழுப்ப வேண்டும். எந்த வித விசாரணையுமின்றி சிறைகளில் வதைபடும் தமிழர்களுக்காக அரசின் கதவுகளையும் இவர்கள் தட்ட வேண்டும்.

சிஹல உருமய போன்ற இனவாதத்தைத் தூண்டும் செயலில் ஈடுபடுபவர்களின் வாலை ஒட்ட நறுக்க வேண்டும்.

வெறுமனே தமது பிள்ளைகளின் நலனையும் இன நலனையும் மட்டும் கவனத்தில் எடுத்தால் போதாது.

ஏனெனில் சுதந்திரம் வாங்கும் வரைதான் நாம் அனைவரும் இலங்கையராக இருந்தோம். அதன் பின் இன ரீதியாகப் பிரித்துப் பார்க்கப்பட்டோம்.

பிரித்தானியரால் முதலாவது படித்த இலங்கையராக தெரிவு செய்யப்பட்ட சேர் பொன் ராமநாதன் தன்னை குதிரை வண்டியில் வைத்து குதிரைக்கு பதிலாக இழுத்துவந்தவர்களின் பிற்கால நடவடிக்கையால் ஏமாற்றமடைந்து, மனம் நொந்து தன் கடைசிக்காலத்தில் யாழ் மண்ணில் வெந்து சாம்பலானார் என்பதும் வரலாறு. ■

**~குத்தியன்~**

# இலங்கைக்கு வெளிநாட்டு உதவி

## அலசுவது -இராஜதந்திரி

ஆண்டுதோறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பிரான்ஸின் தலைநகரான பாரிஸ் மாநகரில் இடம்பெற்றது.

இப்பாரிஸ் கூட்டத்திலேயே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கையின் அபிவிருத்தித்திட்டங்கள், மற்றும் அத்தியாவசிய சேவைகள் என்பவற்றின் பொருட்டு பெருந் தொகைப் பணத்தை வழங்குகின்றன.

1983ம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தையடுத்து இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் ஒரு தீராத நோயாக நீடித்துவரும் உள்நாட்டு யுத்தம் இலங்கையின் அபிவிருத்தியை முழு அளவில் மழுங்கடித்திருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கை அதன் உள்நாட்டு உற்பத்திகள் மூலமாகப் பெறுகின்ற அற்ப, சொற்ப வருவாய்கள் மட்டுமல்ல.
பெருந்தொகையில் வெளிநாடுகளிலிருந்து கடனுதவியாகவும், நல்லெண்ண அடிப்படையிலும் கிடைக்கும் பெருந்தொகைப் பணம் கூட உரிய பயனைத் தராதிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கையை தென்னாசியாவில் சிங்கப்பூருக்கு சமானமாகக் கட்டியெழுப்பப்போவதாகச் சூளுரைத்தே மறைந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகஞ்செய்து வைத்தார்.

ஆயினும் அவரால் எவ்விதத்திலும் சிங்கப்பூரின் தராதரத்துக்கு இலங்கையை உயர்த்த முடியவில்லை. மாறாக, உள்நாட்டு யுத்தமொன்றில் சிக்குண்டு சீரழியும் பின்தங்கிய ஆபிரிக்கத் தேசமொன்றின் நிலைக்கே இலங்கை தள்ளப்படுவதை அவரது ஜனாதிபதி ஆட்சி உறுதி செய்திருந்தது.

ஜே.ஆரின் ஆட்சிக்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டு வரப்பட்டதாகத் தெரிவித்தனர்.

ஆனால் அந்த நிறைவேற்று அதிகார ஆட்சியில் வெளிப்பட்ட சர்வாதிகாரப் போக்கு இன்று இலங்கையின் ஜனநாயக விழுமியங்களுக்கும் வேட்டுவைத்திருப்பதுடன், இலங்கையை முழு அளவில் ஒரு இராணுவ மயப்படுத்தப்பட்ட சூழ்நிலைக்கும் கொண்டு சென்றுள்ளது.

வடக்கு-கிழக்குப்பிரச்சனையை அரசியல் ரீதியாகக் கையாளுவதில் தோல்வியைத் தழுவியுள்ள இலங்கையின் ஆட்சியாளர்கள், இராணுவ ரீதியாகவும் அப்பிரச்சனையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதில் தோல்விகளைச் சந்தித்தே இருக்கின்றனர்.

இலங்கையின் சமூக, பொருளாதார நிலபரங்கள் மிகமோசமான கட்டத்தை எட்டியுள்ளதுடன் யுத்த அரக்கனின் கோரப்பசிக்கே தொடர்ந்து பல ஆண்டுகளாகப் பெருந் தொகைப் பணத்தை இலங்கையின் ஆட்சியாளர்கள் ஒதுக்கி வருகின்றனர்.

இதுவரைகாலமும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் இலங்கை அரசாங்கத்தினால் கேட்கப்படுகின்ற உதவிக்குச்சாதகமான முறையிலேயே கைகொடுத்து வந்தன.

இலங்கையின் அரசியல் நிலபரங்களைப் பற்றிப் பேசும்போதெல்லாம் வடக்கு-கிழக்குப்பிரச்சனையைத் தீர்கவேண்டிய அவசியத்தையே கடந்தகாலங்களில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் வலியுறுத்திவந்தன.

ஆனால் இத்தடவை இலங்கைக்கான உதவிகளை வழங்குவது தொடர்பாக வடக்கு-கிழக்குப்பிரச்சனை பாரிஸி மகாநாட்டில் ஒரு முக்கிய விடயமாக எடுக்கப்பட்டுள்ளதையே அறிய முடிகின்றது.

'சிலரைச் சிலகாலம் எமாற்றலாம்; ஆனால் எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது'. இலங்கையை பொறுத்தவரை கூட வடக்கு-கிழக்குப் பிரச்சனை தொடர்பாக சர்வதேச சமூகத்துக்கும் இது வரை பல்வேறு விடயங்கள் தெளிவற்றதாகவே இருந்துவந்தன.

ஆனால் நோர்வேயின் மத்தியஸ்த நடவடிக்கைகள் ஆரம்பித்ததையடுத்தே இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனை குறித்த உண்மை நிலவரத்தை சர்வதேச சமூகமும் தெளிவுற அறிய ஆரம்பித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தீர்ப்பதில் இலங்கையில் வெளிப்படுத்தப்படும் ஆர்வம் வெறுமனே ஒரு போலித்தனமானதாக இருப்பதையே சர்வதேச சமூகம் கண்டறிந்துள்ளது. பேச்சளவில் மட்டுமே அரசியல் தீர்வு பற்றிக் குறிப்பிடப்படுகின்றதே தவிர இராணுவ நடவடிக்கைகளுக்கே வடக்கு-கிழக்குப் பிரச்சனையில் அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை உலக நாடுகள் தெளிவாகவே அறிந்து கொண்டுள்ளன.

அரசியல் ரீதியாகவே வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தீர்க்க முடியுமென்பதையும், இராணுவ அணுகுமுறைகள் எவ்வித பயனையும் தரப்போவதில்லையென்பதையும் உணர்ந்துள்ளபோதிலும், யுத்தமே மூடத்தனமான முறையில் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதைக்காண முடிகின்றது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளாக இருப்பவை, அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக மிகவும் காத்திரமான நிலையிலேயே இருக்கின்றன.

இலங்கைக்கு உதவியாக வழங்கப்படும் பணத்தொகை, அபிவிருத்தித் திட்டங்கள், மற்றும் மக்களின் அத்தியாவசிய சேவைகளின் பொருட்டுப் பயனுள்ள விதத்தில் செலவு செய்யப்படவேண்டுமென்பதையே அந்நாடுகள் எதிர்பார்க்கின்றன. அத்துடன் அரசியல் ரீதியாகக் கூட ஜனநாயக விழுமியங்கள் பாதுகாக்கப்படுவதுடன் அடிப்படை மனித உரிமைகள் பேணப்பட்டு இனங்களுக்கிடையிலான சமத்துவம் நிலவ வேண்டுமெனவும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் விரும்புகின்றன.

ஆனால் அந்நாடுகளின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாகவே இலங்கையில் அனைத்து நடவடிக்கைகளும் இருந்து வருவதைக் காணமுடிகின்றது.

இதன் காரணமாகவே இதுவரை காலமும் பண உதவி வழங்குவதோடு மட்டும் நின்று விட்ட இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், எதிர் காலத்தில் இலங்கயின் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாகவும் தமது கரிசனையை வெளிப்படுத்தியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தைக் குட்டிச் சுவராக்கிவருவதோடல்லாமல் பாரிய சமூகப் பிரச்சனைகளும் உருவாகுவதற்கு வடக்கு-கிழக்கு சர்ச்சையே மூலகாரணமாக இருந்துவருகின்றது.

சுமார் இருபதைந்து வருடங்களுக்கு முன்னர் மிகச் சிறியளவில் இருந்து வந்த இலங்கையின் இராணுவம் தற்போது, மிகப் பொரியதாக வளர்ச்சி கண்டுள்ளது. இவ்வளர்ச்சியைக் கையாளும் பொருட்டே இலங்கை அரசு கோடிக்கணக்கில் பணத்தை வாரி இறைத்து வருகின்றது.

ஆண்டுதோறும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் மட்டுமல்ல. பிரச்சனைகள் பூதாகரமாகும்போது விசேட வரவுசெலவுத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டு பாதுகாப்புச் செலவுக்காகப் பணம் ஒதுக்கப்படுகின்றது.

இவ்வருட முதல்பகுதியில் ஆனையிறவு இராணுவத்தளம் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் வீழ்ச்சி கண்டபோது கூட சந்திரிக்கா அரசு ஆயுதத்தளபாடங்களுக்காக பெருமளவு பணத்தைத் திடீரென்று ஒதுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியிருந்தது.

இராணுவச் செலவுகள் மட்டுமல்ல. தற்போதை அராசங்கத்தின் அமைச்சரவை செலவுகளுக்குக் கூடப் பெருந்தொகைப்பணத்தை ஒதுக்க வேண்டியுள்ளது.

சந்திரிக்கா அரசாங்கத்தில் அமைச்சர்களது நியமனங்கள் பெருமளவில் காணப்படுவதால் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு கூட விசாலமானதாகவே இருக்கின்றது.

இதுதவிர ஒவ்வொரு மாகாணங்கள் தோறும் நிலவுகின்ற மாகாணசபை நிர்வாக முறை மற்றும் மாகாணசபை அமைச்சுக்கள் என்பவற்றுக்கும் பெருந்தொகைப்பணம் ஒதுக்கப்பட்டே வருகின்றது.

இவ்வாறு யுத்த நடவடிக்கைகளுக்காக ஒரு புறமும், ஏகப்பட்ட நிர்வாக நடவடிக்கைகளுக்காக மறுபுறமுமாக பெருந்தொகைப் பணம் ஒதுக்கப்படும் போது பொதுமக்களின் நலன்கருதிய அத்தியாவசிய சேவைகள் புறக்கணிக்கப்பட்டு வருபவையாகவே இருக்கின்றன.

இலங்கையில் கல்வி, சுகாதாரம் போக்குவரத்து போன்ற அத்தியாவசிய சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

வடக்கு-கிழக்கில் உள்நாட்டு யுத்தம் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் புதிய பிரச்சனைகள் பல்வேறு வடிவங்களிலும் நாளுக்கு நாள் இலங்கையின் சமூக அமைப்பில் தோற்றம் பெறுபவையாக இருக்கின்றன.

இந்நிலையில் இலங்கைக்கு எவ்வளவு பொருந்தொகையில் நிதி உதவி அல்லது பொருட்கள்; சேவைகளது உதவிகள் கிடைத்த போதிலும் அவை அனைத்தும் பயனற்றவையாகவே இருக்கின்றன.

இலங்கையின் ஆட்சியாளர்கள் உள்நாட்டுப் பிரச்சனைகளைச் சமாளிக்க முடியாத நிலையில் இருப்பதை சர்வதேச சமூகம் தற்போது நன்கறிந்துள்ளது.

இதன் காரணமாகவே வெறுமனே உதவிகள் என்று பணத்தையும், சேவைகளையும் வழங்குவதைவிட, இலங்கையின் வளர்ச்சிக்கு முட்டுகட்டையாக இருக்கும் காரணிகள் மீது கவனத்தைச் செலுத்த சர்வதேச சமூகம் முன்வந்துள்ளது.

அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற பொதுத்தேர்தலைக் கண்காணிக்க ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கை வந்திருந்தனர்.

அப்பிரதிநிதிகள் குழுவின் தலைவர், கருத்து வெளியிடுகையில், இலங்கையின் அரசியல் நடவடிக்கைகள் மற்றும் ஜனநாயக நடைமுறைகள் தொடர்பாக ஐரோப்பிய யூனியன் கொண்டுள்ள கரிசனையை வெளியிட்டிருந்தார்.

இது தவிர நோர்வேயின் சமரச முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளதையடுத்து மேற்குநாடுகள் பலவும் அச்சமரச முயற்சியை ஆதரிப்பவையாகவே இருக்கின்றன.

இலங்கைக்கு உதவி வழங்கும் மேற்கு நாடுகள் பலவும் நோர்வேயின் நட்பு நடுகளாகவே இருக்கின்றன.

எனவே இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்தில் நோர்வேயின் மத்தியஸ்த நடவடிக்கையை இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளும் ஆதரிப்பதோடு, அம்மத்தியஸ்தம் வெற்றிபெற வேண்டுமென்றே அவை எதிர்பார்க்கின்றன.



இலங்கையைப் பொறுத்தவரை கடந்த பல வருடங்களாகவே யுத்தச் செலவீனமாக மேற்கொள்ளப்பட்டுவரும் பெருந்தொகைப் பணம் மீதப்படுத்தப்பட்டிருக்குமேயானால் இலங்கை ஒரு சுபீட்சம் நிறைந்த நாடாகவே உருமாறியிருக்கும்.

ஆனால் இலங்கையின் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்களால் மட்டுமல்ல. தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியாளர்களால் கூட இனப்பிரச்சனைக்கோ அல்லது நீடித்துச் செல்கின்ற யுத்தத்துக்கோ ஒரு முடிவைக்காண முடியாதுள்ளது.

இலங்கை வெளிநாடுகளிடமிருந்து பெருமளவு நிதியுதவியை எதிர்பார்க்கின்றது. ஆனால் அந்த உதவிகளில் பெரும்பாலானவை வீணே விரயமாகின்றன.

இலங்கையின் வளர்ச்சியில் கரிசனை கொண்டு உதவி வழங்க முன்வரும் நாடுகளிடம் பணத்தை மட்டும் இலங்கையின் ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆனால் அந்நாடுகள் வழங்க முன்வரும் ஆரோக்கியமான அரசியல் யோசனைகளைப் புறந்தள்ளுவதாகவே இலங்கை ஆட்சியாளர்களின் போக்குக் காணப்படுகின்றது.

இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு இனப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் போதுமானளவு அக்கறை இருப்பதைக் காணமுடியவில்லை.

ஆனால் சர்வதேச சமூகம் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்பதில் பெருமளவு கரிசனையை அண்மைக்காலங்களில் வெளிப்படுத்தி வருகின்றது.

எனவே இலங்கைக்கு வெளிநாடுகள் எதிர்காலத்தில் உதவிகளை வழங்கும் போது இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கான அழுத்தங்களையும் பிரயோகிக்குமென்றே அனுமானிக்க முடிகின்றது.

இந்நிலையில் இலங்கைக்கான உதவியென்னும் போது, அவ்வுதவி அழிவுக்காகவும் மூர்க்கத்தனமான யுத்தத்துக்காகவும், வழங்கப்படலாகாது என்பதையே உலக சமூகம் தற்போது உணர்ந்துள்ளதையே இனப்பிரச்சனை மீதான அதன் கரிசனை புலப்படுத்துகின்றது.

## அதிரடி அய்யாத்துரை



**சமாதானப் பேச்சு விரைவில்** தொடங்குமோ? என்றொரு தொலைபேசிக் கேள்வி, உயிர்ப்பலி நிறுத்தப்பட்டால் மேசையில இருந்து கதைக்கலாம். அது நியாயம். கை குலுக்கி கதைச்சுக் கொண்டிருக்கும் போதே காலால் சொறிபடலாம் எண்டால் எப்படி? அது சரி புலி பசித்தாலும் புல்லை.....

**படையினருக்கு மனித உரிமைகள்** பற்றிப் படிச்சுக் குடுக்க அமெரிக்காவில் இருந்து ஆக்கள் வரப் போகினமாம். அதுபோல 'மக்கள் விடுதலை' பெற புரட்சிகரத் தத்துவம் போதிக்க ரஷ்யா, சீனா, கியூபாவில் இருந்து ஆரும் வந்து சிவப்புச் சட்டைகளுக்கு போதித்தால் நல்லாயிருக்கும்.

**சரணடையும் வரை** சண்டை தொடரும். 'புத்தம் சரணம் கச்சாமி' என்பதற்கு பதில் 'யுத்தம் சரணம் கச்சாமி' எனத் தொடங்கி மும்மணிகளையும் தொழலாம் போல....

**யாழ்ப்பாண மாவட்டத்தில்** செயற்படும் வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடு குறித்து முறைப்பாடுகள், அதிகரிப்பு. மக்களுக்காக மக்களின் பேரால் பெறப்படும் நிதி பற்றி தலைமைப் பீடங்களுக்கு 'பெட்டிசன்' போகப் போகுதாம்.

**கனத்தையில் இந்து** மயான மண்டபம் கையளிப்பு. ஜூலை 83ல் கலவரம் ஆரம்பிச்ச இடத்தில அடக்க மைதானம். கலவரம் நடத்திய பெருமை பூண்ட பச்சைக் கட்சியின் தமிழ்த் தலைவர்களுக்கு சுடலை மண்டபம் கையளிப்பு வரவேற்பில் ஏகப்பட்ட வரவேற்பு. எம்மவர்களுக்கு 'சுடலை ஞானம்' கூட வர்ற மாதிரித் தெரியேல்லை.

**விஜயவுக்கு சிலை வைக்க** அதே தங்கமான வேலவருக்கு ஓர் ஆசை. நல்ல விசயம் தான். விஜய நடந்து போன பாதையில் சிலையும் போனால் சனம் சந்தோஷப்படலாம். காத்தில தூக்கிக் கொண்டு பறந்துபோய் அங்கே நட்டு வைக்கிறதால என்ன பிரயோசனம்?

**யாழ்ப்பாணத்தை எப்படியும்** சண்டை பிடிச்சு மீட்க வேணும் எண்ட கனவுக்கு குறுக்கே சமாதானப் பேச்சு வருவது கவலைக்குரிய விசயமாய் காட்டுக்குள்ள கருதப்படுகுதாம்.

## திகில் தொடர்

# மங்கள விலாஸ்

**ரி**ப்போர்ட்டர் யோகேஷ் துணிச்சல் நிறைந்த துடிப்பான இளங்காளை என்ற போதிலும், மங்கள விலாஸ் மாளிகையின் மர்மம், உடலில் தளர்வை ஏற்படுத்துவது போலிருந்தது.

"வாட்ச்மேன்.... இந்த மங்கள விலாஸ் மாளிகையில் பேய் எப்படி ஜீவிக்க முடியும்? இங்கே பேய் வாசம் செய்வது இதன் உரிமையாளரான ப்ரொடியூசருக்கு தெரியாதா?"

கேட்டான் யோகேஷ்.

"தெரிந்திருக்க சாத்தியமில்லா...."

என்றான் வாட்ச்மேன் கிழவன்.

"உனக்கு மட்டும் அது எப்படி தெரிந்தது? அதை ஏன் முன்கூட்டியே சொல்லி உன் முதலாளியை எச்சரித்து படப்பிடிப்பு குழுவினர் இங்கே வர முடியாதபடி தடுக்கவில்லை?"

யோகேஷ் கேள்வியில் சற்று சூடு பறந்தது.

"தடுத்திருக்கலாம்..... ரெண்டு தெவசத்திற்கு முன்பே. அதாவது ரெண்டு நாட்களுக்கு முன்பு ஈனாப்பேச்சி என்ற குறிகாரி இவிடே வந்தாச்சு."

ஈனாப்பேச்சி என்றதும் யோகேஷ் சுறுசுறுப்பானான். இங்கே அடுக்கடுக்காக ஏதேதோ மர்ம நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன என்பது புரிந்தது.

"வந்து....?"

"குறி சொன்னாள்."

இந்த தொண்டு கிழவனுக்கு அப்படி என்ன குறிதேவைப்பட்டது என்பது போல் யோகேஷ் பார்த்தான்.

"என்ன சொன்னது? ஈனாப்பேச்சி பெண் தானே?"

"சரிதன்னே தம்புடு... அது பெண் குட்டியாக்கும். கருத்தக் குட்டி என்ற போதிலும் லட்சணம் உண்டு."

"ஈனாப்பேச்சியோட பெயர் தெரியுமா?"

"தெரியாது.... குறிகாரி."

"சரி.... என்ன சொன்னது? இந்த தள்ளாடுகிற வயசிலே நீ ஏன் குறி கேட்ட.... நூறு ஆண்டுக்கு மேலேயும் வாழணும் என்கிற ஆசையா?"

"அதே.... அதே.... தீர்க்காயிசோட ஜீவிக்கணும். அதோட இந்த மூப்பு வயசிலேயும் திடீர்ன்னு எனக்கு கல்யாண ஆசை வந்துட்டுது."

அதை கேட்டதும் யோகேஷ் 'ஹக்' என்று சிரித்து விட்டான்.

கிழவனுக்கு அவன் சிரித்த தோரணை என்னவோ போலிருக்க முகம் மாறி போனான்.

"தம்பிகாரா.... சிரிக்காத... எத்தனையோ பேர் புல்லு வெட்டுக்காரர் நாட்டு நடப்பு பறைய கேட்டிருக்கேன். என்னை விடவும் அதிக வயசன்மாரு கூட சின்னக் குட்டிகளை கல்யாணம் கழிச்சிருக்கு. குழந்தைக் குட்டி பெத்திருக்கு."

ஓர் இளைஞன் போலவே நிமிர்ந்து உட்கார்ந்து, சிறிதே வெட்கப்பட்டான் வாட்ச்மேன் சம்பூர்ண்.

"ஓ.கே., ஓ.கே., கல்யாணம் கழிப்பது அவரவர் விருப்பம்.... சரி.... ஈனாப்பேச்சியைப் பார்த்த பிறகு தான் கல்யாண ஆசையே வந்ததோ....?"

"அதே.... அதே....."

"சரி..... அந்த குறிகாரிகிட்டே என்ன கேட்டே?"

"அதை நினைச்சால் இப்போது கூட பயங்கரமான பயம் வருது.... போன மாசம் ஒரு பவுணர்மி ராத்திரியில ஞான் காவல் மாடத்தில் படுத்துறங்கி.... ஞான் என்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்த போது திடீர்ன்னு பயங்கரமான சொப்பனம் கண்டேன்."

"சொப்பனமா?"

"அதே .... அதே.... யாரோ என் பேரை சொல்லி விளித்தது போல இருந்தது. எழுந்து பார்த்தேன். நாலைஞ்சு தீவட்டிகளோட சில தடியன்மாரும், தடிச்சிகளும் என்னை கடந்து போயி.... ஒரு பெண்குட்டி தலை முடிகளை விரிச்சிப் போட்டுக் கொண்டு, அழுதபடி வர மாட்டேன்னு அடம்பிடிச்சி, உடனே ஆ தடியன்மார் அவளோட வாயினுள் துணியை அடைச்சு தூக்கிக் கொண்டு போனது. அவிடே ஒற்றை பெண் குட்டியும் உண்டு. நெற்றி நிறைய குங்குமம் அப்பி, அப்படியும், இப்படியும் ஆடிக் கொண்டே போயி.... சடா முடிக்காரியாக்கும்.

நான் பயத்தால் செத்து.... ஒண்ணும் புரியல. ஆபத்துன்னு கத்த நினைத்தாலோ தொண்டைக்குழியோடு காற்று நின்னு போச்சு.... சப்தமே வரல... நெஞ்சு 'டொக் டொக்'ன்னு அடிச்சுது.... என்னோட மூச்சு நின்னு போயிடுமோன்னு கூட ஞான் சம்சயித்து...

ஈரல் குலையே அறுந்து தொங்குவது போல் என்னோட உடம்பு 'வெட வெட'ன்னு நடுங்கி, தேகம் பூராவும் வியர்த்துக் கொட்டினாலும் தைரியத்தோட மறைவா, மறைவா பதுங்கி நடந்து போய் நோக்கி.... என்றே அச்சா.... என்றே பக வானே... அதற்கு மேலும் என்னால் பேச முடியல!"

வாட்ச்மேன் குரல் இறுக்கமடைய, பீதியின் உச்சக்கட்டத்தில் வியர்த்தான். மேற்கொண்டு பேச எத்தனித்த போது உதடுகள் ஒன்றுக்கொன்று ஒட்டிக் கொண்டு விடுபடச் சிரமப்பட்டன.

யோகேஷ் எச்சரிக்கையோடு, அவனுடைய தோளைத் தொட்டு உசுப்பினான்.

"தாத்தா.... பயப்பட வேண்டாம். உமது பேரன் போல நான் இருக்கேன். சொல்லு... அப்புறம் என்ன நடந்தது?"

கிழவன் இன்னும் பலமாக மூச்சிறைத்து, முகத்தை மேலும் பலமாக விகாரமாக்கி வாயை கோணிக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தான்.

"அந்த கும்பல், ஆ பெண் குட்டியின் உச்சந்தலை முடிகளை பிடித்து 'தர தர'வென்று இழுத்துக் கொண்டு இருண்ட குகைக்கு போனது."

"குகையா?"

"எனிக்கி அப்படித்தான் ஞாபகம். நம்பளும் ஏதோ ஒரு தைரியத்துடன் உள்ளே நுழைந்து, தூணோடு ஒட்டி மறைந்து நின்று கொண்டேன். அவர்களிடமிருந்து அந்த பெண்குட்டி

## திகில் கதை மன்னன்
## பி.டி.சாமி

யைக் காப்பாத்தணும் எங்கிற நினைப்பு எனிக்கி இருந்தது. ஆனால்–"

"சரி .... அப்புறம் என்ன நடந்தது?"


"ஓ! பகவானே... நான் புரிந்து கொண்டேன். அவிடே தீ வெட்டி வெளிச்சம் உண்டாயிருந்தது.... நோக்கும் போழ்பேடிச்சிப் போயி. களிமண் கொண்டு அகோர தோற்றத்தில் ஒரு சிலை உண்டாயிருந்தது. முன் வசத்தில பெரிசா ஒரு குழி தோண்டி, தீக்கங்கல் அவிடே உண்டாகியிருந்தது. ஈ பெண் குட்டியை உயிரோட வெட்டி நரபலி குடுக்க போறாங்கன்னு தீர்ச்சையாக ஞான் உணர்ந்து. பின்னே சிறிது நேரத்தில் ஆ குங்குமக்காரி சப்பணம் போட்டு உட்கார்ந்து அரளி புஷ்பத்தைக் கையில் எடுத்து, சிலைக்கு ஒவ்வொண்ணாக இட்டு பூஜை செய்தது; மந்திரங்களை ஜெபித்தது; உச்சாடனம் செய்தது. பின்பு எழுந்து தலைசடா முடிகளை விரிச்சுப் போட்டுக் கொண்டு ஆடியது. ஊளையிடுவது போல் பாட்டுப்பாடி ஆ பெண்குட்டி மீது மஞ்சள் நீர் தெளித்து, அதின்டே நெத்தியில செந்தூரத்தை எடுத்து அப்பியது. செவ்வரளிபூ மாலையை எடுத்து, கழுத்தில ஆரம் மாக போடப்பட்டது. பெண்குட்டியால சப்தம் போட முடியல, வாயினுள் துணி அடைக்கப்பட்டு கைகள் இரண்டும் பின்னால் சேர்த்து மணிக்கட்டோடு கயிறு கொண்டு கட்டியிருந்தது"

கிழவன் பேச்சைத் தொடர முடியாமல் திக்கு முக்காடினான்.

"அப்புறம் என்ன நடந்தது ஓல்டு மேன்.... கமான்.... பேசு.... பயப்படாமல் தைரியமாகச் சொல். நான் இருக்கிறேன்," வற்புறுத்தினான் யோசேஷ்.

"உக்கிரமாக பூஜை நடந்தது. கொம்பு வாத்தியம் 'பூம் பூம்' என்று முழங்கியது. அப்போது திடீர்ன்னு நீளமான கொலை வீச்சுவாளை பூசாரிக்காரி கையில் எடுத்தாள். தலை விரி கோலமாக முன்னுக்கும் பின்னுக்குமாக நடந்தாள். திடீர் திடீர்ன்னு ஆவேசம் கொண்டு ஊளையிட்டாள்.

ஆ பெண்குட்டி புழுவாய் துடிச்சு... கழுத்து நரம்பு பொட்டிச்சது போல மூக்கை தூக்கி கண்கள் வெளியே தெறிப்பது போல மரண பயங்கரத்தோட நோக்கியது. தப்பிக்கான் வழி தேடி அப்படியும், இப்படியும் உடம்பை முறுக்கிக் கொண்டு துள்ளி, நிமிஷ நேரத்தில பளபளக்கின்ற வீச்சரிவாள் அவளோட கழுத்தில இறங்கி ரத்தம் பீய்ச்சியடிக்க தலை



பனங்காய் போல் துள்ளி தீக்குண்டத்திலே விழுந்து 'குப்பென்று' எரிந்தது. தீப்பந்தம் போல் எரிந்துப் பொசுங்கியது.

"ஞான், என்றே தலையை யாரோ வெட்டி எடுத்து தீக்குண்டத்தில் வீசியது போல பயங்கரமாக பேடியாகி பிராணன் போய்விட்டது போல் கதறி அப்படியே 'மயக்கமாகி பிரேதம் போல் பேச்சு மூச்சு இல்லாதவன் போலாகி விட்டேன். அதன் பிறகு நடந்தது எதுவுமே ஓர்மை இல்லா."

வாட்ச்மேன் கிழவன் பேச்சை நிறுத்தி உடல் மேலும் தளர்ந்து, 'வெட வெட'வென்று நடுங்கிக் கொண்டிருந்தான். முகம் தண்ணீரில் விறைத்துப் போன சவம் போல் வெளுத்து போயிருந்தது.

யோகேஷ் அவனையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். அவன் சிறிது நேரம் ஆசுவாசப்படுத்திக் கொள்ள அனுமதித்து விட்டு மீண்டும் பேச்சை தொடர்ந்தான்.

"வாட்ச்மேன் பெரியவரே..... நீங்கள் கண்டது நிச்சயமாக பயங்கர கனவு தானா?"

"கனவு தான்! அதில் சம்சியம் வேண்டே.. ஞான் காவல் மாடத்திலேயே உறங்கியபடியே கிடந்து. சூரியவெளிச்சம் என் முகத்தில் சுர்ரீனு பட்ட பிறகு தான் கண்ணைத் திறந்து நோக்கி... நடு ஜாமத்தில கண்டது கெட்ட சொப்பனம்னு உணர்ந்து..."

"எல்லாம் சரி... இந்த மங்கள விலாஸ் மாளிகையில் பேய் வாசம் செய்வதாக கூறி சினிமாக்காரங்களை எச்சரித்தாயாமே.... அது எப்படி? மரண ஆபத்து ஏற்படும்னு எப்படி தெரியுமா?"

யோகேஷ் கேட்டு வற்புறுத்தவே வாட்ச்மேன் கிழவன் சங்கடமாக முகத்தை சுளித்து, நெற்றியைச் சுருக்கிக் கொண்டு சொன்னான்.

"ஒரு செவ்வாய்க்கிழமை ராத்திரி நடு ஜாமம் இருக்கும். நான் காவல் மாடத்தினுள் படுத்து உறங்கிக் கொண்டிருக்கும் போது சிவப்புப்பாவாடை உடுத்திக் கொண்டு குள்ளமான உருவம் என்னைத் தட்டி எழுப்பி, அபாயச் சங்கு முழங்கியது. அது குட்டிப் பிசாசே தான்!"

மீண்டும், பீதி கிழவனை தாக்கியது.

(திகில் தொடரும்)

## நடிப்புக்கு முழுக்குப்போடும் நடிகை




'**டை**ட்டானிக்' படத்தில் கதாநாயகியாக நடித்ததன் மூலம் உலகப் புகழ் பெற்றிருப்பவர் கேட் வின்ஸ்லெட்.

கோடிக்கணக்கான இரசிகர்களின் மனதில் இடம் பிடித்த கேட் வின்ஸ்லெட்டின் மனதில் இடம் பிடித்தவர் ஹொலிவூட் பட உதவி இயக்குநர் ஜிம் தரப்லீடன்.

1997ம் ஆண்டு இவர் 'கைடியஸ் கிங்கி' என்ற படத்தில் பணியாற்றிய போது, வின்ஸ்லெட்டிற்கும் இவருக்குமிடையே காதல் மலர்ந்தது.

1998ம் ஆண்டு நவம்பர் மாதம் இவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டனர். திருமணம் முடித்து 2 வருடங்கள் முடியும் தறுவாயில், வின்ஸ்லெட் அழகான பெண் குழந்தை ஒன்றைப் பெற்றுள்ளார்.

வின்ஸ்லெட் குழந்தை பெற்ற தகவலைக் கேள்விப்பட்ட ஹொலிவூட் பிரபலங்கள் திரண்டு வந்து வாழ்த்தினார்கள்.

ஜிம்-வின்ஸ்லெட் தம்பதி, தெற்கு இங்கிலாந்தில் இயற்கை எழில் கொஞ்சும் நதிக்கரை ஓரத்தில் பல கோடி ரூபாய் செலவில் சொகுசு பங்களா ஒன்றைக் கட்டி வாழ்ந்து வருகின்றனர்.

குழந்தை பெறுவதற்கு முன், தான் தொடர்ந்து நடிக்கவுள்ளதாகக் கூறிவந்த வின்ஸ்லெட், இப்போது நடிப்புக்கு முழுக்குப் போடும் எண்ணத்தில் இருக்கிறார்.

"இப்போது என் மகளை வளர்ப்பது தான் எனக்கு முக்கியம். சினிமாவில் நடிப்பது இரண்டாம் பட்சம். இப்போதைக்கு நான் நடிக்க மாட்டேன். சிலவருடங்களுக்குப் பின் நான் நடிக்கலாம். அது அந்தக்காலகட்டத்தைப் பொறுத்தது!" என்று கூறியுள்ளார் கேட் வின்ஸ்லெட்.

## வல்லுறவில் ஆசிரியர்கள் முதலிடம்

**தெ**ன்னாபிரிக்காவில் கடந்த 10 வருடங்களில் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பெருகி வருவதாக ஒரு புள்ளிவிவரம் தெரிவித்திருக்கிறது. இதில் வேதனையான விஷயம் என்னவென்றால் ஆசிரியர்கள் தான் மாணவிகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவதில் முன்னணி யில் இருக்கிறார்கள்.

பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்களில் 33 சதவீதமானவர்கள் தமது ஆசிரியர்களால் வல்லுறவுக்குட்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

'எனக்கு ஒத்துழைக்காவிட்டால் உன்னை ஃபெயிலாக்கி விடுவேன்' இந்த வார்த்தைகளைக் கூறித்தான் ஆசிரியர்கள் மாணவிகளை வேட்டையாடி இருக்கிறார்கள்.

நாடுமுழுவதும் 11 ஆயிரத்து 500 இளம்பெண்களிடம் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பின்போது, தாங்கள் சிறுமிகளாக இருந்த போது பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு பல கொடூரங்களுக்குள்ளாகி இருக்கிறார்கள்.

சிறுமிகளாக இருந்தபோது வல்லுறவுக் குட்படுத்தியதில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு இருக்கிறது என்று பாருங்கள்

ஆசிரியர்கள்-33 சதவீதம், உறவினர்கள்-25 சதவீதம், முன்பின் தெரியாதவர்கள்-20 சதவீதம், குடும்ப நண்பர்கள்-11 சதவீதம். இந்தத் திடுக்கிடும் கருத்துக் கணிப்பு தென்னாபிரிக்க அரசுக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது.

## விஷப்பாம்புகளுடன் விளையாட்டு



'**பா**ம்பென்றால் படையும் நடுங்கும்' என்பதெல்லாம் புவனேஸ்வரம் என்ற இடத்தவர்களுக்கெல்லாம் பொருந்தாது போலும்.

தமிழ்நாட்டில் உள்ள புவனேஸ்வரம் என்ற ஊரில் பச்சைக் குழந்தைகள் கூட பாம்புடன் விளையாடி வருகிறார்கள், என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

ஆசியாக் கண்டத்திலேயே அதிகமான பாம்பாட்டிகள் வசிக்கும் ஊர் புவனேஸ் வரத்தை அடுத்த பத்மகேசபுரம் என்ற ஊர் தான். இங்கு சுமார் 550 பாம்பாட்டிக் குடும்பங்கள் வசிக்கின்றன.

இவ்வளவு பாம்பாட்டிகள் இங்கு வசிப்பதற்கு என்ன காரணம் என்கிறீர்களா? வேறொன்றுமில்லை, இந்தப்பகுதியில் ஆயிரக்கணக்கில் பாம்புகள் வசிப்பது தான் இதற்குக் காரணம்.

வருடத்தில் பல நாட்கள் இந்த ஊரில் இந்தப்பாம்பாட்டிகள் இருக்க மாட்டார்கள். மேற்கு வங்கம், மத்திய பிரதேசம், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு இவர்கள் பாம்புகளைக் கொண்டு சென்று வித்தை காட்டி, பணம் சம்பாதிக்கிறார்கள்.

இந்தக் கிராமத்தில் வசிக்கும் எந்தக் குழந்தையும் பாம்பைக் கண்டு பயப்படுவதே கிடையாதாம். மாறாக பொம்மைகளை வைத்து விளையாடுவதைப் போல் பாம்பை வைத்து விளையாடுவார்களாம்.

எல்லாவீடுகளிலும் குடும்பத்தோடு குடும்பமாக கூடைகளில் பாம்புகள் வசிப்பதெல்லாம் இங்கு சர்வசாதாரணம். இப்படி பாம்புகளை கூடைகளில் வைத்திருந்து வெளியூர்காரர்களுக்கு இவர்கள் விற்று வருகிறார்கள்.

சாதாரண பாம்புகள் என்றால் 100 முதல் 200 ரூபாவும், நாகப் பாம்புகள் என்றால் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் ரூபாவுக்கும் விற்கப்படுகிறது.


அதெல்லாம் இருக்க, மிகவும் சுவாரசியமாகப் படித்துக் கொண்டு இருக்கிறீர்களே, உங்களது கால்களுக்குக் கீழே ஏதோ ஊர்ந்து போவது போல் இருக்கிறதா?

# தாய்ப் பாசம்

→ **தா**ய்ப்பாசத்திற்கு ஈடில்லை என்பதற்கு இன்னொரு சாட்சி இந்தக் காட்சி.

சாண்டியாகோ வனவிலங்குப் பூங்காவில் உள்ள கொரில்லாக் குரங்குகள், குட்டிகள் போடுவது சாதாரணமாகி விட்டது. 25 வருடங்களில் இந்தப் பூங்காவில் இதுவரை 16 கொரில்லாக்கள் பிறந்துள்ளன.

லோனி என்ற 9 வயது பெண் கொரில்லா தன் குட்டியைக் கட்டிக் கொண்டு என்னமாய்க் கொஞ்சுகிறது பார்த்தீர்களா?




# நகலுடன் அசல்

↓ **அ**மெரிக்காவின் முதற் பெண்மணி என்ற பெருமையை இன்னும் சில நாட்களில் இழக்கப்போகிறார் ஹிலாரி கிளின்ரன். இருப்பினும் அரசியலை இவர் விடமாட்டார் போல் இருக்கிறது.

அமெரிக்காவின் செனட் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஹிலாரி அடுத்தடுத்த அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களத்தில் குதித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இவரது கணவர் கிளின்ரனும் செனட் சபை உறுப்பினராக இருந்து பின்னர் அமெரிக்க ஜனாதிபதியானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் நியூயோர்க் செனட்டில் வேட்பாளராக நின்ற ஹிலாரி வாக்களித்து விட்டு, வெளியே வந்தபோது, வெளியே தனது உருவ முகமுடி அணிந்த நபருடன் நின்ற காட்சியே இது.








# மிகச் சிறிய வாகனம்

↑ **உ**லகிலேயே மிகவும் சிறிய தீயணைப்பு வாகனம் தான் இது. ஜெர்மனியில் தயாரான இந்தத் தீயணைப்பு வாகனம் மணிக்கு 50 கிலோமீட்டர் வேகத்தில் செல்லக்கூடியது.

2.7 மீட்டர் நீளமான இந்த வாகனம் 290 கிலோ எடை கொண்டது. இதில் ஒரு தீயணைப்பு வீரர் மட்டும் தான் பயணம் செய்யலாம்.

சமீபத்தில் ஜெர்மன் தலைநகர் பெர்லினில் வெள்ளோட்டம் விடப்பட்டபோது இப்படம் பதிவானது.

(படஉதவி: அஹமட் நியாஸ்-சியோல்)

# வயிற்றை வெட்டி கடத்தப்பட்ட குழந்தை

↑ **தா**யின் வயிற்றை வெட்டிக் கடத்திச் செல்லப்பட்ட பச்சிளம் குழந்தையை பொலிசார் மீட்டு, அதன் தந்தையிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று அமெரிக்காவில் நிகழ்ந்திருக்கிறது.

மிஷல் பிகா என்ற 39 வயது பெண்மணி 23 வயதான திரேசா என்ற நிறைமாதக் கர்ப்பிணியை முதுகில் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டு, திரேசாவின் வயிற்றை வெட்டி குழந்தையை எடுத்துக் கொண்டு சென்று விட்டார்.

அது தனது குழந்தை என்றும் மற்றவர்களிடம் கூறினார். ஆனால் மிஷலைத் தேடிப்பிடித்த பொலிசார் அவரைப் பிடிக்கச் சென்றனர். மிஷல் தற்கொலை செய்து விட்டார். பிறந்து ஒரு வாரமேயான அக்குழந்தை மிஷலின் வீட்டிலிருந்து மீட்கப்பட்டு, பின்னர் தந்தை ஜோன் அன்ட்ரூஸிடம் ஒப்படைக்கப்பட்டது.

தகவல் பெட்டி



# பொம்மை விலை

← **இ**ந்த அழகிய பொம்மையின் மதிப்பு 9 ஆயிரத்து 200 அமெரிக்க டொலர். அதாவது ஏழரை இலட்சம் ரூபாய்.

இவ்வளவு விலை கொடுத்து வாங்க இந்தப் பொம்மையில் என்ன தான் இருக்கிறது என்கிறீர்களா?

அழகிய ஆடை அணிகளுடன் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள பொம்மைக் கடை ஒன் றில் இந்தப் பொம்மைக்குத்தான் ஏகப்பட்ட கிராக்கி யாம்.

இதை மனதில் வைத்துக் கொண்டு இந்தப் பொம்மையின் விலையை இப்படி எக்கச்சக்கமாக உயர்த்தி விட்டார் தக்காரா என்ற ஜப்பானின் மிகப் பெரிய பொம்மைகள் விற்பனையாளர்.

# முகப்பில் பிரசாந்த் மனிஷா



அப்பாஸ்-மும்தாஜ்
படம்: மலபார் போலீஸ்



பிரபுதேவா-அஞ்சலா...
படம்: உள்ளம் கொள்ளை...

## மினி சினி

* தமிழில் இருந்து தெலுங்குக்குச் சென்று அங்கு பிரபலமாக இருக்கும் டாக்டர் ராஜசேகர் நேரடித் தமிழ்ப்படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். வசந்த பாலன் என்ற புதியவர் இயக்கும் இப்படத்திற்கு 'ஆதி' என்று பெயரிடப்பட்டுள்ளது.

* ஷக்தி சிதம்பரம் இயக்கத்தில் சத்யராஜ்-திவ்யா உன்னி-மும்தாஜ் நடிக்கும் 'மிஸ்டர் நாரதர்' படத்தில் கௌரவ வேடத்தில் ரோஜா நடிக்கிறார். இதில் ரோஜாவுக்கு ஒரு பாடல் காட்சியும் இருக்கிறது.

* அஜித்-ஜோதிகா நடித்த 'முகவரி' படத்தை இயக்கிய துரை இப்போது விக்ரம் நாயகனாக நடிக்கும் 'காதல் சடுகுடு' படத்தை இயக்கி வருகிறார். இதையடுத்து இவர் விக்ரம்-மாதவன் இணைந்து நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

* நாத்திகக் கருத்துக்களை மையமாக வைத்து 'புரட்சிக்காரன்' படத்தை எடுத்த வேலுபிரபாகரன் அடுத்து 'தீபாவளி' என்ற படத்தை எடுக்கவுள்ளார். இந்தப் படத்திலும் சத்யராஜ்தான் கதாநாயகன்.

* 'டபுள்ஸ்' படத்தைத் தொடர்ந்து பார்த்திபன்-தேவயானி ஜோடியாக நடிக்கும் 'நினைக்காத நாளில்லை' படத்தைத் தயாரித்து வரும் ராஜன் அடுத்து மும்தாஜ் இரட்டை வேடத்தில் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.

* இராமநாராயணன் இயக்கத்தில் 'பாளையத்து அம்மன்' படத்தில் அம்மன் வேடத்தில் நடித்த மீனா இப்போது அர்ஜுன் நடிக்கும் 'ஸ்ரீ மஞ்சுநாதா' என்ற கன்னடப் படத்தில் பார்வதியாக நடிக்கிறார். சிவபெருமானாக சிரஞ்சீவி நடிக்கிறார்.

## மீண்டும் இதேஜோடி

சத்யராஜ்-குஷ்பு நடித்த 'மலபார் போலீஸ்' படத்தில் இரண்டாவது ஜோடியாக அப்பாஸ்-மும்தாஜ் ஜோடியும் நடித்திருந்தது. இந்த ஜோடி இப்போது மீண்டும் இணைந்திருக்கிறது. இதுவும் சத்யராஜ் படம் தான். 'என்னம்மா கண்ணு' படத்தை இயக்கிய ஷக்தி சிதம்பரம் தற்போது இயக்கிவரும் 'மிஸ்டர் நாரதர்' படத்தில் சத்யராஜ்-திவ்யா உன்னி ஜோடியாக நடிக்கிறார்கள். இவர்களுடன் அப்பாஸ்-மும்தாஜ் ஜோடியும் நடிக்கிறது.

* அருண்குமார் கதாநாயகனாக நடிக்கும் 'புத்தன்' படத்தின் கதை பாதாள உலகம் (அண்டர் வேல்ட்) பற்றிய கதையாக இருப்பதால் இதன் பெரும் பாலான படப்பிடிப்புகள் மும்பாய் சேரிப்பகுதிகளில் நடைபெற்று வருகின்றன.

* எஸ்.ஜே.சூர்யா இயக்கிய முதல் படமான 'வாலி'யில் இணைந்து நடித்த சிம்ரனும் ஜோதிகாவும் புதிய படமொன்றில் மீண்டும் இணைந்து நடிக்கவுள்ளனர். இப்படத்தை விக்ரம்சிங் என்பவர் தயாரிக்கவுள்ளார்.



ஜோதிலட்சுமி
படம்: தாலிகாத்த அம்மன்

## திரையுலக மறுபக்கம்

### கவர்ச்சி நடிகை என்ற பெயரை வைத்து கரன்ஸிக் கட்டுகளைப் பார்க்கும் நடிகை

179 தமிழ்நாட்டிலிருந்து மயன்

நடிகை என்ற கவர்ச்சி இமேஜை வைத்துக் கொண்டு சில நடிகைகள் காசு பார்ப்பதை அறிவீர்கள். இப்படி ஒரு நடிகையைப்பற்றி தமிழக சஞ்சிகை ஒன்று வெளியிட்ட தகவல்கள் இவை.

கவர்ச்சி நடிகை என்ற லேபிளை 'விசித்'திரமாகப் பயன்படுத்திக் கரன்ஸிக் கட்டுகளை அதிகமாகப் பார்த்தவர் இந்த நடிகையாகத்தான் இருக்கும். இவர் சினிமாவில் சம்பாதித்தது சில ஆயிரங்கள் தான். நடிகை என்ற கவர்ச்சியை வைத்து இவர் பார்த்தது பல இலட்சங்கள்.

தமிழ் நாட்டின் குக்கிராமம் ஒன்றில் இருந்து நடிக்க வந்தபோது இவர் அணிந்திருந்த உடைகள் தான் இவரது உடைமைகள். நடிகையாகி பணத்தில் புரளும் திட்டத்தில் வந்த இவரது திட்டம் ஈடேறவில்லை. காரணம், இவர் நாயகியாக நடித்த முதல் படம் முடிவடையாமலே நின்று விட்டது.

இதன் பின் இவருக்கு நடிக்க எவரும் வாய்ப்பு வழங்கவில்லை. அதனால் 'அம்ச'மான தன் உடம்பைக் கவர்ச்சி நடிகையாகப் பாதை மாற்றினார் நடிகை. சில படங்கள் வந்தன. ஆனால் பணம் தான் வரவில்லை.

அதே சமயம் இரவு விருந்துகளுக்கு ஏகப்பட்ட அழைப்புக்கள். ஒரு சில நாட்களிலேயே அதைப் புரிந்து கொண்டார் நடிகை. பணக் கட்டுக்கள் வந்து குவிய, ருசி கண்ட பூனையானார்.

உள்ளூர் சேவையில் மட்டும் ஈடுபட்டவர் தன் சேவையை அகில இந்திய அளவில் விஸ்தரித்தார். வேறுமொழிப்படங்களில் நடிக்கச் செல்வதாகக் கூறி விட்டு, வெளியூர் சென்று தன் பிழைப்பைப் பார்க்க ஆரம்பித்தார்.

ஒரு கட்டத்தில் இப்படிக் கஷ்டப்பட்டுப்பணம் சம்பாதிப்பதை விரும்பாத நடிகை, வேறு வழிகளில் பணம் சம்பாதிக்க ஆரம்பித்தார்.

பெரிய இடத்துப் பிள்ளைகளை வளைத்த நடிகை, அவர்களிடமிருந்து பல இலட்சங்களைக் கறந்தார். இப்படி நடிகையின் வலையில் சிக்கியவர்களில் ஒருவர் தான் ஒரு பிரபல பெண் போலீஸ் அதிகாரியின் மகன்.

முதலில் இவரிடமிருந்து சில லகரங்களைச் சுருட்டிய நடிகை இவர் ஒரு பொன் முட்டையிடும் வாத்து என்று புரிந்து கொண்டு இந்த இளைஞரை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டார். காதல் என்ற போர்வையில்.

மகனது விருப்பத்திற்கு தடையாக நிற்காமல் பொறுத்துப் போனார் அந்த பொலிஸ் அதிகாரி. தாலி கட்டாமல் மகனுடன் குடும்பம் நடத்திய நடிகை, சொத்துக்கள் யாவற்றையும் தனது பெயரில் எழுதும்படி வற்புறுத்தினார்.

இதனால் அடிக்கடி சண்டை, சச்சரவு ஏற்பட, இனியும் பொறுமை காப்பதில் அர்த்தம் இல்லை என்று தனது அதிகாரத்தை வைத்து நடிகையை விரட்டியடித்தார் அந்தப் பெண் பொலிஸ் அதிகாரி.

இப்படிப் பல பெரும்புள்ளிகளை அட்டையாக ஒட்டிக் கொண்டு உறிஞ்சிய பணத்தை சொத்துக்களாக்கியும் விட்டார் நடிகை.

இப்போது சினிமாவில் வாய்ப்பில்லை. சின்னத்திரையில் முகம் காட்டி வருகிறார். இதிலும் சொற்பபணம் தான் கிடைக்கும்.

அதனால் என்ன சைட் பிஸ்னஸில் பணத்தை அள்ளிக் கொண்டிருக்கிறார் இவர்.



## கைவிடப்பட்ட படம்

'சுயம்வரம்' படத்தைத் தயாரித்த படத்தயாரிப்பாளர் அடுத்து பிரபுதேவா-புதுமுகம் ஷிவானியை வைத்து 'யாரடா நீ மன்மதா' என்ற படத்தைத் தொடங்கினார்.

வசந்தின் உதவியாளர் மாரிமுத்து இயக்குநராக அறிமுகமாகும் இப்படத்தயாரிப்பை கைவிட்டு விட்டார் தயாரிப்பாளர்.

## இந்தியில் 'அலைபாயுதே'

மணிரத்னத்தின் தயாரிப்பு இயக்கத்தில் மாதவன்-ஷாலினி ஜோடியாக நடித்து அபார வெற்றி பெற்ற 'அலைபாயுதே' இந்தியில் தயாராகப் போகிறது.

இந்தி 'அலைபாயுதே' படத்தையும் மணிரத்னமே இயக்கவுள்ளார். மாதவன் தான் இந்தியிலும் நாயகன். நாயகி அநேகமாக முன்னாள் உலக அழகி யுக்தா முகி.

## மறுபடியும் மனிஷா

இந்தியில் சில வருடங்களுக்கு முன் முன்னணியில் இருந்த மனிஷா கொய்ராலா, ஒரு பேட்டியில் "தமிழில் நடிப்பீர்களா?" எனக் கேட்டபோது,

மணிரத்னம், ஷங்கர், கமல் படங்களில் வேண்டுமானால் நடிப்பேன் என்ற பதிலளித்திருந்தார்.

மணிரத்னத்தின் 'பம்பாய்', 'உயிரே' படங்களிலும் ஷங்கரின் 'இந்தியன்', 'முதல்வன்' படங்களிலும் நடித்திருந்தார்.

கமலுடன் 'இந்தியன்' படத்தில் மட்டும் ஜோடி சேர்ந்து நடித்தார் மனிஷா. இப்போது மறுபடியும் கமலுடன் இணைந்து 'ஆளவந்தான்' படத்தில் நடிப்பதாகப் பேச்சு அடிபடுகிறது. இதில் இன்னொரு நாயகியாக ரவீனா நடித்து வருகிறார்.

வரும் தைப்பொங்கல் திளத்தன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட 'ஆளவந்தான்' தாமதமாகத்தான் வெளிவரும் எனத் தெரிகிறது.

## அம்மா ராஜஸ்ரீ

'சேது' படத்தை இயக்கிய பாலா இப்போது சூர்யாவை வைத்து 'நந்தா' என்ற படத்தை இயக்கி வருகிறார். 'சேது' படத்தில் சிறிய வேடத்தில் நடித்தார் 'கருத்தம்மா' ராஜஸ்ரீ. 'நந்தா' படத்திலும் ராஜஸ்ரீ நடிக்கிறார். 'நந்தா' வில் நாயகன் சூர்யாவுக்கு அம்மாவாக நடிக்கிறார் ராஜஸ்ரீ.



விஜயகாந்த்-சாக்ஷி
படம்: வாஞ்சிநாதன்

## இயக்குநர் அஜித்

அஜித், ஷாருக்கானுடன் இந்திப்படத்தில் நடிக்கச் சென்றதால் அவரது 'தீனா' படவேலைகள் பாதியில் நிறுத்தப் பட்டிருந்தன. இப்போது அந்த இந்திப் படத்தின் முதல் கட்டப் படப்பிடிப்புக்கள் முடிவடைந்துள்ளன.

இப்போது அஜித் சென்னை திரும்பிவிட்டார். 'தீனா' படவேலைகள் மறுபடி தொடங்கிவிட்டன. 'தீனா' படத்தை பொங்கலுக்கு வெளியிடுவதற்காக அதன் படப்பிடிப்புகள் துரிதகதியில் நடக்கின்றன.

சென்னையில் ஏனைய காட்சிகளைப் படத்தின் இயக்குநர் முருகதாஸ் இயக்க, ஊட்டியில் தான் நடிக்கும் பாடல் காட்சியை இயக்கி வருகிறார் அஜித்.

...விசிட்

## அன்றும் இன்றும்

பிரசாந்த் நடித்து கடைசியாக வெளியான 'பார்த்தேன் ரசித்தேன்' பத்திற்கும் மேற்பட்ட திரையரங்குகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடியுள்ளது. அதிலும் சென்னையிலேயே மிகவும் பெரிய திரையரங்கான நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் சாந்தி திரையரங்கில் 100 நாட்கள் ஓடியுள்ளது. இதற்கு முன் பிரசாந்தின் முதல் படமான 'வைகாசி பொறந்தாச்சு' படமும் சாந்தி திரையரங்கில் 100 நாட்கள் ஓடியது.

## பாலச்சந்தரின் 100 வது படம்

'கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்' படத்தில் பணியாற்றிய போது ஏற்பட்ட சிறு மனக்தாங் கலால் பிரிந்திருந்த இசைப்புயல் ஏ.ஆர்.ரகுமானும் கவிஞர் வைரமுத்துவும் மீண்டும் இணைந்து பணியாற்றவுள்ளனர்.

சின்னத்திரையிலும், தயாரிப்புத்துறையிலும் பிஸியாக இருக்கும் இயக்குநர் சிகரம் கே.பாலசந்தர் நீண்ட இடைவெளிக்குப் பின் பெரிய திரையில் படமொன்றை இயக்கவுள்ளார். இது இவர் இயக்கும் 100வது படமாக வெளியாகவுள்ளது.

இந்தப் படத்திற்கு 'பார்த்தால் பரவசம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இதில் மாதவன் சிம்ரன் ஜோடியாக நடிப்பார்கள் என்று தகவல்.

பாலசந்தர் இயக்கும் இப்படத்தில் தான் ரகுமானும் வைரமுத்துவும் இணைந்து பணியாற்றவுள்ளனர்.



பிரசாந்த்-அமிஷா பட்டேல்
படம்: என்ன விலை அழகே

## இன்னொரு 'கிக்'பாடல்

'ஷக்கலக்க பேபி', 'கட்டிப்புடி கட்டிப்புடிடா', 'ஐயோ பத்திக்கிச்சு' போன்ற 'கிக்' பாடல்களைப் பாடிய 'ஹேராம்' நாயகி வசுந்தரா தான் இப்போது 'மிஸ்டர் நாரதர்' படத்திலும் 'கிக்' பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.

'ஓசோ பேபி... ஓசோ பேபி...' என்று தொடங்கும் பாடலை சிற்பி இசையமைப்பில் பாடியுள்ளார் வசுந்தரா. 'மிஸ்டர் நாரதர்' சிற்பி இசையமைக்கும் 50வது படம் ஆகும்.

## காதோடு சொல்லுகிறோம்

...முத்துக் கண்ணழகி நடிகை வெளிநாடு சென்று நாடு திரும்பும் ...செலவு முழுவதுமாக வெளிநாட்டு உற்சாக பானப் போத்தல் ...அள்ளிக்கொண்டு வருகிறாராம். கொண்டு வரும் உற்சாக ...களை முன்னணி நடிகர்களுக்கு 'அன்பளிப்பாக' கொடுத்து ...கிறாராம்.

...பின் வரும் வண்ண நிறங்களைக் கொண்ட படத்தில் அறிமுக... இனிமேல் தமிழ்ப்படங்களில் நடிக்கக் கூடாதென்று அன்புக்கட்டளை போட்டிருக்கிறாராம் அரசியல்புள்ளி ஒருவர். 'வில்லித்தை' நடிகருடன் நடிகை நட்பாக இருப்பது தெரிந்து தான் தனது அன்பானவருக்கு இப்படி ஒரு அன்புக்கட்டளை யிட்டாராம் அந்த அரசியல் புள்ளி.

கராத்தே வீரரின் தம்பியுடன் ஜோடி சேர்ந்து நடிக்கும் 'குஜாலாய்யா' நடிகை இவரிடம் வாங்குவதை வாங்கிக் கொண்டு சுழற்றி விட்டுவிட்டாராம். இப்போது நடிகை 'கிராம' நடிகருடன் நெருக்கமாக இருக்கிறாராம். இதைக் கேள்விப்பட்ட கராத்தே வீரரின் தம்பி நடிகர் கொதித் தெழுந்துப் போய் இருக்கிறாராம்.

தனது படத்தையே வளர விடாமல் ஒரு தயாரிப்பாளர் தடையாக இருப்பாரா? இருக்கிறார். அவர் வேறு யாருமல்ல. 'இரட்டை' என்று ஆங்கிலத்தில் பொருள்படும் படத்தை தயாரித்தவராம். இப்போது 'புதுமைப்பித்த' நடிகருடன் 'தேவ' நடிகையை ஜோடியாக வைத்து ஒரு படம் எடுக்கிறார். நடிகையுடன் ஏற்பட்ட பிணக்கால், தனது படத்தையே வளர விடாமல் தடையாக இருந்து வருகிறாராம் அந்தத் தயாரிப்பாளர்.

# தேன் கிண்ணம்

## மீண்டும் வருக!

துன்பங்களை அகற்றி-நாம்
துணிவுடன் வாழ
யேசு கிறிஸ்துவே
வருக வருக!
இன்பங்களை எம்மவர்
இனிதே களித்திட
இம் மண்ணில் மாண்புமிகு
-மைந்தனான
யேசு கிறிஸ்துவே
வருக வருக!
அல்லற்படும் அன்பர்களுக்கு
ஆறுதல் அளிக்க ஆண்டவர்
யேசு கிறிஸ்துவே
வருக வருக!
அனைத்து உரிமைகளையும்
இழந்து இம் மண்ணில்
அனாதையாக-அகதியாகி
அவதியுற்று வாழும்-உம்
மக்களின் உரிமைகளை
மீண்டும் மீட்டுக் கொடுக்க
மீண்டும் ஒளியாக-இவ்
வையகத்தில் அவதரித்து
யேசு கிறிஸ்துவே
வருக வருக!

பற்குணன் அம்பிகாபதி-
மன்னார்.



## ஓர் இடைக்காலத்தைக் கொடு..!

என்
தூரத்துச் சொந்தங்களே,
உங்கள்
வாழ்விடங்களுக்கு
நான் வந்ததில்லை.
என்றாலும்
நீங்கள்-என்
சொந்தங்கள்!
♥♥
உங்கள்
நிலைமை அறியவே
நாள்தோறும்
எல்லாச் செய்திகளும்
கேட்கிறேன்!
♥♥
நானும்
சுகங்களை
பறிகொடுத்துவிட்டு
சோகங்களை
சுமந்து கொண்டு
சுற்றித்திரிந்தவன்தான்!
அது
நீங்கள் படும்
அவலங்களில்-ஒரு
துளியளவே தான்!
♥♥
என் உறவுகளே...!
உறைவிடமிழந்து
ஊர்ரூராய்-
அலைகிறீர்களாமே...!
மழையில் நனைந்து
வெயிலில் காய்கிறீர்களாமே...!
♥♥
அந்த மழை
உங்கள்-
விழிநீரை கழுவுவதற்கு...
எரிக்கும் வெயில்
தளராமனதை
தந்துபோவதற்கு-என
அமைதிகொள்ளுங்கள்!
♥♥
சுகாதாரத்திற்கு-எந்த
ஆதாரமுமின்றி
அல்லல்படும் நிலைமையும்
அறிகிறேன்!
♥♥
அடுத்தவரையும்
ஆதரித்த நீங்கள்.
அரை வயிற்றுக்காய்
கையேந்துவதை
அழுதழுது-
கேட்கிறேன்!
♥♥
கஞ்சித் தண்ணியும் இல்லாது
பிஞ்சுகள் அழுவது
அந்தப் பாவிகளுக்கு
கேட்குமோ...?!
♥♥
இறைவா...!!
என்
கண்மணிகளுக்கும்
ஓர்-
இடைக்காலத்தை கொடேன்...!!

ரெ.சாந்தயசீலன்-
பொத்துவில்.

## நட்புக்குப் பின்னால் ஒரு காதல் கடிவாளம்

என்றோ நீ சிந்தித்து
சிதறிய வார்த்தைகளால்
என்னால் சிரிக்க முடிந்தது.
★★
ஆனால் இன்று
நீயே சிதறிய போது
நான் சிறகொடிந்து போனேன்.
நான் தேடுவது
உன்னுள்
பகைவர்கள் போல்
பகையே இல்லாத
பழைய சினேகிதனை....
★★
ஆனால் பழகப் பழக
நீ பாசி போல் வழுக்கி
விழுந்தது
என்னை வதைக்கின்றது.
★★
நீ இன்னுமொரு சந்தர்ப்பத்தில்
சிந்தித்து பார்!
நான் யார்!
நீ யார்!
அவள் யார்!
என்பதை...!
★★
நான் உன் நட்பை
நாளும் அசைபோட்டேன்.
ஆனால் நீயோ
நட்பை நழுவ விட்டு,
நினைவுகளை அசைபோட
மனதை அல்லவா
கேட்கிறாய்?
★★
மடம் ஒன்று கொடுத்தால்
இடம் ஒன்று பிடிப்பாயோ...?
★★
நண்பனே!
நான் தேடுவதும்
என்னைத் தேடுவதும்
நன்றாய் சிரிக்க வைக்கவும்
நக்கலாய் சீற வைக்கவும்
நம்மையே சிந்திக்க வைக்கும்
நம்பகரமான நண்பனை...
★★
உன்னுள் தேடினேன்
நீ தொலைத்து விட்டல்லவா
வந்துவிட்டாய்..
நீ கதைக்கும் போது,
நான் விழுந்து விழுந்து
சிரித்தேன்.
ஆனால் நான் சிரிக்கும் போது
நீ விழுவாய் என்று நினைக்கவில்லை.
★★
நண்பனே...!
உன் அமைதியை நான்
தேடுகிறேன்.
என்னுள் அது இருப்பதனால்
என்னால் உனக்கு
நல்ல நட்பைத்தான்
நஷ்ட ஈடாய்
தர முடியும்.
★★
நண்பனே!
இனியும்
வேண்டாமடா!
நட்புக்கு பின்னால்
ஒரு காதல் கடிவாளம்!

பானு.எஸ்.ஆர்-
சாய்ந்தமருது.

## புதுக்கவிதையாக பரிசுத்த வேதாகமம்

இந்துக்களுக்கு 'பகவத் கீதை' போல் இஸ்லாமியர்களுக்கு 'திரு குர் ஆன்,' கிறிஸ்தவர்களுக்கு 'பரிசுத்த வேதாகமம்' என்பது எல்லாரும் நன்கு அறிந்ததே.

பரிசுத்த வேதாகமம் உலகில் பல்வேறு மொழிகளில் மொழியப்பட்டிருக்கிறது. தமிழில் பரிசுத்த வேதாகமம் மரபுக்கவிதை வடிவிலும் வந்திருக்கின்றது. தமிழில் கவியரசு கண்ணதாசன் எளிய மரபுக் கவிதை வடிவில் பரிசுத்த வேதாகமத்தை 'இயேசு காவியம்' என்ற பெயரில் எழுதி யதைப் பலரும் அறிந்திருப்பீர்கள்.

இப்போது தமிழில் புதுக் கவிதையாக பரிசுத்த வேதாகமத்தை எழுதியுள்ளார் தமிழ் நாட்டைச் சேர்ந்த அருட் திரு.வின்சன்ட் சின்னத்துரை அடிகளார்.

இயேசுகிறிஸ்து பிறந்த இடமான பெத்லெஹேமிற்குச் சென்று இயேசு பிறந்த இடத்தில் தனது குறிப்பேட்டையும், பேனாவையும் வைத்துப் பிரார்த்தனை செய்து விட்டு வந்து வேளாங்கன்னி மாதா திருநாளில் வேதாகமத்தைப் புதுக்கவிதை வடிவில் எழுதத் தொடங்கினார் அருட் திரு.வின்சன்ட் சின்னத்துரை அடிகளார்.

அத்துடன் வத்திக்கானுக்குச் சென்று போப் பாண்டவர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரைச் சந்தித்து வேதாகமத்தை புதுக்கவிதை வடிவில் தமிழில் எழுதும் முயற்சியைப் பற்றிக் கூறியதும், மகிழ்ச்சியுடன் ஆசீர்வதித்து அனுப்பியுள்ளனர்.



அருட் திரு. வின்சன்ட் சின்னத்துரை அடிகளார் எழுதிய புத்தகதில் இயேசு கிறிஸ்து பிறப்பைப் பற்றிய சில கவிதைத் துளிகள்.

"பூமி
ஒரு புனிதமான பிறப்பின்
பரபரப்பை உணர்ந்தது....
மின்மினிப்பூச்சிகளின்
சின்ன வெளிச்சத்தில்
முகம் பார்த்துக் கொண்ட
தொழுவம்
விளாக்காய் வந்து
ஒரு வெளிச்சம்
பிறந்திருப்பதைப் பார்த்துத்
தொழுதது..."

தொகுப்பு-தேனீ

## இலங்கையும் இனவாதப் பேயும்

இருபது வருடங்களுக்கு
மேலாகிவிட்டது
'இனவாதப் பேய்'
இலங்கைக்குள் புகுந்து
இற்றோடு....
☠☠
'யுத்த அரக்கனை'
தன்னுயிர் நண்பனாக்கி,
பலியெடுத்தது அது
மனித இனத்தை....!
☠☠
துப்பாக்கி 'நகங்களால்'
அது மனிதனை
விறாண்டியது...
கோரமாய்
அவனைக் கிழித்தது.....
☠☠
மனித மாமிசத்தை
பதம் பார்த்தது.....
ரத்தத்தில் தொடர்ந்தும்
ருசி பார்த்தது....
☠☠
இன்று இடைக்கிடை அது
ஆங்காங்கே
'தலை விரித்தாட'
மனிதன் பயந்து போனான்!
☠☠
'இந்தியப் பூசாரிமார்'
இயன்றளவும் முயன்றார்கள்
இனவாதப் பேயை
ஒழிக்கவே முடியவில்லை...
☠☠
'இஸ்ரேலியக் குறளிக்காரர்கள்'
குறுக்கிட்டும்
முடியாமலே போய் விட்டது
அதனை விரட்ட...
☠☠
இப்போது,
'நோர்வேப் பரிசாரிமார்'களாம்......
இனவாதப் பேயை ஒழிக்க
இலங்கைக்கு
வைத்தியம் பார்க்கிறார்கள்!!!

வாழைச்சேனை-
ஷல்மானுல் ஹரீஸ்.

## உயிர்த்தேன்!

உன்னில் என்னைக் காண வேண்டி
உயிர் தொட்டொரு கவிதை எழுந்தது.
அன்றும் ஒரு நாள் உன்னைக் கண்டும்
ஆவல் ஏனோ தோன்றவில்லை-ஆனாலுமுனை
இகழவுமில்லை-நீயும் என்னை
ஈர்க்கவும் என்றும் முயன்றதுமில்லை-என்
உள்ளமும் உன்னை வெறுத்ததுமில்லை;
ஊக்கமும் ஏனோ பிறந்ததுமில்லை.
என்றோ ஒரு நாள் எதிர்பாராமல்
ஏதோவரிகள் ஈர்த்தன கண்களை!
ஐந்தே நிமிடம்தான் படித்தே(ன்)னிதழ்களில்
அறுசுவை அமுதம் குடித்தேன்-மகிழ்ந்தேன்
ஒவ்வொன்றும் சப்தஸ்வரங்களாய் ஒலித்தன-ஜீவனில்
ஓராயிராம் ஆனந்தராகங்கள்-அவற்றின் சுகமோ
ஔடதமாக ஆரோகணித்தன-அந்த
ஆரோகணத்தில் என்னை இணைக்கும்
ஆசையில் பிறந்ததே இந்தக்கவிதை!
ஆர்வத்தின் உந்தலில் உந்தனை நாடி
ஓடி வந்ததே 'தேன் கிண்ணம்' தேடி!
உயிருடனுறைந்த உணர்வின் படையலை
உரிமையுடனே ஏற்பாய் அன்புடன்!

தவ ராஜமாணிக்கம்-மட்டக்களப்பு.

## பேனா நண்பர்கள்



பெயர்: ஐ.ஜலீம்
வயது: 19
முகவரி: காட்டாஸ்பத்திரி,
பேசாலை,
மன்னார்.
பொழுது போக்கு:
கிரிக்கெட், பத்திரிகை.



பெயர்: எம்.ரமீஸா
வயது: 17
முகவரி: 45/15,
ஜமாரியா வீதி,
திருகோணமலை.
பொழுது போக்கு:
பத்திரிகை, ரீ.வி.

## நில்—கவனி—முன்னேறு



1. எந்தச் செயலையும் தன் முனைப்புடன் செய்யுங்கள். மற்றவர்கள் சொல்வதற்காகச் செய்ய வேண்டாம்.
2. மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதில் ஆர்வமுடையவராய் இருங்கள். உங்கள் வளர்ச்சிக்கு அது மிகவும் உதவிகரமாய் இருக்கும்.
3. தவறுகளை திருத்திக் கொள்ளுங்கள். மாறாக சமாதானம் செய்து கொள்ளாதீர்கள்.
4. நிதானமாய் செயல்படுங்கள். அவசரம், டென்சன் முதலியவைகளை அறவே தவிர்த்து விடுங்கள்.
5. உங்கள் வேலையை நீங்களாகவே செய்யத் தொடங்குங்கள். மற்றவர்கள் சொல்லும்வரை காத்திருக்க வேண்டாம்.
6. சுய ஒழுக்கத்தை உங்களிடமிருந்து மற்றவர்கள் கற்றுக் கொள்ளும் விதமாக நடந்து கொள்ளுங்கள்.
7. உங்கள் திறமையில் நம்பிக்கை வைத்து பணிபுரியுங்கள். காக்காய் பிடிப்பது, ஜால்ரா தட்டுவது போன்றவைகளை அறவே தவிருங்கள்.
8. மற்றவர்கள் வளர்ச்சிக்கு உதவுபவராய் இருங்கள். மாறாக பொறாமைப் படுபவராக இருக்க வேண்டாம்.
9. உங்களின் பேச்சிலும், செயலிலும் வெளிப்படையாய் இருப்பதன் மூலம் மற்றவர்களிடம் உங்களின் நம்பகத் தன்மையை அதிகரியுங்கள்.
10. எத்தனை வேலைகளை முடிக்கிறோம் என்பதல்ல முக்கியம். எத்தனை அழகாகவும், திறமையாகவும் செய்கிறோம் என்பதில் கவனமுடையவராக இருங்கள்.
11. உங்களின் செயல்பாட்டினால் வேலையை செய்து முடிக்கும் தன்மையினால் மற்றவர்களை கவர முயற்சி செய்யுங்கள். மாறாக உங்களின் சாதுர்யமான பேச்சினால் அல்ல.
12. உங்கள் திறமையில் நம்பிக்கையுடையவராய் இருங்கள். மாறாக கர்வமோ, தலைக்கனமோ உடையவராய் இருக்க வேண்டாம்.
13. அன்றைய வேலையை அன்றே செய்து முடிக்கப் பழகுங்கள். நாளைக்கு என்று தள்ளிப் போட வேண்டாம்.
14. எடுத்துக் கொண்ட வேலையில் முழு ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள். ஏனோதானோவென்று கடமைக்காக செய்து முடிக்க வேண்டாம்.
15. உங்கள் வேலை நீங்கள் முன்னுக்கு வருவதற்காக அளிக்கப்பட்ட பொன்னான சந்தர்ப்பம். அதில் முறையாக செயல்பட்டு உங்களின் முன்னேற்றத்திற்காக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## இந்தவாரம் உங்கள் பலன்

**24.12.2000 முதல் 30.12.2000வரை**

ஜோதிடர் 'கானா'

**மேடம்:**
முக்கியமான பிரமுகர்களைச் சந்திக்க நேரிடும். பல வெற்றிகள் அமையக்கூடும். பணவசதிகள் ஏற்படக்கூடிய அதிஷ்டவாய்ப்பு உள்ளது. நண்பர்கள் மற்றும் வெளிடத்து ஆதரவுகள் கிடைக்கப் பெறும். எதிர்பான நிலை தளர்வுறும். எதிரிகள் மறைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 06
அதிஷ்ட திகதிகள் : 24, 29.

**இடபம்:**
நோய் துன்ப நிவர்த்தியுண்டு தடைகள் நீங்கும். திருமண மற்றும் குடும்ப விடயங்கள் முடிவு எடுக்கப்படும். தூர இடப்பயணங்கள் தித்திக்கும். ரோகிணிக்காரர் நன்மை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 04
அதிஷ்ட திகதிகள் : 25, 27.

**மிதுனம்:**
தொழிலில் போட்டி தென்படும். எடுத்த முயற்சிகள் தள்ளிப் போகும். உடலில் நோய்துன்பம், மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். மனதில் கவலைகள் குடிகொள்ளும். பெற்றோர், நண்பர்களால் சில உதவிகள் கிடைப்பதுடன் திருவாதிரைக்காரர் சில இலாபங்கள் அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 07
அதிஷ்ட திகதிகள் : 25, 29.

**கடகம்:**
தொழில் முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். கடன் பிரச்சனைகள் குறைவடையும். பிள்ளைகளால் நற்பெயர் புகழ் ஏற்படலாம். தூர இடத் தொடர்புகள் ஏற்படும். பூச நட்சத்திரப் பெண்களுக்கு நல்ல வாய்ப்புள்ளது.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 03
அதிஷ்ட திகதிகள்: 24, 28.

**சிங்கம்:**
கவலைகள் தீரப்பெறும். தொழில் தடைகள் விலகும். திருமண தடை நீங்கும். குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். பணவசதிகள் சேரக்கூடிய நிலை உள்ளது. மக நட்சத்திரக்காரருக்கு சந்தோஷமான வாரம்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 01
அதிஷ்ட திகதிகள்: 28, 30.

**கன்னி:**
குடும்பத்தில் பொறுப்புகள் சுமைகள் கூடும். பிரயாண அலைச்சல் அல்லது களைப்பு கூடுதலாகக் காட்டும். செலவுகள் எதிலும் ஒரு மந்தகதியான செயற்பாடு காணப்படும். உத்தர, அத்த பெண்கள் அவதானமாக நடப்பது நன்று.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : இளபம்ச்சை; எண்: 09
அதிஷ்ட திகதிகள்: 27, 29.

**மகரம்:**
உடலில் நோய் துன்பம் ஏற்படலாம். செலவுகள் அதிகரிக்கும். பெரிய வசதிகள் அமையக்கூடிய பலன் உண்டு. கல்வி உயர்வடையும். தடைகள் நீங்கும் திருவோணக்காரர் இலாபமடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 02
அதிஷ்ட திகதிகள் : 28, 29.

**கும்பம்:**
குழப்பமான பிரச்சனைகள் முடிவுறும். தடைகளாக இருந்த பணவரவு சீர்பெறும். இருப்பிட அலைச்சல் நீடிக்கும். உடலில் நோய்துன்ப நிலை வந்துபோகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 06
அதிஷ்ட திகதிகள் : 24, 26.

**தனுசு:**
இருப்பிட மாற்றமுண்டு. புதிய தொழில் வசதி பெருக்க நிலை காணப்படும். பணவசதிகள், உதவிகள் வெளியார் மூலம் கிடைக்கும். வாகன வசதிகளால் வருமானம் பெருகும். மூல நட்சத்திர பெண்களுக்கு நன்மையான காலம்.
அதிஷ்ட நாட்கள் : சனி, செவ்வாய்.
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண்: 05
அதிஷ்ட திகதிகள்: 25, 27.

**துலாம்:**
புதிய திட்டங்கள் முயற்சிகள் வெற்றியாக அமையும். தொழில் கிடைக்காதோர் தொழில் வசதிகளைப் பெறுவார்கள். திருமண, காதல் விடயங்களில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 05
அதிஷ்ட திகதிகள்: 28, 30.


**விருட்சிகம்:**
பிரயாணம் வெற்றியடையும். தூரஇடத்துச் செய்திகளும் பணவருவாயும் தொடரும். எதிரிகள் நிலை குழம்புவது பல நாட்பட்ட திட்டம் வெற்றியாக முடிவுபெறும். கடன் பிரச்சனைகள், கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 03
அதிஷ்ட திகதிகள்: 26, 29.

**மீனம்:**
தடைகள் நிவர்த்தியாகும். திருமணப் பேச்சுக்கள் தொடரும். நோய் துன்ப நிவர்த்தியுண்டு. காரிய சித்தியுடன் பெரியோர்களின் ஆசீர்வாதமும் கிட்டும். உத்திரட்டாதி நட்சத்திர பெண்களுக்கு பயண வசதிஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : கபிலம்; எண்: 02
அதிஷ்ட திகதிகள் : 29, 30.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## குழந்தைகளுக்கு ஏற்ற உணவு!



'வளரும் குழந்தைகளுக்குத் தாவர உணவே சிறந்தது. தாவர உணவை அதிகம் சாப்பிடும் குழந்தைகள் சுறுசுறுப்பாக உள்ளன. அவர்களின் சிந்தனைத்திறன் அதிகமாக உள்ளது?'

இவ்வாறு பிரிட்டன் நாட்டு உணவியல் விஞ்ஞானிகள் தெரிவித்து உள்ளனர். இதனால் பிரிட்டனில் உள்ள பள்ளிச் சிறார்களுக்குத் தாவர உணவைக் கொடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக இறைச்சி போன்ற உணவுகளைக் கொடுக்காமல் தவிர்ப்பது நல்லது.

பச்சைக்காய்கறிகள், கீரை வகைகள், பழங்கள் ஆகியவற்றைச் சாப்பிடக் குழந்தைகளுக்குப் பழக்க வேண்டும். வேகவைக்கப் பட்ட பருப்பு, நெய், மாப்பொருள் கொண்ட உணவு வகைகளைச் சாப்பிடும் போது அவர்களுக்கு நாள் முழுவதற்குமான சத்துகள் கிடைக்கின்றன.

குழந்தைகளின் ஒரு வயதில் இருந்து பழங்களைக் கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். பழங்களை நன்கு கழுவி தோல் சீவிக் கொடுப்பதே நலம் தரும். குழந்தை எவ்வளவு சாப்பிடுமோ அந்த அளவு தான் கொடுக்க வேண்டும். உடலுக்கு நல்லது என்று அதிகமாகத் திணிக்கக் கூடாது.

பட்டாணி, பச்சைப்பயறு, கொண்டைக் கடலை போன்ற பயறு வகைகளையும் குழந்தைகள் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றை வேக வைத்துச் சுண்டலாகவும் கொடுக்கலாம்.

இட்லி, இடியப்பம், தோசை, போன்ற உணவுகள் குழந்தைகளுக்கு ஏற்றவை.

பால் மற்றும் பால் கலந்த உணவு குழந்தைகளுக்குப் பிடித்தால் கொடுக்கலாம். ஆனால் அதிக அளவில் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

பச்சைக்காய்கறிகளை அடிக்கடி கொடுக்க வேண்டும். ஆனால் அவற்றை நன்கு கழுவ வேண்டும்.

குளிர்பானங்களைச் சாப்பிடும் பழக்கம் குழந்தைகளைத் தொற்றிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பதிலாக இளநீர், பழச்சாறுகள், நீர் மோர் போன்ற சத்தான பானங்களைக் குழந்தைகள் குடிக்கப் பழக்கவேண்டும

## கண்ணாடி அணிபவரா நீங்கள்?

உலகத்தில் இன்று பெரும்பாலான பெண்கள் கண்ணாடி பயன் படுத்துபவர்களாகவே இருக்கிறார்கள். உங்கள் கண்ணாடிகளைப் பராமரிப்பது பற்றிய சில டிப்ஸ் இவை:



★ கண்ணாடியைக் கழற்றும் போது இரண்டு கைகளாலும் பிடித்துக் கழற்றுங்கள்.

★ அவசரமாகக் கண்ணாடியைக் கீழே வைக்கும் போது அதை மடித்து வைக்க மறக்காதீர்கள். எந்த விதத்திலும் கண்ணாடிப் பக்கம் தரையிலோ அல்லது மேசை மீதோ படக் கூடாது.

★கண்ணாடியைக் கைக்குட்டையால் துடைக்க வேண்டாம். சுத்தமான துணி அல்லது வெல்வெட் துணியால் தான் துடைக்க வேண்டும்.

★ வாரம் ஒரு தடவை குளிர்ந்த நீரில் கண்ணாடியைக் கழுவலாம். சோப், வீபூதி, பவுடர் எதுவும் போட வேண்டாம்.

★ மாதம் ஒரு முறை ஃபிரேமின் கீழ் (பொருத்து) பகுதியில் இரண்டு சொட்டு எண்ணெய் விடலாம்.

★ பஸ்ஸிலோ, ரயிலிலோ பயணம் செய்யும் போது, கண்ணாடி உடையாமல் இருக்க உறைக்குள் போட்டு வைப்பது நல்லது.

★ கண்ணாடி போட்டுக் கொண்டு தூங்குவதும், கண்ணாடியைத் தலைக்கு அடியில் வைப்பதும் சரியல்ல.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் • மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IU

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 30-12-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது

# 68 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

பெண்டகன் நகரிலுள்ள ரிட்ஸ் கார்ட்டன் ஹொட்டல் 1012ம் இலக்க அறையில் தான் மோனிக்காவை மத்திய புலனாய்வுத்துறை அதிகாரிகளும் கென்னத் ஸ்டாரின் விசாரணைக் குழுவினரும் குறுக்கு விசாரணைகள் செய்து கொண்டிருந்தனர். ஒருவர் இருவராக அந்த அதிகாரிகள் அங்கு வந்து சேர்ந்தனர். ஏறத்தாழ பத்து மணித்தியாலங்கள் கடந்துவிட்டன. இருதரப்பு அதிகாரிகளும் மொத்தம் பத்துப் பேர்வரை அந்த அறையிலிருந்தனர்.

ஒரு தடவை மோனிக்கா கழிப்பிடம் செல்வதற்காக அனுமதி கேட்டாள். லிண்டா ட்ரிப் அமர்ந்திருந்த இருக்கையிலிருந்த பெண்ணதிகாரி எழுந்து சென்று கழிப்பிடத்தில் பொருத்தியிருந்த தொலைபேசி கருவியை பிடுங்கிக் கொண்டு வந்த பின்னரே அங்கு செல்லலாம் என்று அனுமதி கிடைத்தது. இருப்பினும் அவளங்கு போவதற்கு முன்னர் தொலைபேசியைப் பிடுங்கிக் கொண்டு வந்த பெண்ணதிகாரி, மோனிக்காவின் சட்டைப் பைகளிலிருந்த அத்தனை பொருட்களையும் வெளியே எடுத்து வைத்தாள். அவளுடைய கைப்பையையும் நன்றாகச் சோதித்துவிட்டு அதனை மட்டும் கழிப்பிடத்திற்கு உடன் எடுத்துச் செல்ல அனுமதித்தார்கள்.

## மோனிக்காவின் பெற்றோர்!



'என்னுடைய உயிருக்கு மேலாக நேசிக்கும் ஒருவரை இந்தக் கழுகுகளிடம் காட்டிக் கொடுக்காமல் இருப்பதற்காக, சாதாரண பெண்ணான எனக்கு இத்தனை தண்டனையா?' என்று மனம் வெதும்பினாள். கண்ணீர் விட்டு அழுவதைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் அவளுக்கு தெரியவில்லை.

இந்த நேரத்தில் எம்மில் அவளருகில் வந்தார். "மோனிக்கா! இவ்வாறு நீ பிடிவாதம் பிடிப்பதால் எந்தப் பயனும் இருக்கப் போவதில்லை. உனக்குக் கிடைக்கப் போகும் தண்டனை தளர்த்த வேண்டும் என்று நீ விரும்பினால், உடனடியாக எம்முடன் ஒத்துழைக்க வேண்டும், உண்மையைக் கூறிவிட வேண்டும். இதிலிருந்து நீ தப்புவதற்கு எந்த மார்க்கமும் கிடையாது!" என்று அவள் மீது அனுதாபம் கொண்டவர் போல் பேசினார்.

மோனிக்கா எம்மில் மீது சீறிப் பாய்ந்தாள். "ஒரு கொலைக் குற்றவாளியை விட மிகமிக மோசமாக என்னை நடத்துகிறீர்கள். நான் உங்களுடன் ஒத்துழைப்பதா இல்லையா என்பதைப் பற்றி நான் எனது சட்டத்தரணியுடன் கலந்தாலோசிக்க வேண்டும். இதற்கு நீங்கள் இடந்தரவில்லையானால், நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்!" என்று கூறியதும், எம்மில் தன்னுடைய இருக்கையை விட்டு எழுந்தார். மோனிக்காவின் இத்தகைய பதில் அங்கிருந்த எல்லாரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அடுத்து பென்னட் என்ற அதிகாரி அவளை அணுகினார். "மோனிக்கா! இங்கு நடைபெறும் விசாரணைகளை பகிரங்கப் படுத்துவது நீதி விசாரணைகளுக்கு குந்தகமாகப் போய்விடும். ஆகவே நீ உனது தாயாருடன் தொடர்பு கொண்டு அவரை எங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாடு செய். ஆனால் ஒன்றை மட்டும் மறந்து விடாதே. ஏற்கனவே லிண்டா ட்ரிப்பினால் ஒலிப்பதிவு செய்யப்பட்ட உரையாடல்களின் படி உனது தாயார் மார்சியாவையும் குற்றவாளியாக்கக் கூடிய வகையில் கருத்துக்கள் உள்ளன" என்று எச்சரித்தார்.

இதற்கு மோனிக்கா, "எனது தாயாரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உங்களுடன் பேசுமாறு நான் கேட்கப் போகிறேன். அதற்கு மேல் நான் எதுவும் அவரிடம் கூறப்போவதில்லை என்று உறுதியாகச் சொல்கிறேன். ஆனால் இந்த அறையில் மட்டும் நான் எனது தொலைபேசி உரையாடலை வைக்க விரும்பவில்லை. கீழேயுள்ள பல்பொருள் அங்காடிக்குச் சென்று பொதுத் தொலைபேசியில் பேசிவிட்டு வருகிறேன். இதற்கு மட்டும் தயவு செய்து ஒப்புக் கொள்ளுங்கள்," என்று கெஞ்சிக் கேட்டாள். அங்கிருந்த அதிகாரிகள் அனைவரும் இந்த கோரிக்கைக்கு ஒப்புதல் அளித்தனர் போல் தெரிந்தது.

அறையை விட்டு வெளியே போகும்படி பென்னட் சைகை காட்டினார். ஒரு நீண்ட பெருமூச்சை விட்டுவிட்டு மோனிக்கா வெளியே சென்றாள். கீழ்மாடிக்குச் செல்வதற்கு தானியங்கி படிகளில் ஒன்றில் ஏறினாள். அவளைத் தொடர்ந்து ஓரதிகாரி நிழல்போல் வருவதைக் கண்டுகொண்டாள். அவரை எப்படியாவது திசை திருப்பி விடவேண்டும் என்று எண்ணிய அவள். மூன்றாவது மாடியில் இறங்கி உடனடியாகவே அடுத்த பக்கத்தில் மேலே சென்று கொண்டிருந்த படியிலேறி நாலாவது மாடியிலிறங்கினாள். இப்பொழுது தன்னைத் தொடர்ந்து வந்த ஒற்றர் மோனிக்காவை தவறவிட்டு விட்டார் என்பதையுணர்ந்தாள்.

எனவே, அவள் தரைதளம் வரை நிம்மதியாகப் போய்ச் சேர்ந்தாள். பல்பொருள் அங்காடி அங்குதான் அமைந்திருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் திரள் திரளான கூட்டம் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஒரு மூலையில் தனியாக இருந்த பொதுத் தொலைபேசி கூண்டையடைந்தாள். தொலைபேசியைக் கையில் எடுப்பதற்கு முன்னரே ஒரு தடித்த பெண்ணுருவம் அந்தத் தொலைபேசியைத் தன் கையில் எடுத்துக் கொண்டது.

இருப்பினும் மோனிக்காவைப் பார்த்து, "மன்னித்துக்கொள். எனக்கு அவசரமில்லை. நீயே முதல் தொடர்பினை எடு. உனக்குப்பின் நான் எடுக்கிறேன்," என்று கூறி மோனிக்காவின் கையில் கருவியைக் கொடுத்தது.

அந்தப் பெண்ணுக்கு நன்றி கூறிவிட்டு, அவளுடைய முகத்தையும் தோற்றத்தையும் மோனிக்கா அளவெடுத்தாள். அந்தப் பெண்ணும் சாதாரண பெண் போல் வேடம் போட்டு வந்த பெண் ஒற்றராகத்தான் இருக்க வேண்டும் என்று சந்தேகப்பட்டாள். இருப்பினும் எதையும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் தனது தாயாரின் இலக்கத்தைச் சுழற்றி தொடர்பு கொண்டாள் தொலைபேசியை எடுத்தது மோனிக்காவின் சித்தியான தெப்ராதான். தாயாருடன் பேச வேண்டும் என்று கூறியதும், மார்சியா கருவியைக் காதில் வைத்தாள்.

தாயாரின் குரலைக் கேட்டதும் மோனிக்காவின் வாயிலிருந்து விம்மல்களைத் தவிர வேறு வார்த்தைகள் சற்று நேரம் வரவில்லை. மகளின் விம்மலைக் கேட்ட, மார்சியா பதறிப் போனாள். "என்ன மோனிக்கா! என்ன நடந்தது?" என்று பரபரப்புடன் கேட்டார். மோனிக்கா சுருக்கமாக "மத்திய புலனாய்வுத்துறையினர் என்னை மடக்கிப் பிடித்து வைத்துக் கொண்டு, பவுலா ஜோன்ஸ் வழக்கில் என்னையும் ஒரு சாட்சியாக்கி ஜனாதிபதியைக் குற்றவாளியாக்க ஒத்தழைப்புத் தருமாறு வற்புறுத்திய வண்ணமுள்ளனர். அவர்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்க என்னை அனுமதிக்காமலிருக்க, நீ தான் உதவி செய்ய வேண்டுமம்மா!" என்று கூறிவிட்டு விசாரணை அதிகாரியான பென்னட்டுடன் தொடர்பு கொள்ளுமாறு அதற்கான தொலைபேசி இலக்கத்தையும் தாயாரிடம் கொடுத்தாள்.

தொலைபேசியில் தனது மகள் மோனிக்கா அழுது கொண்டிருக்கும்போது, மோனிக்காவுக்கு ஏதோ விபத்து நடந்து விட்டதோ என்றுதான் மார்சியா பயந்தாள். தெப்ராவும் பதற்றமடைந்தாள். தெப்ராவுடன் தான் உடனே புறப்பட்டு ஐந்து மணி இரயிலில் வாஷிங்டன் வருவதாக மார்சியா மகளிடம் சொன்னாள். இருவரும் அவசர அவசரமாகப் புறப்பட்டு பென் செல்லும் ரயில் நிலையத்துக்குச் சென்று வாஷிங்டன் ரயில் ஏறிக்கொண்டனர். மார்சியா தன்னுடைய கையடக்கத் தொலைபேசியில் தன்னுடைய முன்னாள் பேர்னிலிவின்ஸ்கியைத் தொடர்பு கொள்ள முயன்றாள். ஒரு ரயிலிலிருந்து அழைப்பு எடுத்தமையினாலோ என்னவோ தொலை பேசியில் தொடர்பு கொள்வது கடினமாக இருந்தது. இடையில் ஒரு ரயில் நிலையத்தில் பத்து நிமிடங்கள் வரை ரயில் தாமதாகும் என்று தெரிந்ததும் ரயிலை விட்டு கீழே இறங்கி நின்றவாறு பேர்னியுடன் தொடர்பு கொண்டாள்.

அந்தத் தொடர்பினை எடுத்தவர், "பேர்னி தற்போது ஒரு முக்கியமான கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறார். சற்றுத் தாமதமாக தொடர்பு கொள்ளு"மாறு கேட்டுக் கொண்டார். ஆனால் மார்சியா, தங்கள் மகள் மோனிக்காவின் மிக அவசரமான பிரச்சனைக்காக இந்தத் தொடர்பினை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறி எப்படியும் அவரை பேசும்படி சொன்னாள்.

தன்னுடைய முன்னாள் மனைவி, அவர்களுடைய மகள் மோனிக்காவைப் பற்றி பேசுவதாக இருந்தால் மோனிக்கா வாஷிங்கடனிலிருந்து நியூயோர்க்கிற்கு தனது இருப்பிடத்தை மாற்ற உத்தேசித்திருப்பதால், ஏதாவது அவசரப் பணத்தேவை ஏற்பட்டிருக்கலாம் என்றே பேர்னி முதலில் எண்ணினார். ஆனால் மோனிக்கா மத்திய புலனாய்வுத் துறையினரிடம் மாட்டிக் கொண்டு பெரும் சங்கடத்தில் இருக்கிறாள் என்று மார்சியா கூறியதும், அவர் பதற்றமடைந்தார்.

மோனிக்கா தான் கிளின்ரனுடன் வைத்திருந்த உறவுபற்றி ஓரளவுதான் தனது தாயாரிடம் கூறியிருந்தாள். எனினும் தனது மகள் ஜனாதிபதியுடன் தகாத உறவு வைத்துக் கொண்டிருந்தாள் என்ற சந்தேகமும் அவளுக்கிருந்தது. இருப்பினும் இவைபற்றி எதுவும் பேர்னி லிவின்ஸ்கிக்குத் தெரியாது.

தனது மகளுக்கு புலனாய்வுத்துறையினரால் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்ததும் எவ்வாறாவது அவளுக்குதவ வேண்டும் என்று தீர்மானித்தார் அவர். மார்சியாவிடம் எதற்கும் பதற்றமடைந்து நிலமைகளை மேலும் குழப்பமடைய செய்யாமல் இருக்கும்படி கேட்டுக் கொண்டு, உடனடியாக ஒரு சட்ட நிபுணரை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தொலைபேசியில் ஒப்புக் கொண்டனர்.

லிவின்ஸ்கிக்கோ அல்லது மார்சியாவுக்கோ தகுதியான வழக்கறிஞர் எவரையும் வாஷிங்டனில் தெரியாது. பேர்னி லிவின்ஸ்கி இந்தச் சந்தர்ப்பத்தில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இருந்தார். இருப்பினும் வாஷிங்கடனில் பில் கின்ஸ்பேர்க் என்றொருவர் தன்னுடைய கிளை அலுவலகத்தை வாஷிங்டனில் வைத்திருக்கிறார் என்பது தெரியும். அவர் ஒரு மருத்துவர் என்பதுடன் சட்ட வல்லுநராகவுமிருந்தார். அவருடைய உதவியைப் பெறுவதற்கு பேர்னி முயற்சி எடுக்கத் தொடங்கினார்.

(வருவாள்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

## திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | **மேரி கிறிஸ்டினா எல்டன்,** பாரதிபுரம் கன்னியா வீதி, திருகோணமலை. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# மாறியது மனம்

**ப**ண்டைக்கால ரோம் நகரில் ஒரு பயங்கரக் கொள்ளைக்காரன் இருந்தான். அவன் பத்தாண்டு காலம் சிறைவாசம் அனுபவித்து ஒரு நாள் விடுதலையானான்.

அவன் விடுதலையாகி வீதிவழியாக வந்ததைக் கண்டு நகர மக்கள் பீதியடைந்து, கடைகளையும் வீடுகளையும் மூடிக் கொண்டு இருந்தனர்.

அவன் கடும்பசிக்கு உணவு தேடியும் எங்கும் அவனுக்கு உணவு கிடைக்கவில்லை. வேதனையுற்றபடி தெருவழியாக அவன் நடந்து சென்றபோது, ஒரு வீட்டின் கதவு திறந்திருப்பதைக் கண்டான்.

அந்த வீட்டில் வயோதிபர் ஒருவர் அவரது மனைவியுடன் செபம் செய்து கொண்டிருந்தார். தயங்கித் தயங்கி அவன் வீட்டு முகப்பில் நின்றான்.

வீட்டுக்கார வயோதிபர் அவனை யாரென்று கேட்க, அவன் தன் கதையைச் சொல்லி அவரிடம் உணவு கேட்டான்.

அப்பெரியவர் அவனை வீட்டினுள் உட்காரவைத்து அவனுக்கு உணவளித்தார். உணவு உண்ணும்போது, அவன் வீட்டிலுள்ள விலையுயர்ந்த பொருட்களைக் கண்ணுற்றான்.

சாப்பிட்ட பின், அவன் வீட்டைவிட்டு வெளியேற முயல "நடு இரவில், அதுவும் இந்தக் கடும் பனியில் எங்கே போவாய்?" என்று கூறி அவனைத் தன் வீட்டிலேயே தங்க வைக்கிறார் அப்பெரியவர்.

வீட்டுக்காரப்பெரியவரும், அவரது மனைவியும் நன்கு உறங்கிய பின், வீட்டிலுள்ள விலையுயர்ந்த பொருட்களை எல்லாம் அள்ளிப்போட்டுக் கட்டிக் கொண்டு வெளியே சென்றான் அவன்.




அச்சமயத்தில் வீட்டுக்காரப் பெரியவர் விழித்துக் கொண்டு பார்க்கிறார். வீட்டில் ஒரேயொரு வெள்ளித் தாம்பாளத்தைத் தவிர வேறொன்றுமிருக்கவில்லை. அவனையும் காணவில்லை.


உடனே அந்தத் தாம்பாளத்தையும் எடுத்துக் கொண்டு, அவனைப் பின் தொடர்ந்து கூவிக்கொண்டு சென்றார் அவர்.

அவன் அச்சத்தில் ஓட, "ஓடாதே! இதனையும் எடுத்துச் செல்" என்று தாம்பாளத்தை நீட்டினார். அவன் தயக்கத்துடன் நின்று அதையும் பெற்றுக் கொண்டு செல்கிறான்.


ஒருமணி நேரத்தின் பின் அவன் இதயம் இடித்துரைக்க திரும்பி, அந்தப் பெரியவரின் வீட்டிற்கு வந்தான். அவன் எடுத்த பொருட்கள் யாவற்றையும் பெரியவரின் காலடியில் வைத்து, அழுது மன்னிப்புக் கேட்டான்.

பெரியவரும் அவனை மன்னித்துக் கட்டித் தழுவிக் கொண்டார்.


**சுயநலமற்ற அன்பும் பரிவும் எவ்வளவு கெட்டவரையும் நல்லவராக்கி விடுகின்றது என்பது இந்த உண்மைக் கதை மூலம் புலனாகிறதல்லவா?**



**கீழே நிற்கும் ஜொனி மேலே கிடக்கும் தனது பொம்மையை எடுத்து விளையாடுவதற்கு ஆசையாய் இருக்கிறான். அவன் பொம்மையை எடுக்கச் செல்ல வழி சொல்லுங்கள் பார்ப்போம்.**



## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **30.12.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **374**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 372

பரிசுக்குரியவர்:
க.தயாளன்,
தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| எஸ்.கவிஷாலினி, இந்து தேசிய கல்லூரி, புஸ்ஸல்லாவ. | எஸ்.கிருஷ்ணராஜ், விபுலானந்தா தமிழ் மகாவித்தியாலயம் தெமட்டகொட. |
| மா.ஜசிக்கா யாஷினி, புனித அந்தோனியார் பாலர் பாடசாலை, இறம்பைக்குளம். | க.டினோஷன், இக்கோல் ஆங்கிலப் பாடசாலை, திகன. |
| ச.டில்ஷிகா, வின்சன்ற் மகளிர் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு. | வி.சுஜீகரன், நு/புனித ஜோன் பொஸ்கோ கல்லூரி, அட்டன். |
| என்.எம்.நிஸாம், எஸ்.பி.ஒழுங்கை, காத்தான்குடி. | பாத்திமா நிஷ்மா நஜீம், சென் எக்னஸ் கொன்வென்ட், பலாங்கொடை. |
| சு.சத்தியதர்ஷன், சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. | எஸ்.பாத்திமா மஹ்பூபா, மட்/அல்முனீறா பாலிகா ம.வி.ஏறாவூர். |

## கிறிஸ்துமஸ் மரம்



**கி**றிஸ்துமஸ் நாட்களில் தேவாலயங்களிலும், கிறிஸ்தவர்களின் இல்லங்களிலும், பெரிய பெரிய கடைகளிலும் கிறிஸ்துமஸ் அலங்காரங்களில் 'கிறிஸ்துமஸ் மரம்' பசுமையாகக் காட்சியளிக்கும்.

மேற்கத்திய நாடுகளில் இந்தப் பசுமையான மரம் முடிவில்லா வாழ்வைக் குறிக்கும் அலங்காரப் பொருளாகக் குறிப்பிடப்படுகிறது.


பச்சை நிறத்தை ஒரு முக்கிய சின்னமாக மக்கள் பழங்காலம் தொட்டுப் பயன்படுத்தி வருகிறார்கள். எகிப்து, இஸ்ரேல் தேசத்துக் கலாசாரங்களில் பச்சை நிறம் என்பது ஓர் அழிவில்லாத தன்மையைக் குறிப்பதாக இருந்தது.

ஜெர்மன் நாட்டில் அப்பிள் மரத்தை 'சொர்க்கத்தின் மரம்' என்று அழைப்பார்கள். கிறிஸ்துமஸ் சமயங்களில் இந்தமரத்தை வீடுகளில் வைத்து இவர்கள் அலங்கரித்தார்கள்.

இந்தப் பாரம்பரியம் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்திற்குக் கொண்டு வரப்பட்டது. இதன் பின்னரே உலகெங்கும் இது வழக்கத்திற்கு வந்தது.

வருடா வருடம் மின் விளக்குகள், மதச்சின்னங்கள், மின்னும் அலங்காரங்கள் கிறிஸ்துமஸ் மரத்தில் தொங்க விடுவது வழக்கமானது.

## கிறிஸ்துமஸ் வாழ்த்து மடல்



**கி**றிஸ்துமஸ் வாழ்த்து மடல் முதன் முதலில் உருவானது 18ம் நூற்றாண்டில் தான். முதல் வாழ்த்து அட்டை அனுப்பப்பட்டது. காகிதத்தில் அல்ல மரத்தில்; பசுமையான மரங்களைத் தேர்ந்தெடுத்து அதில் வாழ்த்துக்களை ஆணியால் பதித்து, பிறகு அதைத் தனியாக வெட்டி அனுப்பினர்.

காகிதத்தில் உருவான வாழ்த்துமடல் 1843ம் ஆண்டு அனுப்பப்பட்டது. காகிதத்தில் உருவான வாழ்த்து மடலை முதலில் அனுப்பியவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஹென்றிஹோல் என்பவர்.

அந்த வாழ்த்து மடலில் சூசையப்பரும் மரியாளும் குழந்தை இயேசுவை வைத்திருப்பது போன்ற படம் பொறிக்கப்பட்டிருந்தது.



## மர்மத் தொடர்

04

# மேனகாவின் மரகதம்

டெலிஃபோன் பூத்திலிருந்து வெளிப்பட்ட அவன் வெளியே இன்ஸ்பெக்டர் ஒருவர் நின்றிருப்பதைப் பார்த்ததும் ஒரு விநாடி முகம் இருண்டு மறுவிநாடியே இயல்புக்கு வந்தான்.

இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"டெலிஃபோன் ஒர்க் பண்ணுதா?"

"பண்ணுது ஸார்...."

"நேத்துபூராவும் இந்த ஃபோன் அவுட் ஆஃப் ஆர்டர். இன்னிக்கு சரி பண்ணிட்டாங்க போலிருக்கு..."

இன்ஸ்பெக்டர் சொன்னதைக் கேட்டு புன்னகையோடு தலையசைத்துக் கொண்டே நடக்க முயன்றவனை இன்ஸ்பெக்டரின் குரல் மறுபடியும் ஒலித்து அவனை நிறுத்தியது.

"ஒரு நிமிஷம் மிஸ்டர்..."


அவன் நின்றான். இன்ஸ்பெக்டர் ஏறிட்டார்.

"இதுக்கு முன்னாடி உங்களை எங்கையோ பார்த்த மாதிரி இருக்கே. உங்க நேட்டீவ் ப்ளேஸ் எது...?"

"இதே மெட்ராஸ்தான்...."

"உங்க பேரு....?"

உண்மையான பெயரை மறைத்து விட்டு "சிவராம கிருஷ்ணன்!" என்றான்.



"வேலைக்கு போறீங்களா..... இல்ல பிசினஸா?"

"பிசினஸ்.."

"என்ன பிசினஸ்....?"

அவன் எரிச்சலாய் பார்த்தான். "என்ன ஸார் இது! ஏதோ ஒரு குற்றவாளியை விசாரிக்கிற மாதிரி விசாரணை பண்ணிட்டிருங்கீங்க....?"

இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார். "நீங்க குற்றவாளியா இல்லையான்னு தெரிஞ்சுக்கத்தான்!"

"என்ன ஸார் விளையாடறீங்களா....? நான் ஒரு டீஸன்ட்டான ஃபேமிலியைச் சேர்ந்தவன்."

"அப்படியிருந்தா சந்தோஷந்தான்! அது சரி நீங்க இப்ப யாருக்கு ஃபோன் பண்ணீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா....?"

"அது என்னோட பர்சனல் மேட்டர். நான் யாருக்கு ஃபோன் பண்ணினேன்ங்கிறதை உங்க கிட்ட சொல்ல வேண்டிய அவசியமில்லை."

"ஸாரி மிஸ்டர்... உங்க மாதிரியான இளைஞர்கள் சிலர் டெலிஃபோன் பூத்திலிருந்து ஃபோன் பண்ணி வெடிகுண்டு புரளிகளைக் கிளப்பி விடறாங்க. அதுக்காகத்தான் இப்படியான போலீஸ் நடவடிக்கை. சிட்டியில் இருக்கிற எல்லா டெலிஃபோன் பூத்துக்களையும் கடந்த இரண்டு நாளா இப்படித்தான் வாட்ச் பண்ணிட்டிருக்கோம். நீங்க இப்போ எந்த நம்பருக்கு ஃபோன் பண்ணி பேசினீங்களோ அந்த நம்பரை நோட் பண்ணிக்குடுங்க. அந்த நெம்பருக்குரிய நபர் யாரு அட்ரஸ் என்னங்கறதையும் சொல்லுங்க. நான் வெரி ஃபை பண்ணிகிட்டு உங்களை அனுப்பிடறேன்...."

அவனுக்கு நெற்றி வியர்த்து பிசு பிசுத்தது. வாய் ஈரம் காய்ந்து உலர்ந்து போயிருந்தது..

இன்ஸ்பெக்டரின் புன்னகை பெரிதாயிற்று.

"தப்பு பண்ணினவங்களுக்குத்தான் இப்படி வேர்க்கும். உங்க டெலிஃபோன் நெம்பர் தர்றீங்களா....?"

அவன் இன்ஸ்பெக்டருக்கு பதில் சொல்லாமல் சுற்றும் முற்றும் பார்த்தான்.

அந்தக் காலை நேரத்தில் சாலையில் ஜன நடமாட்டம் அறவே காணாமல் போயிருக்க, அவன் தன் இடுப்புக்கு கையை கொண்டு போய் அங்கே ஒளித்து வைத்திருந்த கத்தியை எடுத்தான்

அவன் கையில் கத்தி முளைத்து தன் மார்பை நோக்கி அது உயர்த்தப்பட்டதும் இன்ஸ்பெக்டர் அந்த ஒரு விநாடிக்கும் குறைவான நேரத்தில் உஷார் நிலைக்கு வந்து கத்தியைப் பிடித்திருந்த அவனுடைய கையின் மணிக்கட்டை 'ர்ரப்' என்று உடும்பாய்ப் பற்றிக் கொண்டார்.

"உன்னை மாதிரி எத்தனை பேரைப் பார்த்திருப்பேன். உன் கையால கத்திக் குத்தை வாங்கிச் செத்துப் போறதுக்காகவா காக்கி யூனி ஃபோம் போட்டுகிட்டு வந்திருக்கேன்...? கத்தியைக் கீழே போட்றா...."

இன்ஸ்பெக்டர் அவனுடைய மணிக்கட்டை முறுக்க, ஒரு நிமிஷ போராட்டத்திக்குப் பின் கத்தி உதிர்ந்து பிளாட்பாரக்கல்லில் பட்டு தெறித்து பக்கத்தில் ஓடிக் கொண்டிருந்த ஏரிக் கரைக்குள் விழுந்தது.

இரண்டு பேருக்கும் இப்போது கை கலப்பு ஆரம்பமாக அவன் வேகமாய் இயங்கினான். வலது கை முஷ்டி இன்ஸ்பெக்டரின் அடிவயிற்றில் ஓர் இடியாய் இறங்க, அவர் வலியை ஜீரணித்துக்கொள்ள முடியாமல் சுருண்டு விழுந்தவரின் முகத்தில் அவனுடைய பூட்ஸ்கால் ஆக்ரோஷமாய்ப் பதிந்து நசுக்க, இன்ஸ்பெக்டரின் கடைவாயிலும் ரத்தம் உடனே தெரிந்து

**கிரைம்சக்கரவர்த்தி**

**ராஜேஷ்குமார்**

கோடுகளாய் வழிந்தது.

தூரத்தில் யாரோ இரண்டு பேர் ஓடி வர, அவன் இன்ஸ்பெக்டரை காலால் உதைத்து உருட்டிவிட்டு தன் பைக்கை நோக்கி ஓடிப்போய் மேலே பரவி கிக்கரை மிதிக்க பைக் உயிர் பிடித்துக் கொண்டு, சைலன்ஸரில் புகை தள்ளியது. ஆக்ஸிலேட்டரை வேகமாய் முறுக்க, துப்பாக்கியிலிருந்து வெளிப்பட்ட தோட்டாவாய் மாறியது பைக்.

கண்ணிமைக்கிற நேரம்கூட இல்லை. பைக் அந்த வளைவில் திரும்பி மறைந்து விட, ஓடிவந்த அந்த இரண்டு பேரும் இன்ஸ்பெக்டருக்கு பக்கத்தில் குனிந்தார்கள். எழுப்பி உட்கார வைத்தார்கள். இரண்டு பேரும் காலை நேர ஜாக்கிங் சூட்டில் இருந்தார்கள்.

"யார்.... ஸார் அவன்...?"

இன்ஸ்பெக்டர் ரத்தம் வழியும் வாயோடு மூச்சிரைத்துக் கொண்டே சொன்னார்.

"அவன் யார்ன்னு தெரியலை. ஆனா தப்பான ஆள். ஒரு கல்யாண மண்டபத்துக்குள்ளேயிருந்து பின்பக்க காம்பௌண்ட் சுவர் ஏறி ரோட்டுப் பக்கத்துல குதிச்சவனை நான் தூரத்திலிருந்து பார்த்து ஃபாலோ பண்ணிட்டு வந்தேன். இந்த பூத்துக்குள்ளே யார்க்கோ ஃபோன் பண்ணிட்டிருந்தான். ஃபோன் பண்ணிட்டு வெளியே வந்தவனை மடக்கி விசாரணை பண்ணிகிட்டு இருக்கும் போது, குத்துறதுக்காக கத்தியை எடுத்துக்கிட்டான். அவனை ஹேண்டில் பண்ணி பிடிக்கிறதுக்குள்ளே என்னைத் தாக்கிட்டு ஓடிட்டான்." இன்ஸ்பெக்டர் பேசிக்கொண்டே எழமுயன்றார். முடியவில்லை.

அடிவயிற்றில் வலி தெறித்து நரம்புகள் சுருண்டன. அப்படியே சாய்ந்து கொண்டவர் அந்த இரண்டு பேர்களையும் ஏறிட்டார்.

"ப்ளீஸ்.... எனக்காக ஒரு உதவி செய்ய முடியுமா?"

"சொல்லுங்கள்.... சார்....;"

"அவசரப்போலீசுக்கு உடனே ஃபோன் பண்ணி விசயத்தை தெரியப்படுத்துங்க. என்னோட பேர் கிஷோர். க்ரைம் ப்ராஞ்ச்ல இன்ஸ்பெக்டரா இருக்கேன். அதையும் மென்ஷன் பண்ணுங்க. அப்பதான் ரெஸ்பான்ஸ் இருக்கும். தகவல் கன்ட்ரோல் ரூமுக்கு போயிடுச்சின்னா, அவங்க பைக்கை எப்படியும் சேஸ் பண்ணி பிடிச்சிடுவாங்க. பைக் நெம்பர் நோட் பண்ணிக்குங்க டி.என்.டி.டபுள் பைவ் டபுள் நைன்."

ஜாக்கிங் சூட் அணிந்த இரண்டு பேர்களில் ஒருவர் டெலிஃபோன் பூத்துக்குள் நுழைந்து அவசரப் போலீசை தொடர்பு கொண்டு விசயத்தைச் சொல்ல, அடுத்த சில நிமிடங்களில் போலீஸ் ஜீப்பொன்று தன் மண்டையில் சுழலும் விளக்கோடு புழுதிமண்ணும் புகையும் பறக்க பூத்துக்கு முன்பாய் வந்து நின்றது. ஒரு இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் இறங்கி டெலி ஃபோன் பூத்துக்குள் சாய்ந்து தளர்வாய் உட்கார்ந்திருந்த இன்ஸ்பெக்டர் கிஷோருக்குப் பக்கத்தில் வந்தார்கள். கைத்தாங்கலாய் அவரைப்பிடித்து தூக்கிநிறுத்தி ஜீப்பை நோக்கி கூட்டிப்போனார்கள். ஜாக்கிங் போனவர்களுக்கு நன்றி சொல்லி விட்டு ஜீப் புறப்பட்டது..... ஹாஸ்பிட்டலை நோக்கி.

அந்த இன்ஸ்பெக்டர் சொன்னார்.

"மிஸ்டர் கிஷோர்... அயாம் பராத்தகன். பி.சிக்ஸ் பொலிஸ் ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர். சுப மங்களா கல்யாண மண்டபத்தில் கொஞ்சநேரத்துக்கு முந்தி கல்யாண மாப்பிள்ளை தேவேந்திரன் கொலை செய்யப்பட்டு கிடக்கிறதா தகவல் வந்தது. சப்-இன்ஸ்பெக்டரும் இரண்டு கான்ஸ்டபிள்களும் புறப்பட்டுப் போயிருக்காங்க. நான் ஸ்டேஷன்ல வேற ஒரு கேஸை டீல் பண்ணிக் கொண்டிருக்கும் போது தான் கண்ட்றோல் ரூமில் இருந்து எனக்கு தகவல் வந்தது. ஸோ.... நீங்க கொலையாளியைப் பார்த்திருக்கீங்க...?"

கிஷோர் பலஹீனமாய்த் தலையாட்டினார்.

"எஸ்.... "

"ஆள் எப்படி இருந்தான்....?"

"இளைஞன். வயசு முப்பதுக்குள்ள. நல்ல உயரம். மாநிறம். கொஞ்சம் குடைத்த மாதிரியான நாசிக்குக் கீழே பெரிய மீசை. டபுள்சின். பான்கரை பல்வரிசை. இளநீல நிறத்தில் ஜீன்ஸ் பேண்டும் சர்ட்டும் உடுத்தி பாாக்க ஒரு காலேஜ் ஸ்டூடண்ட் மாதிரி இருந்தான்."

"என்ன பைக்......?"

"கவாஸாகி'. ரெஜிட்ரேஷன் நெம்பர் டி.என்.டி. டபுள்ஸ் ஃபைவ் டபுள் நைன்."

"எப்படியும் மாட்டுவான்....! போலீஸ் சிட்டி பூராவும் அலர்ட்டாகி அங்கங்கே வலை விரிச்சு வெச்சாச்சு. ஒரு அரை மணி நேரத்துக்குள்ளே போலீஸ் லாக்கப்புக்குள்ளே அவன் முட்டி போட்டு உட்கார்ந்திருப்பான்."

ஹாஸ்பிட்டல் வந்தது.

*மர்மம் தொடரும்...*

# இதுவும் ஒரு நடிகையின் கதை

04

‘டைரக்டரின் கண்கள் சிவந்திருந்தன. போதை! காலியான பாட்டில், மேஜை மீது இருந்ததைக் கவனித்தாள் மாலு, அருகிலேயே சீல் உடைக்காமல் மற்றொரு பாட்டில்.

"எங்கேய்யா போய்த் தொலைஞ்சே?"

வார்த்தைகளை முந்திக் கொண்டு வந்தது விஸ்கி வாடை மாலுவுக்குக் குமட்டியது.

"முதல் நாள் ஷூட்டிங்காச்சே.... அதான் நெர்வஸாயிடுச்சாம்! இப்ப என் கிட்ட ஆக்ட் பண்ணிக் காட்டுச்சு. பிரமாதமா



சில திரைப்படங்களில்
கதாநாயகிகளைப்பார்த்து அவர்கள் பெறும்
பொருளாதார வசதிகளைப் பற்றி கேள்வியுற்று மூக்கின் மேல்
விரலை வைக்காத எவருமிருக்க முடியாது. சுவரொட்டிகளிலும்
விளம்பரங்களிலும் அந்த நாயகியின் உருவத்தைப் பார்த்து கனவு காணும்
இளைஞர்கள் எத்தனைபேர்? ஆனால் அந்த அழகு ஜொலிப்பில் பெண்ணின் வாழ்க்கையின்
பின்னால் மறைந்துகிடக்கும் மர்மமான சோகங்களைப் பற்றி எவரும் எண்ணிப்
பார்ப்பதில்லை. பணமும் புகழும் படைத்த பல நடிகைகள் தற்கொலை செய்து தங்கள்
உயிரையே மாய்த்து விடுகிறார்கள்.இன்று முன்னணியில் ஜொலிக்கும் நடிகைகள்
பலரின் பின்னணியை எடுத்துக் காட்டும் கதைகள் சிறிதளவு
கற்பனைக் கலப்புடன் தொடராகத் தரப்படுகின்றன.

நடிக்குது ஸார்....."

மாலுவுக்குத் திகைப்பாக இருந்தது. 'நான் எப்போது இவரிடம் நடித்துக் காட்டினேன்?'

"அப்படியா? வெரிகுட்.... வெரிகுட். எங்கே என்கிட்ட நடிச்சுக் காட்டுப் பார்க்கலாம்...."

அசைவற்று நின்றாள் மாலு. இப்படி திடுதிடுமென்று நடித்துக் காட்டு என்றால் எப்படி நடிப்பது?

"நான் போய் சீன் பேப்பரை எடுத்துட்டு வரவா ஸார்?"

டைரக்டர் பதில் சொல்வதற்கு முன்பே அவசரமாக நகர்ந்தான் அசோஸியேட் வரதராஜன். போகும் போது அறைக்கதவை இழுத்து சாத்திவிட்டுப் போனான். கதவு உள்பக்கமாகத் தாழிட்டுக் கொண்டது.

"மாலுக்குட்டி.... ஏன் நிக்கிறே? இப்படி வா... நான் தான் ஹீரோ.... நீதான் ஹீரோயின். நமக்கு இப்ப முதல் இரவு. எங்கே நடி பார்க்கலாம்...."

எழுந்து, மாலுவைத் தொட்டார். கைபிடித்து கட்டிலில் உட்கார வைத்தார்.

மாலுவுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. எழுந்து ஓடிவிடலாமா என்று ஒரு கனம் நினைத்தாள். அது தற்கொலைக்குச் சமம். சினிமாவில் ஒருத்தரும் சீண்ட மாட்டார்கள். எதிர்காலமே பாழாகிவிடும்.

மாலுவுக்கு நெருக்கமாக டைரக்டர் உட்கார்ந்தார். அவரது மூச்சுக் காற்று அவளின் பின் கழுத்தில் உஷ்ணமாகத் தகித்தது.

அப்போது மாலுவின் வயது பதின்மூன்று!

இப்போது இருபத்தெட்டு! இந்த பதினைந்து ஆண்டுகளில் எத்தனையோ மாற்றங்கள்!

மாலுவின் முதல் படம் வெள்ளிவிழா வெற்றி! தொடர்ந்து நடித்த படமும் ஒரு வருஷம் ஓடியது. அதுவும் அறிமுகப்படுத்திய டைரக்டரின் படம்! கான்ட்ராக்ட் என்ற பெயரில் மூன்று வருஷங்கள் மாலுவைத் தன் கட்டுப் பாட்டிலேயே வைத்திருந்தார் அவர்.

கான்ட்ராக்ட் படத்துக்கு மட்டும்மல்ல; அவளுக்கும்தான். நினைத்த நேரத்துக்கு கூப்பிடுவார். 'மாட்டேன்' என்று சொல்ல முடியாது. கிழச்சிங்கம் உறுமும். சிலசமயம் வீட்டுக்கே தேடி வந்து பசியாறும்.

ஊர் உலகத்துக்குத்தான் மாலு பெரிய நட்சத்திரம்! டைரக்டரைப் பொறுத்தவரை இச்சை தீர்க்கும் அடிமை அவள்.

இந்த நரகத்திலிருந்து விடுபடுவது எப்படி? தீவிர எண்ணம் அவளை ஆட்கொண்டிருந்தபோதுதான், ராவ் அறிமுகமானான். இளம் கேமிராமேன்! மென்மையான மனிதன்.

காதல் வயப்பட்டாள் மாலு. டைரக்டருக்கு விஷயம் தெரிந்தபோது, முறுக்கு மீசைக்காரரானார். இது நாள் வரை தான் அனுபவித்த இளம் சொர்க்கத்தில் இனி தனக்கு இடமில்லை என்பதை அவரால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. அதில் தான் மட்டும் இருக்க விரும்பினார்.

"நானே உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன். அந்தப் பயலை விட்டுடு..."

டைரக்டரின் கோரிக்கையை நிர்தாட்சண்யமாக நிராகரித்தாள். ராவைக் கைப்பிடித்தாள்.

அவர் தயவு இனி எதற்கு? நாலு தலைமுறை உட்கார்ந்து சாப்பிடுமளவுக்கு வசதி இருக்கிறது. இனி நடிக்க வேண்டாம். நல்ல மனைவியாக இருக்கலாம். நிறைய குழந்தை பெற்றுக் கொள்ளலாம்.

இனிடைரக்டரின் முகத்தில் கூட முழிக்கக்கூடாது.

கல்யாணத்திற்குப் பிறகு நடிக்கமாட்டேன் என்று விடைபெற்றுப்போனவள், மூன்று வருஷம் கழித்து மீண்டும் அரிதாரம் பூசினாள்.

**ஜெ.பிஸ்மி**

பத்திரிகைகள் கேள்வி கேட்டன. கிண்டலடித்தன. அவள் வாய் திறக்கவில்லை. மீண்டும் நடிக்க வந்தது ஏன் என்று எவரிடமும் சொல்லவில்லை.

சொல்ல முடியாது. தனக்குக் குழந்தை பாக்கியம் சாத்தியமில்லை என்பதையும், தனிமையின் கூரிய நகங்கள் தன்னைக் குத்திக் கிழிப்பதையும் எப்படிச் சொல்ல முடியும்?

கேமராவுக்கு முன் தன்னை மறக்க நினைத்தாள். ஆனாலும் பழைய வரவேற்பில்லை. கல்யாணமானவள் என்ற இமேஜ் ரசிக ஆதரவைத் துடைத்துப் போட்டுவிட்டது.

ஷூட்டிங் இல்லை என்றால் வீடு; வெறுமை! குழந்தை இல்லாத குடும்ப வாழ்க்கையும் நரகம்தான். அதனாலேயே சமூக சேவையில் நாட்டம் வந்தது. அனாதை இல்லங்களைத் தேடிப்போக ஆரம்பித்தாள்.

பட வாய்ப்புக்களும் அவ்வளவாக இல்லை. வரும் ஒன்றிரண்டு படங்களிலும் கூட முக்கியத்துவம் இல்லாத வேடங்கள் தான். ப்ளாஷ்பேக் காட்சியில் வந்து செத்துப் போவது. அல்லது கதாநாயகனுக்கு அம்மா அல்லது விதவை அக்கா.

மாலு மறுப்பதில்லை. தனிமை நெருங்காதிருக்க இது ஒன்றே வழி. இனி சாகும் வரை நடிப்புத்தான்.

(வளரும்)

## எழுத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 34

## எஸ்.டி.எஸ். கண்ட பாரதி





சென்னை மாநகர் தம்புச்செட்டி தெருவிலுள்ள திருவருள் மிகு காளிகாம்பாள் கமடேஸ்வரர் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் காளிகாம்பாளின் சந்நிதியில் இருந்த வண்ணமே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இந்தப் பாடல்களைப் பாடினார்.

சக்கரவர்த்தி சிவாஜி தென்னாட்டுக்கு வந்திருந்தபோது, இதே ஆலயத்தி லிருந்து அம்பாளைத் தரிசித்தார் என்ற வரலாறும் இக்கோயிலுக்குண்டு. இந்த கோயிலில் வைத்து பாரதியார் பாடிய காளிஸ்தோத்திரம் என்ற இத்தொகுதியின் ஐந்து பாடல்களை இங்கு தருகிறோம்.

யாதுமாகி நின்றாய்-காளி
எங்கு நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம்-காளி
தெய்வ லீலை யன்றோ?
பூத மைந்து மானாய்-காளி
பொறிக ளைந்து மானாய்
போத மாகி நின்றாய்-காளி
பொறியை விஞ்சி நின்றாய்

இன்ப மாகிவிட்டாய்-காளி
என்னுள்ளே புகுந்தாய்
பின்பு நின்னை யல்லால்-காளி
பிறிது நானு முண்டோ?
அன்ப ளித்து விட்டாய்-காளி
ஆண்மை தந்து விட்டாய்
துன்ப நீக்கி விட்டாய்-காளி
தொல்லை போக்கி விட்டாய்

என்ற னுள்ள வெளியில்-ஞானத்
திரவியேற வேண்டும்
குன்ற மொத்த தோளும்-மேருக்
கோல மொத்த வடிவும்
நன்றை நாடுமனமும்-நீயெந்
நாளு மீதல் வேண்டும்
ஒன்றை விட்டு மற்றோர்-துயரில்
உழலு நெஞ்சம் வேண்டா

வானகத்தி னொளியைக்-கண்டே
மனம கிழ்ச்சி பொங்கி
யானெ தற்கு மஞ்சேன்-ஆகி
எந்த நாளும் வாழ்வேன்
ஞான மொத்த தம்மா-உவமை
நானு ரைக்கொ ணாதாம்
வான கத்தி லொளியின்-அழகை
வாழ்த்து மாறி யாதோ?

காளி மீது நெஞ்சம்-என்றும்
கலந்து நிற்க வேண்டும்
வேளை யொத்த விறலும்-பாரில்
வேந்த ரேத்து புகழும்
யாளி யொத்த வலியும்-என்றும்
இன்ப நிற்கு மனமும்
வாழி யீதல் வேண்டும்-அன்னாய்
வாழ்க நின்றன் அருளே.

காளிதேவியைப் பற்றிய பாடல்களில் என் மனம் பதிவுற்றமைக்கு ஒருவித 'சைகோலோஜிகல்' காரணமும் உண்டு.

திருகோணமலையில் சிவன் கோவிலடியிலிருந்த எங்கள் வீட்டிலிருந்து பெரிய கடை என்ற பகுதியில் அப்போதிருந்த சென்ட் ஜோஸப் கல்லூரிக்குப் பெரும்பாலும் பக்கி வண்டியில் செல்வது வழக்கம்.

சிலசமயம் நடந்தும் செல்ல வேண்டியிருக்கும்.

நடந்து செல்லும்போது, பெரிய மைதானத்தை அடுத்துள்ள பாதையில் காளி கோவிலைச் சந்திக்க வேண்டி வரும்.

காளி கோவிலில் தீபாராதனை ஆவது தெருவில் போகும்போதே தெரியும்.

தீபாராதனை தெரிந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன, காளி கோவிலின் முன்னே ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் போவது தினமும் நிகழும் ஒரு சம்பவமாகும்.

சின்ன வயதில் அப்படிக் காளியைக் கும்பிட்டமைக்கும் காரணம் இருந்தது. காளி கோவிலைத் தாண்டியதும், கரிக்கோப்பு என்ற ஒரு கிறிஸ்தவ சவக்காலை உண்டு. அந்தச் சவக்காலையைப் பற்றிப் பலப்பல பயங்கரக் கதைகளைக் கல்லூரி உடன் மாணவர்கள் கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த நாட்கள் இப்போது போலச் சனப் புழக்கமும். லைட் வெளிச்சமும் இல்லாத நாட்கள்!

எனவே, சுய பாதுகாப்பை நாடி, காளியை வேண்டி, நெஞ்சில் உருவாகும் பயத்தைப் போக்கிக் கொண்டு மேலே நடப்பது வழக்கம்.

இந்தப் பின்னணியில் பாரதியின் 'காளிப் பாட்டு' முதலில் நெஞ்சைத் தொட்டதில் ஆச்சரியமில்லை அல்லவா? இந்தப் பாடல்களையே நவராத்திரி காலத்தில் துர்க்கைக்கு உரிய முதல் மூன்று நாட்களிலும் இசையோடு பாடி வந்தேன்.

எனக்கு பாரதியாரை அறிமுகம் செய்து வைத்த திரு.சிவ.சுப்பிரமணியம் அவர்களுக்கு பாரதியாரைப் பற்றியும், அவர் பெருமைகளைப் பற்றியும், அவர் கவிதைகளின் சிறப்புகளைப் பற்றியும் எடுத்துக் கூறியவர் யார்?

இலங்கையில், பாரதியாரின் பெயர் முதன் முதலில் அறிமுகமானது திருகோணமலையில்தான். இதில் சந்தேகம் இல்லை. இந்த அறிமுகம் 1926ம் ஆண்டுக்கும் 1928ம் ஆண்டுக்கும் இடையே நடைபெற்றது. அந்த அறிமுகத்தைச் செய்து வைத்த பேரறிஞர் ஒருவரே, இந்தியாவிலும் பாரதியைப் பெருங் கவிஞர் வரிசையில் சேர்ப்பதற்குக் காரணகர்த்தராக இருந்தார்.

பிரிட்டிஷ் ஆட்சியின் கெடுபிடிக்குப் பயந்து புதுச் சேரியில் ஒளிந்து, மறைந்து வாழ்ந்த பாரதியாரை தமிழ் நாட்டு மக்கள் கஞ்சாக் கவிஞர் என்றும், குடுகுடுப்பைக் கவிஞர் என்றும் ஏளனம் செய்தனர்.

அவர் சென்னைக்குத் திரும்பி திருவல்லிக்கேணியில் காலமானபோது, 23 பேர்களே அவரது சடலத்தை மயானத்துக்கு எடுத்துச் சென்று தீமூட்டினர்.

பாரதியார் தமது தேசியப் பாடல்களை அச்சிட்டு விநியோகித்த சமயத்தில், இலக்கணப் புலிகளும், தனித் தமிழ்ப் பண்டிதர்களும் அவரைத் 'தெம்மாங்குக் கவிஞர்' என்று ஒதுக்கினர்.

பாரதியார் இறந்த பின்னரும், வெகு காலம் வரை, அவருடைய மதிப்பையும் சிறப்பையும் உரிய அளவிற்கு தமிழ் நாட்டு மக்கள் உணரவில்லை.

இப்படியான ஒரு சூழ்நிலையில் அவரை முதன் முதலில் பெருங் கவிஞராக மதித்து தமிழ்நாட்டில் அவருக்கு அந்தஸ்துத் தேடிக் கொடுத்தவர் ஓர் இலங்கையர்தான்.

அந்த இலங்கையர்தான் திருகோணமலையில் பாரதியாரை முதன்முதலில் அறிமுகம் செய்து வைத்தவருமாவார்.

அந்தப் பெருமைக்குரிய இலங்கையர் யார்?

## இரா.பத்மநாதன்

மஹாகவி பாரதியாரின் பாடல்களையும், அவரைப் பற்றிய வரலாற்றையும் முதன் முதல் இலங்கையில், அதுவும் திருகோணமலையில், அறிமுகப்படுத்தியவர் யார் என்ற உண்மை இன்று பலருக்குத் தெரியாமல் இருக்கிறது.

பல உண்மைகள் பின்னுக்குத் தள்ளப்படுவது போல, இந்த உண்மையும் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

பாரதியாரின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் இந்த சமயத்தில், இந்த உண்மையை ஏட்டில் பதித்து வைக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். பிற்காலச் சந்ததியினருக்கு இது பயன்படக் கூடும்.

மற்றவர் பலர் பாரதியைப் பற்றி அவ்வளவு தூரம் பெருமை பாராட்டாத வேளையில், பாரதியின் மேதா விலாசத்தை எடைபோட்டு, உரைத்து, மாற்றுணர்ந்து போற்றியவர் வேறு யாருமல்ல-

அந்தப் பெருமைக்குரிய இலங்கையர் சுவாமி விபுலாநந்தர் தான்.

சுவாமி விபுலாநந்தர் தாமே ஒரு சிறந்த உரையாசிரியராகவும், கவிஞராகவும் விளங்கியவர். ஆங்கில மொழி மூலம் விஞ்ஞானத் துறையில் பி.எஸ்ஸி. பட்டம் பெற்றவர். இலத்தீன் மொழியிலும், சமஸ்கிருதத்திலும் பாண்டித்தியம் பெற்றவர். பல ஆங்கில காவியங்களைக் கவிதையிலேயே தமிழாக்கியவர்.

இலங்கையில், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் முதல் பண்டிதர் பட்டம் பெற்றவர் சுவாமி விபுலாநந்தர் தான். அப்போது அவர் துறவு பூணவில்லை. சுவாமி விபுலாநந்தர் ஆகவில்லை. அதனால் அவர் பண்டிதர் மயில்வாகனனார் என்றே அழைக்கப்பட்டார்.

பண்டிதர் பரீட்சையில் முதன்மையாகத் தேறியதனாலும், மேலும் பல தகுதிகள் இருந்தமையினாலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பரீட்சைக் குழுவில் பண்டிதர் மயில்வாகனனாரும் ஓர் உறுப்பினர் ஆக்கப்பட்டார்.

அதனால், அடிக்கடி அவர் இந்தியா செல்லும் சந்தர்ப்பம் கிட்டியது. அப்போது அங்கு சுதந்திரக் கிளர்ச்சி நன்கு தழைத்தோங்கி வளர்ந்து வந்த நேரம். பாரதியைப் பற்றியும், அவர் பாடல்களைப் பற்றியும் அங்கு கேள்விப்படும் வாய்ப்பு பண்டிதர் மயில்வாகனனாருக்கு ஏற்பட்டது.

பாரதியின் மீது ஒரு பற்றும் பிடிப்பும் அப்போதே அவருக்கு அரும்பிவிட்டது.

பின்னர் பண்டிதர் மயில்வாகனனார் துறவு பூணும் சிநதையராக சென்னை, மயிலாப்பூர் இராம கிருஷ்ண மடத்தில் சேர்ந்தார். பிரபோத சைதன்யர் என்ற பிரமச்சாரி ஆனார். அப்போது ஆண்டு 1922, பாரதி மறைந்து ஒரு சில மாதங்களே மறைந்திருந்தன. பாரதி மறைந்தது 1921 செப்டம்பர் 11ம் திகதி என்பது தெரிந்ததே.

1924 சித்திரா பௌர்ணமி அன்று பிரபோத சைதன்யருக்கு பரிபூரண க்ஷாயம் வழங்கப்பட்டது. அன்று தான் அவர் சுவாமி விபுலாநந்தர் ஆனார்.

சென்னையில் அவர் வாழ்ந்த சுமார் மூன்று ஆண்டுக் காலத்தில் பரமஹம்ஸரோடு சேர்ந்து பாரதியாரும் அவர் உள்ளத்தில் நன்றாக இடம் பிடித்துக் கொண்டார்.

**(இன்னும் வரும்)**

---

## சத்தம் பாடிய முத்தையா 7

## டாக்டர்.சு.சண்முகசுந்தரம்

'தனிப்பிறவி' படத்தில் எம்.ஜி. ஆருக்காக ஒரு டூயட் பாடல். சினிமா உலகில் எம்.ஜி.ஆரின் செல்லப் பெயர் 'சின்னவர்'. இவரும், "சின்னவரைப் போய் கேளு!" என்று எழுதி வைத்தார்.

இவற்றை காக்கா, ஐஸ், சோப்-எப்படி சொல்லலாம், எப்படியுந்தான். ஆனால் "எம்.ஜி.ஆரைப் பற்றி ஒவ்வொரு படத்திலும் தன்னைப் புகழ்ந்த பாடல்கள் எழுத வேண்டும் என்று விரும்புவார். அத்தகைய பாடல்களுக்குத்தான் முதலிடம் தருவார்" என்றும் கவிஞர் கூறுவது கவனிக்கத்தக்கது. இது காலத்தின் கட்டாயங்கள் என்றாலும் பொருந்தும்.


கண்ணதாசனின் சில பாடல்கள் வெறும் வார்த்தைக்குவியல்கள் என்பதும் மறுப்பதற்கில்லை. தானியங்களில் பதர்கள் இருப்பதும் இயற்கைதானே. இதைக் கண்ணதாசனே ஒப்புக் கொண்டுள்ளார். காரணங்களும் பல. அவசரம், எந்திரத் தனம், பண வேட்கை. இப்படியும் சில.

"தமிழ்ச் சினிமா உலகில் பாடல்கள் உபயோகிக்கப்படும் முறைமைதான் எப்படி? முதலில் காதலி காதலன் பாடல்; பின்னர் பிரிந்துபோய் வேதாந்தமாய் உலகத்தையே வெறுத்து ஒடும் பாடல்; காதலன் இலட்சியவாதியாய் இருந்து தொலைத்தால் அதற்கொரு பாட்டு; பிள்ளை பிறந்தால், யாராவது செத்துப் போனால், பாட்டு; அப்புறம் சம்பந்தமில்லாமல் குரூப் டான்ஸ் பாட்டு; இப்படி தமிழ்ச் சினிமாவில் பாடல் குறிப்பிட்ட தன்மைகளையே சுற்றி வந்தாலும் இதற்கிடையிலும் அவசர கதியில் எழுதப்பட்ட கண்ணதாசன் பாடல்களிலும் கூட மென்மையான கவித்துவம் ஒட்டிக் கொண்டிருந்தது.

"வரவர இயல்பான வேகம் குறைந்து போய், திரும்ப திரும்ப ஒரே விஷயத்தையே சொல்லுதல் அலுப்பு உண்டாகும்படி இருந்து போனாலும் 'ஜாலிலோ ஜிம்கானா' கேட்டுக் கொண்டிருந்த வற்றிலிருந்து சற்று பிரிந்து கேட்கக் கூடிய அளவுக்கு அதில் ஈர்ப்பு இருந்தது. நகர்ப்புறங்களில் இருக்கின்ற ஆட்களுக்கு, காலேஜ் படிக்கிற மாணவ மாணவியர்களுக்கு, சுலபமாய் தங்களை வந்தடைகிற சினிமாப் பாடல்களில் தன்னைப் பொருத்தி, தன்னை அதாய்ப் பாவித்து சுகங்காண முடிகிறது. இதற்குக் கண்ணதாசனின் பாடல்கள் ரொம்பவும் கை கொடுத்தது" என்று விமர்சகர்கள் கூறினர்.

"பதினெட்டு சித்தர்களுக்கும் இவன் ஒருவனே உடம்பாக இருந்தான். இவன் பட்டணத்தில் வாழ்ந்த பட்டிணத்தார். இவன் கோடம்பாக்கத்தில் கோலோச்சிக் கொண்டிருந்த குணங்குடி மஸ்தான். "இவன் பாடல்கள் இசைத் தட்டில் மட்டுமல்ல எல்லோருடைய நாக்கிலும் பதிவாகியிருக்கிறது" என வாலி, கண்ணதாசனின் பெருமைக்குக் கட்டியம் கூறினார்.

"பாவலரின் கவிதைக்கும் பாமரனின் காதுக்கும் பாலத்தைப் போட்டு வைத்தாய் பண்டிதரின் முந்தியிலும் பணக்காரர் தொந்தியிலும் இருந்த தமிழை மீட்டுவைத்தாய்" என்று மேத்தாவும் பாடினார். இவை கண்ணதாசனின் பண்டைய இலக்கியப் படிப்பினைக் காட்டும். இவர் எழுதிய பாடல்களின் பல்லவிகள் ஒரு நூறு திரைப் படங்களுக்கு மேல் பெயராகியுள்ளன. பல நாவல் அத்தியாய தொடக்கங்களுக்கும் அவை பயன்பட்டிருக்கின்றன. இதை நா.காமராசன் கூட ஒத்துக் கொள்கிறார். கவிஞர் காலத்து கதைகளுக்கும் சம்பவங்களுக்கும் அவரது பாடல்கள் உயிரூட்டின.



"தனிக்காட்டு ராஜாவாகத் தமிழ்த் தேரில் உலா வந்தார் கவியரசு. இவரது சாதனையை இனியொருவன் செய்யமுடியாது. காலமும் அதற்குக் கை கொடுக்காது காற்று நுழையாத இடங்களில்கூட இவரது பாட்டு நுழைந்திருக்கிறது. அவர் வார்த்தைகளில் சிக்காத வாழ்க்கைக் கூறுகளே இல்லை". என்று புலமைப் பித்தன் கூறுவார்.

"என்னதான் கவிவாணர் எழுந்தாலும் நடந்தாலும்-நீ இருந்த உன் சிம்மாசனம் இனியொருவர் தனியாக நிரப்பிவிட முடியாத இசைப் பாடல் அரியாசனம்" என்று புகழ் பாடுவார் கவிஞர் மேத்தா. "என் நோட்டுப் புத்தகத்தில் வீட்டுப் பாடத்தைவிட அதிகம் எழுதியவை உன் பாட்டு வரிகள்" என்று கண்ணதாசனை எண்ணி மகிழ்ந்தார் கவிஞர் வைரமுத்து. இவை சமகால கவிஞர்களின் புகழ் மாலைகள். டாக்டர் தமிழண்ணல் "கண்ணதாசன் இவ்வுலகத்தை பிருந்தாவனமாகவே கண்டு மகிழ்கிறார்" என்று புகழ்கிறார்.

"பெயர் பட்டியல் அட்டைகள் காண்பிக்கப் படும்போது 'பாடல்கள்-கண்ணதாசன்' என்ற எழுத்துக்களைப் பார்த்தவுடனேயே மக்கள் மன்றம் கைதட்டி ஆரவாரம் செய்கின்ற நிலையை உருவாக்கியவர் இவர்" என்பார் தமிழ்ப்பித்தன்.

1957-செப்டம்பர் மாதம். கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ் என்ற பெயரில் நிறுவனத்தைத் துவக்கி 'ஊமையன் கோட்டையை' உருவாக்கினார். பாடல் அமைக்கும் பணி தொடங்கியது. பகைவர்கள் எதிர்ப்பதற்கு வீரர்களைத் திரட்டுவதற்காக ஒரு பெண்மணி வீரமும் வேகமும் கொண்டு பாடுவதாக ஒரு கட்டம். இப்பாடல் பின்னர் 'மாலையிட்ட மங்கை'யில் இடம்பெற்றது.

தந்தனதான, தந்தனதான என்று தத்தகாரத்தைக் கொடுத்த விஸ்வநாதன் அடுத்த வரிக்குத் தத்தகாரம் கொடுப்பதற்குள்,

"முந்தி எமை தேடி வந்த பகைவோரைக்
கொன்று தலைவேறு காணவே
-இன்று படையோடு போரிலே
சென்ற மகிழ்வோடு மோதவே ஒன்று
-படுவீர் எம்தோழரே"

என்று வார்த்தைகளை வெகு வேகமாக வழங்கினார்.

"அண்ணே! நான் தத்தகாரத்தைக் கொடுத்துவிட்டு ஆர்மோனியத்தின் ரீட்லை விட்டுக் கையை எடுக்கவே இல்லை; அதற்குள்ளே வார்த்தையைக் கொடுத்து விட்டீர்களே! நீங்க சாதாரண கவி இல்லை, 'மகாகவி" என்றாராம் விஸ்வநாதன்.

இதுவும் கண்ணதாசனின் வெற்றிக்கான காரணங்களுள் ஒன்றாகும்.

1959-ல் 'பாகப்பிரிவினை'யை ஜி.என். வேலுமணி தயாரித்தார். பாடல் எழுதும் பொறுப்பு பட்டுக் கோட்டைக்கு.

"கதாநாயகன் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் கட்டம், அதற்கு ஒரு பாடல் தேவை. எழுதுங்கள்," என்றார் பீம்சிங். கல்யாண சுந்தரம், கொஞ்சம் தயக்கம் காட்டினார். இயக்குநர் மீண்டும் வற்புறுத்தவே," தாலாட்டுப் பாட்டு எனக்கு எழுத வராது. தயவு செய்து கவிஞர் கண்ணதாசனை ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்" என்று மனப்பூர்வமாகக் கூறினாராம்.... கண்ணதாசனும், "ஏன் பிறந்தாய் மகனே ஏன் பிறந்தாயோ" என்று எழுதினார். தாலாட்டு மட்டும் எழுதப் போனவர் அனைத்துப் பாடல்களையும் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. பட்டுக்கோட்டையின் பாடல் எது என்று தெரியமுடியாத அளவுக்கு இவரது பாடல்களே நினைவில் நின்றன.

தொடரும்....

# மீண்டும் தொடரும் மிடுக்கு

"எங்க வீட்டுப்பிரச்சனையே தீர்க்கேலாமல் கிடக்கு. பிறகு எப்படி நாட்டுப் பிரச்சனையை தீர்க்கிறது?"

"சின்னவன்களை ஒருக்கால் பாருங்கோவன்!"

"டேய்!" அவருடைய கன்னத்தில் வைத்த சேவிங்றேசர் வெட்டிவிட்டது.

"ஆவ்"

"நிம்மதியாய் சேவ் பண்ணக் கூட விடாதையப்பா!"

கணவனின் பேச்சையும் வாங்கிக் கொண்டு, பம்பரமாக சுழன்று கொண்டு இருந்தாள் யோகராணி. காலை 7 மணி.

"அம்மா இந்த வெள்ளைச்சட்டையை கொஞ்சம் அயர்ன் பண்ணித்தாறீங்களா?"

"ஏன் பிள்ளை ஏ.எல் படிக்கிறாய். உனக்கும் வயது பத்தாதே?"

"எனக்கென்ன, நான் இப்பிடியே போவன். ரீச்சர்மார் உங்களைத்தான் குறை சொல்லுவினம்!"

பாலை சட்டியில் ஊற்றி அடுப்பில் வைத்து விட்டு, பானை வெட்டி மேசையில் வைத்தாள். இந்த பானைக்கண்டு பிடித்தவன் வாழ்க. மனம் கேட்கவில்லை.

"இஞ்சை கொண்டா!"

சட்டையை வாங்கி அயர்ன் பண்ண ஆரம்பித்தாள்.

"பிள்ளை பாலை ஒருக்கால் பார்"

"எனக்கேலாது நேரம் போச்சு!"

அம்மா பாவம். உதவி செய்ய வேண்டும் என்று தான் அவள் நினைப்பாள். ஆனால் செய்யமாட்டாள். "இங்கை ஒரு பிள்ளையைக் கொண்டு ஒரு துரும்பு எடுப்பிக்ககேலாது!" என்று முணுமுணுத்தாலும், பிள்ளைகளைக் கொண்டு ஒருசிறு வேலை செய்விக்கவும் அவள் மனம் இடம்தராது. பாவம் படிக்கிறதுகளை ஏன் கஷ்டப்படுத்துவான்!

"அம்மா தேத்தண்ணி!"

"ஆ! துரை. வாங்கோ. இப்பதான் எழும்பினீங்களாக்கும். இந்தா இந்த சட்டையை ஒருக்கால் அவளுக்கு அயர்ன் பண்ணிக்குடு!"

அயனைக் கையில் வாங்கினான் முத்தவன் முருகேசன். அவ்வப்போது ஏதாவது உதவியும் செய்வான். பாலைக்கலந்து கொடுத்துவிட்டு, பாண்துண்டுகளை கையில் எடுத்த போது,

"அம்மா போட்டு வாரன்!"

"பிள்ளை சாப்பிட்டுட்டு போவன்"

ம்.... அவள் போயிட்டாள்.

'அம்மா பேனையைக் காணேல்லை'. 'சட்டையைக் காணேல்லை'. 'சப்பாத்தைக் காணேல்லை'. 'அம்மா இவன் நுள்ளுறான்'. 'இவன் கிள்ளுகிறான்'. எல்லாம் ஓய்ந்து ஒரு வழியாக எல்லாரும் பள்ளிக்கூடத்திற்குப் போய் விட்டார்கள்.

பெண் என்பவள் எப்பொழுதுமே ஒரு புதிர்தான். அவள் எந்த நேரத்தில் எப்படி உணர்ச்சிகளை வெளிப்படுத்துவாள் என்பதை யாரும் புரிந்துகொள்ள முடியாது. ஒரு பெண்ணுக்கும் ஆணுக்குமிடையே எத்தனைவேறுபாடுகள்? எண்ணத்தில். பார்வையில், செயலில். பிறகு எப்படி இவர்களால் ஒன்றாக வாழமுடிகிறது? ஆண்கள் செவ்வாய் கிரகத்திலும், பெண்கள் வெள்ளிக்கிரகத்தில் இருந்துமா வந்தார்கள்? நேரம் 7.30. "செங்கமலம் சிரிக்குது. சங்கமத்தை நினைக்குது" றேடியோவில் கேட்டது. முற்றத்தில் மூத்தவன் முருகேசன் உடற்பயிற்சி செய்து கொண்டு இருந்தான்.

"மோனை முத்தத்தை ஒருக்கால் கூட்டி விடன். அதுகும் உடல்பயிற்சி தானே!"

"ஓம் ஓம் பிறகு நீங்கள் உடுப்பு தோய், தேங்காய் துருவு, புட்டு அவி, எல்லாமே உடற்பயிற்சி எண்டுவீங்கள். நான் மாட்டேன்!"

ஏதோ இதெல்லாம் பெண்களுக்கே உரிய வேலை என்ற எண்ணம் அவனுக்கு. சோற்றை கிளறிவிட்டாள் யோகராணி.

"பிறகு கரைஞ்சாலும் இவருக்கு பிடிக்காது." ஒன்பது மணிக்கு ஒரு பிரட்டல். ஒரு பொரியலுடன் சாப்பாடுதயார். வேலைக்குப் போகும் கணவனிடம் சாப்பாட்டை பார்சலாக்கி கொடுத்தபோது தான் மூச்சுவந்தது. வாழ்க்கை என்பது எப்பொழுதும் ஒரு வழிப்பாதைதான். கல்யாணம் என்னும் வண்டியிலே கடவுள் மாடுகளைப் பூட்டும் போது எப்படியும் சரிசமமாகத்தான் பூட்டுவான். யோகராணியிடம் துடிப்பும், பதட்டமும் இருந்தால் கணவனிடம் நல்ல நிதானமும், பொறுமையும் நிறையவே இருக்கும்.

"சும்மா பறந்து கொண்டு திரியாமல் உந்த கதிரையிலை கொஞ்ச நேரம் இரன்னப்பா. உந்த ரி.வி.யைப் பார்!" என்பார் கணவன்.

"கீரை கீரை"! படலைக்குள் சத்தம் கேட்டது.

"வேண்டாம் போப்பா!" பாதியில் நின்று விட்ட முற்றத்தை கூட்டிப்பெருக்கி, சிதறிக் கிடந்த புத்தகம், உடுப்பு, பாத்திரங்களை ஒழுங்கு படுத்தி தொட்டிக்குள் இருந்த பழைய தண்ணீரை வெளியேற்றி, புதிய தண்ணீரை நிரப்பி, பூமரங்களுக்குத் தண்ணீர் ஊற்றி, குளித்துவிட்டு வரும்போது நேரம்



இணுவில்-உத்திரன்

11 மணி. பெயருக்கு இரண்டு பாண்துண்டுகளை வாய்க்குள் திணித்துக் கொண்டாள். காலையில் குடிப்பதற்கு ஊற்றிய தேனீர் ஆறிப்போய்க்கிடந்தது. அரிசிபருப்பு முடிஞ்சுது. அப்படியே கொஞ்ச மரக்கறிகளை வாங்கினால் இரண்டு நாளைக்கு சமாளிக்கலாம். சேலையை மாற்றிக் கொண்டு கூடையை கையில் எடுத்தாள் யோகராணி.

கடைத்தெருவுக்கு போட்டு வந்த போது, நேரம் 1 மணி ஆகியிருந்தது. நல்ல வெயில் தலை இடித்தது. கதிரையில் சிறிதுநேரம் இருந்தாள். ரி.வியைப் போட்டாள். "பெண்கள் வேலைக்கு போவதற்கு ஆண்களே அனுமதியுங்கள்!" சருகைச்சேலை, கழுத்துமுட்ட நகை, கண்ணாடி, கொண்டையோடு ஒரு பெண் முழங்கிக் கொண்டிருந்தாள். மாதர்சங்கமோ என்னமோ எரிச்சலாக இருந்தது. ரி.வி.யை நிப்பாட்டினாள். ஏதோ வாய்க்கை கொழுவிக் கொண்டு ரோட்டிலை இறங்கினால் அது தான் உயர்ந்தவேலை. கௌரவமான வேலை. இல்லாட்டில் அது பப்படா வேலை என்ற நினைப்பு. பெண்களே தான் பெண்களுக்கு எதிரி. குடும்பத்தை நிர்வகிக்கிறதொன்றும் சாதாரணம் இல்லை. பொறுமை, நிதானம், சகிப்புத்தன்மை எல்லாம் நிறையவே வேண்டும். இதுக்கெல்லாம் கூலி போட்டால் ஆண்களின் சம்பளமும் எந்த மூலைக்கு? பிள்ளைகள் பள்ளிக்கூடத்தால் வரப்போகின்றார்கள். மூத்தவன் முருகேசனுக்கு முட்டைப்பொரியல் வேண்டும். மகளுக்கு சோறேவேண்டாம். மூன்று நேரமும் கேக்குத்துண்டும், பிஸ்கட்டும் கொடுத்தாலே போதும். எண்ணைச்சட்டியை அடுப்பில் வைத்துவிட்டு பப்படத்தையும் பிரித்துப் போட்டு, வாழைக்காயையும் வெட்டிப் போட்டாள் யோகராணி. "அம்மா!"

"ம் அமைதிப்படை வந்தாச்சு. என்ரை பிள்ளைகள் குழப்படியே இல்லை. எப்ப? நித்திரை கொள்ளேக்கை. டேய் ரி.வியை போடாதை றேடியோவை போடாதை!"

"நெடுகலும் கத்திக் கொண்டு இருக்க பிரசர் தான் வரப்போகுது!" கணவன் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. நடக்கிறது நடக்கட்டும். கொஞ்சநேரம் பேசாமல் இருந்தாள். ரென்சன் வேலைப்பளு தான் அனேகமானநேரங்களில் கோபமாக வெடிக்கிறது. பெண் என்பவள் உணர்ச்சி வசப்படுகின்றவள்தான். ஆனாலும் பலசந்தர்ப்பங்களில் பொறுமையும் சகிப்புத்தன்மையும் நிறையவே காணப்படும். அதிலும் ஒரு அம்மா ஸ்தானம் என்பது? ஒரு அலுவலகத்தை இயக்குவதிலும் பார்க்க ஒரு அம்மாவாய் இயங்குவது மிகவும் சிரமமானது, பெருமையானதுமான ஒரு பணியுமாகும். யோகராணிக்கு திடீர் திடீர் என்று கோபம் வரும். வார்த்தைகள் பறக்கும். ஆனால் சிறிது நேரத்தில் எல்லாம் மறந்துபோய் "யார் நானா பேசினேன்?" என்ற நிலைமைக்கு வந்துவிடுவாள். ஒருவாறு அவர்களுக்குச் சாப்பாடு கொடுத்து பாத்திரம் கழுவி தானும் சாப்பிட்ட போது, நேரம் 3 மணி. அதன் பின் பிள்ளைகளின் வெள்ளை உடுப்பில் இருந்து கணவனின் கைக்குட்டை வரை பொறுக்கி எடுத்துக் கொண்டுபோய் தண்ணீரில் நனைத்து சோப்புப் போட்டு உலர்த்தி முடிக்க 4 மணி. இடுப்புவலித்தது. பிள்ளைகள் விளையாடப் போய்விட்டார்கள். மகள் ரியூசனுக்கு போய் விட்டாள். வீட்டைக் கூட்டி தண்ணீரைச் சுடவைத்தபின், முகத்தைக் கழுவிக் கொண்டாள் யோகராணி.

"அம்மா தேத்தண்ணீர்!"

மூத்தவன் முருகேசன் படலைக்கு வரும் போதே தந்தி அடித்தான். அவசரமாக கண்ணாடிக்கு முன்னால் வந்து நின்றாள். குங்குமத்தை நெற்றியில் வைத்துக் கொண்டாள். சுவாமியறைக்குப் போய் விளக்கேற்றினாள். இப்போது தண்ணீர் கொதித்து இருந்தது. கணவன் வேலையால் வந்து இருந்தான். இனி இரவு வரைக்கும் மாறிமாறி தேத்தண்ணி ஊத்த வேண்டியதுதான். மாலையில் வீட்டுக்கு வந்த உறவினரோடு கதைத்து உபசரித்து அனுப்பியபோது 6 மணி. இரவு என்ன சாப்பாடு செய்யலாம்? தோசை, இடியப்பம் புட்டு, புட்டு இடியப்பம் தோசை. இடியப்பத்துக்கு மா கிண்டதொடங்கியபோது,

"இந்தப்பாடத்தை கொஞ்சம் சொல்லித் தாங்கோ!" என்றான் சின்னவன்.

அவனுக்கு படிப்பிச்சு, சாப்பாடு செய்து பால்காய்ச்சி, நித்திரைக்கு அனுப்பியபோது, இரவு 9 மணி. அதன் பின் அவளும் கணவனுமாகச் சாப்பிட்டார்கள். கணவன் பிபிசி வானொலி கேட்க தொடங்கியபோது, அவள் பாத்திரங்கள் மினுக்கத் தொடங்கி இருந்தாள். காய்ந்த உடுப்பெடுத்து, கதவு பூட்டி நித்திரைக்கு வந்தபோது 10 மணி. அதாவது ஒரு நாள்வேலை நிறைவுபெற்று இருந்தது மீண்டும் நினைத்துக் கொண்டாள். நாளைக்காலை 5 மணிக்கெல்லாம் எழும்பி விட வேண்டும்'

ஒருபெண் நல்ல மனைவியாக அம்மாவாக குடும்பத்தலைவியாக பரிணமிப்பதென்பது எவ்வளவு பெருமையான ஒடு விடயம். இவளைச்சிறைப்படுத்தியது யார்? இவள் விடுதலைவேண்டும் என்று யாரிடம் கேட்பது. இவளுடைய தன்னலம் அற்ற சேவைக்கு யாரால் ஈடுகொடுக்க முடியும். பெண் புரட்சிகரமான ஒரு ஜென்மம் தான். நிச்சயமாக வெள்ளிக்கிரகத்தில் இருந்துதான் வந்து இருப்பாள்!

**"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்!"**

# அன்புள்ள அம்மா

சரவணமுத்து கண்ணைக் கசக்கி விட்டுக் கொண்டு மீண்டும் கடிதத்தை வாசித்தார். ஆரம்பமே 'அன்புள்ள அம்மா, அப்பாவுக்கு, என்று தொடங்கியிருந்தது. உடம்பெல்லாம் எரிய கண்களை மேலே மேயவிட்டார்.

*'அம்மா இவ்விடம் நாலு பேர் சேர்ந்து அறை ஒன்று எடுத்திருக்கிறோம். சாப்பாடு கடையில் தான். அம்மா, உங்கள் கை மணத்தில் நீங்கள் குழைத்து உருண்டையாக்கித் தருவீர்களே, அந்தப் பழைய சோற்றின் சுவையை நினைத்துக் கொண்டே இங்கு சாப்பிடுகிறேன். அம்மா, நீங்கள் தந்த நல்லெண்ணெய் அப்படியே இருக்கிறது. கையில் விட நசநசவென்று... அதனால் உவ்விடம் வந்து உங்கள் கையால் எண்ணெயைக் காணும் வரை எனது மயிர் பரட்டையாகவே இருக்கும். வேறு வழியில்லையம்மா....*

"ஏழு கழுதை வயதாகிவிட்டுது. குழந்தைக்கு எண்ணெய் வைக்க அம்மா வேணுமாம். ஏண்டி கமலம்! நீ வளர்த்த வளப்பு எப்படியெண்டு வந்து பார். சொன்னால் ஊரே சிரிக்கும். இருவத்தி மூண்டு வயசாகி மேற்படிப்புக்கெண்டு கொழும்பு போட்டான். பாப்பாவுக்கு எண்ணெய் வைக்க அம்மா வேணுமாம். ஐயோ, கடவுளே அதுக்குத்தான் 'உப்பிடிச் செல்லங்குடாதை கமலம்' எண்டு தலை தலையாய் அடிச்சனான். இப்ப பார்த்தியோ?"

கணவனின் கூப்பாட்டைக் கேட்டதும், அடுக்களையில் வேலையாக இருந்த கமலம் ஈரக் கையைச் சேலையில் துடைத்தபடி ஓடி வந்தாள்.

"என்னங்க, என்ரை பிள்ளையின்ரை கடிதமே? அதைத்தான் இன்னும் காணேல்லை எண்டு அடி வயிறு துடிச்சுக் கொண்டு கிடந்தது. முருகா! பெரிய நன்றியப்பா!" வானத்தை நோக்கிக் கை கூப்பினாள் கமலம்.

"பேசாதை கமலம். இதுக்கு மேலை ஏதும் கதைச்சியோ வாற கோபத்திலை என்ன செய்வனெண்டு எனக்கே தெரியாது. சொல்லிப் போட்டன். உன்ரை பிள்ளை இப்ப தான் பால்குடி. கிடந்து துடிக்கிறாயாக்கும். உதுக்குத்தான் ஆம்பிளைப் பிள்ளையைக் கண்டிச்சு வளக்கோணும் எண்டு நாயாப் பேயாக் கத்தினனான். தாய்க்கும் பிள்ளைக்கும் மரமண்டையிலை ஏறினாத் தானே?"

"ஏனுங்க, பிள்ளை என்ன எழுதியிருக்கிறான்? ஏதும் பிரச்சனையே? அவனுக்கு சாப்பாடு, தண்ணிக்கு ஒண்டும் கரைச்சல் இல்லையே?" என்று கணவனின் தோளுக்கு மேலால் எட்டிச் கடிதத்தை வாசிக்க முயன்றாள் கமலம்.

"ஏண்டி, தெரியாமத்தான் கேக்கிறன். உன்ரை பிள்ளைக்குப் பசிச்சால் கடையிலை போய் வாங்கித் தின்னத் தெரியாதே? உந்த வயசிலை நான் கூலி வேலைக்குப் போய் என்ரை குடும்பத்தையே இந்தத் தோளிலை சுமந்தனான். நீ என்னடாவெண்டால் ஏதோ கைப்பிள்ளையைத் தவறவிட்ட மாதிரி வில்லங்கப்படுகிறாய். எப்பதான் திருந்தப் போறியோ? உன்னைக் கட்டிக் கொண்டு இந்த இருவத்தைஞ்சு வரியமா குப்பை கொட்டியாச்சு. இனித்தான் திருந்தப் போறியே?"

கமலத்துடன் வாய் தன்னிச்சையின்றி சப்தமிட, கண்கள் மிகுதிக் கடிதத்தின் வரிகளை ஆவேசமாக விழுங்கிக் கொண்டிருந்தன. *அம்மா! முழுகி விட்டுத் தலை துடைக்கும் போது நான் ஈரம் போகத் துடைக்க மாட்டேன் என்று நீங்கள் துவட்டி விடுவீர்களே, அது ஞாபகம் வந்ததில் கண்கள் கலங்கி விட்டன. உங்களைக் கட்டிக் கொண்டு மடியில் படுக்க வேண்டும் என்று ஆசைப்படும் இந்த மனசை எவ்வளவு கஷ்ரப்பட்டுக் கடிவாளம் போட்டு நிறுத்தியிருக்கிறேன் தெரியுமா? அம்மா? அது சரி, அப்பா சுகமே இருக்கிறாரா? திட்டுவதற்கு ஆளில்லாமல் திண்டாடுவாரே என்று நினைக்க மிகவும் பரிதாபமாக இருக்கிறதம்மா. அம்மா! விரைவில் அடுத்த கடிதத்தில் எனது முன்னேற்றங்களை அறிவிப்பேன்.*

*உங்கள் அருமை மகன்.*

"அம்மா..அம்மா..அம்மா. ஒரு வார்த்தை.. ஒரே ஒரு வார்த்தை அப்பாவென்று மூண்டாம் ஆளைப்பற்றி விசாரிக்கிறமாதிரி எழுதியிருக்கிறான். உந்தப் பொடியனைப் படிப்பிக்க மட்டும் இந்த உடம்பை எப்பிடி உருக்கியிருப்பன். பாவிப் பயல். கூலி வேலை செய்தல்லோ உன்னைப் படிப்பிச்சனான். இப்ப ஒரு வரியிலை என்னைச் சுகங் கேக்கிறியே. எப்பிடியெடா உனக்கு மனசு வந்தது? என்ன, நல்ல பழக்கம் பழக வேணுமெண்டு கொஞ்சம் கண்டிப்பா நடந்தன். அது என்ன தப்பா? தாயெண்டவள் சேலைத் தலைப்புக்குள்ளை பொத்திப் பொத்தி வைச்சு வளக்கிறாளே, உலகந் தெரியாமல் என்ரை பிள்ளை திண்டாடிப் போடுவானே எண்டு கொஞ்சம் அதட்டி வளத்ததுக்கு இப்ப என்னைக் கிண்டல் பண்ணுறான். போதுமடா சாமி! ஒரு பிள்ளையைப் பெத்து பாடுபட்டுப் படிப்பிச்சு விட்டதுக்கு எனக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்!" என்று பொரிந்து தள்ளினார் சரவணமுத்து.

"என்னப்பா இது குழந்தைப்பிள்ளை மாதிரி. பொடியள் தாயோடை மனம் விட்டுக் கதைக்கிற மாதிரி தகப்பனோடை கதைக்குதுகளே. அதுக்காக அவனுக்கு உங்களிலை விருப்பமில்லை எண்டு ஆயிடுமோ?"

"கமலம் நீ என்னத்தைச் சொன்னாலும், என்ரை மனம் ஆறாதாம். பிறந்த நாளிலை இருந்து கூட இருந்த பொடியன் முதன் முறையா வெளியூர் போயிருக்கிறான். எப்பிடியிருக்கிறானோ எண்டு எத்தினை தரம் உனக்குத் தெரியாமல் போஸ்ற் ஆபீசுக்கு போட்டு வந்திட்டன் தெரியுமே?" எதற்கும் கலங்காத சரவணமுத்துவின் கண்களில் ஒரு சொட்டுக் கண்ணீர் நர்த்தனம் புரிய, கமலம் காணாமல் மறுபுறம் திரும்பி கண்ணைத் துடைத்துக் கொண்டார்.

"ஐயோ, இதென்னப்பா பொதுவாவே ஆம்பிளைப் பிள்ளையள் தாய்மாரோடை தான் ஒட்டுதலா இருப்பினம். அதுக்காக தகப்பனிலை பாசம் இல்லை எண்ட நினைக்கிறியளே?"

"அது தான் 'அம்மா அம்மா' எண்டு உருகியிருக்கிறானாக்கும். எல்லாம் என்ரை தலை எழுத்து"! கோபத்துடன் சால்லையைத் தூக்கி தோளில் எறிந்தபடி விறு விறுவென்று வெளியே நடந்தார் சரவணமுத்து.

வாசலில் முதல் நாள் பெய்த மழை நீரின் சகதி வழுக்கியதில், ஆவேசமாக நடந்த சரவணமுத்து பொத்தென்று கீழே விழுந்தார். "அம்மா!" என்று அவர் போட்ட கூச்சலில் கமலம் அரக்கப் பரக்க ஓடி வந்தாள்.

"என்னங்க, வழுக்கிச்சுதா?" என்று பதட்டத்துடன் சரவணமுத்துவின் தோளைப் பிடித்து நிமிர்ந்திருக்க உதவினாள் கமலம்.

"ம்... ம்..." என்ற வேதனையுடன் முணுமுணுத்த சரவணமுத்துவின் முகத்தில் மெல்லிய புன்முறுவலொன்று கோடிழுத்தது.

"கமலம்! நான் விழேக்கை கூட அம்மாவைத் தானே கூப்பிட்டன். பிறகு என்ரை பிள்ளை என்ன 'அப்பா' எண்டா கூப்பிடப் போறான். சில வேளையிலை சில விசயங்கள் சொன்னால் புரிவதில்லை கமலம். அனுபவிச்சாத்தான் விளங்குது. ஒண்டும் மனசிலை வைச்சுக்காதை பிள்ளை." அசடு வழிந்த கணவன் முகத்தில் ஆங்காங்கே துளிர்த்திருந்த வியர்வையை தனது சேலைத் தலைப்பால் அன்புடன் ஒற்றி விட்டாள் கமலம்.



அல்வையூர் காந்தி அருணாசலம்-கனடா.

# சகுனம்

இருபது வருட கலைவாழ்வில் இன்றொரு மகத்தான நாள் கலைபித்தனுக்கு. பெண்விடுதலை, பெண்ணடிமை, என்று கலையுலகில் காலடி எடுத்து வைத்த இவரின் நீண்ட நாள் கனவு இன்று நனவாகிறது.

சமூக நோக்குடன் பல கவிதை தொகுப்புகளை வெளியிட்டிருந்தாலும், விதவை ஒருத்திக்கு விமோசனம் வழங்கியதன் மூலம் 'சகுனம்' என்ற தொகுப்பு தான் சிறந்த கவிதை தொகுப்பு என்ற பெயரை தட்டிக் கொண்டது. அதற்காகத் தான் அவருக்கு இன்று விருது வழங்கப்பட இருக்கிறது.

இவரின் படைப்புகளில் இதயங்களை தொலைத்த பல்லாயிர கணக்கான ரசிகர்கள் உள்ளனர். அவற்றை சான்று பகர்வதற்காய் இக்கடிதம் அமையும் என நம்புகிறேன்.

*அன்பின் கலைபித்தன் ஐயாவிற்கு!*

*நான் உங்கள் ரசிகை. உங்களின் கரையை தொடாத அலைகளில் வந்து கலக்காத வரை சத்தியமாய் சொல்கிறேன். கவிதை மீது எனக்கு ஈர்ப்பு இருக்கவே இல்லை.*

*அது எப்படி சார் மனங்களோடு எல்லாம் மனம் விட்டு உங்களால் பேச முடிகிறது......! உங்களை பற்றி பத்திரிகையில் வரும் செய்திகளையெல்லாம் தவறாமல் படிப்பேன். ஏறக்குறைய உங்கள் கவிதை தொகுப்புகள் அனைத்தையுமே படித்திருக்கிறேன். படித்ததோடு மட்டுமல்லாமல் பகவத்கீதை போல பத்திரமாய் பராமரித்தும் வருகிறேன்.*

*உங்களுடைய 'சகுனம்' என்ற தொகுப்பின் மூலம் வித்தியாசமான ஒரு சமூக நோக்கை கண்டேன். விதவையின் வாழ்விலும் வசந்தம் வந்து சங்கமிக்கும் என்பதற்கு 'சகுனம்' ஒரு எடுத்துக்காட்டு. இது எத்தனை விதவையர் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துமோ.....! என்று நினைக்கும் போதே இதயம் இனிக்கிறது. நானும் ஒரு விதவை என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.*

*எனக்கொரு பேராசை. என்னவென்றால், என்னுடைய கடிதத்திற்கு, உங்களிடமிருந்து ஒரு பதிலை எதிர்பார்க்கிறேன். தப்புதான் எனக்கு தெரிகிறது என் மனதிற்கு புரியவில்லையே.....*

*இப்படிக்கு உங்கள் ரசிகை.*

விழாவிற்கு இன்னும் அரைமணித்தியாலயம் இருந்தது. தன்னை தயார்படுத்தி கொண்டு மனைவி மங்களத்திடம் விடை பெற்று சென்றவர், வாசல்வரை சென்று உடனே திரும்பி வரவும், "ஏங்க என்னாச்சி......?"

"சகுனம் சரியில்லை. கொஞ்சம் தாமதமாய் போறேன்!" என்றார். மங்களம் தெருவைப் பார்க்கிறாள் அங்கே விதவை கோலத்தில் எதிர்வீட்டு 'மஹிமா' நிற்கிறாள்.



எஸ்.மனோஹரன்-ஹட்டன்

**வி**ளையாட்டுக்கு அழைத்துச் செல்ல சங்கரனின் வீடு தேடி வந்த முரளிக்கு ஆச்சரியம் காத்திருந்தது.


படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் சங்கரன். தலை கலைந்து கண்கள்சிவந்திருந்தன.

"என்னடா, சுகமில்லையா?" ஆதுரத்துடன் கேட்டபடி உள்ளே சென்று, அவன் படுத்திருந்த கட்டில் விளிம்பில் அமர்ந்தான் முரளி.

"ஒன்றமில்லை!" கைகள் இரண்டையும் தலைக்கு மேலாகப் பின்னிக் கொண்டு பெருமூச்சு விட்டான் சங்கரன்.

"மைமலில் படுத்தால் உடம்புக்குக் கூடாது என்றல்லவா சொல்கிறார்கள்... இதென்ன படுக்கை?"

# இலக்கிய நயம்



# விருந்தாகும் காமம்!

"சிறுகோட்டுப் பெரும் பழம்..."

"என்னடா?"

"ம்... பெரிய பழத்தைத் தாங்கும் சிறிய கிளை நான். உயிர் தவச் சிறிது, காமமோ பெரிதே!"

"ம். எழும்பு முளைதான் கெட்டுக் கிடக்கு உனக்கு. முளையை வேறு திசையில் செலுத்து. எல்லாம் சரியாகும். வா, விளையாடப் போகலாம்."

"உடல் நைந்து போய்க் கிடக்கிறேன். விளையாட எல்லாம் முடியாது நண்பா. 'உள்ளம் வேண்டியபடி செல்லும் உடல் கேட்ட பாரதியை இப்போது புரிந்துகொள்ள முடிகிறது. உடல் பலவீனமுற்றால் முளை இயங்க மறுக்கிறது."

"என்ன சொல்கிறாய், காமம் உடலிலா இருக்கிறது? இல்லை. செக்ஸ் உணர்வுகள் பெரும் பகுதியும் நம் மூளைக்குள் தான். முளை தறிகெட்டு அலைவதால்தான் உடல் இப்படி நொந்து கொள்கிறது."

"நீ சொல்வதுதான் சரி என்று வைத்துக் கொண்டாலும், முளை என்பது என்ன? புலனுறுப்புக்களிலிருந்து தகவல்களை வாங்கி வைத்திருக்கும் சேமிப்புக் கிடங்குதானே... அப்படியென்றால், உடலால் அறிந்துகொண்டவற்றிலிருந்துதானே முளை தன் தொழிலை ஆரம்பிக்கிறது?"

"சரி சரி உன்னோடு விவாதிக்க நேரமில்லை. நீ விளையாட வருகிறாயா, இல்லையா?"

"அதுதான் சொன்னேனே முரளி, உடல் கெட்டுக் கிடக்கிறது, முளையால் இதை நேராக்கிவிடமுடியுமென்று தோன்றவில்லை."

"என்ன உன் பிரச்சனை?"

"அவள்தான். அவள் எப்போதோ பார்த்த பார்வைகள் என் உயிருக்குள் பல முள்ளுகளை வைத்துவிட்டுப் போயிருக்கின்றன. அவை குத்தக் குத்த இரத்தம் கசிகிறது. குளம்புகளால் நிலத்தைக் கீறியபடி தசைகளை முறுக்கித் திமிறுகிற குதிரைபோல உடல் கட்டுக்குள் அடங்க மறுக்கிறது. உடல் தன்னை முறுக்கி முறுக்கிப் பிழிகிறது உயிரை. தன் கூந்தலிலே என் உயிரைக் கட்டி, உச்சி வெய்யிலில் தூக்கிலிட்டுவிட்டுப் போயிருக்கிறாள் அவள்...."

"நண்பனே நிறுத்து. புலம்பிக் கொண்டே போகாதே! காமம் என்பது துன்பம் அல்ல; அது விருந்து. அறிவால் அதை நீ சுவைக்க முடியும். அது இன்பம் தரும் மருந்து. உன் உடலையும் மனத்தையும் இறுக்கங்களிலிருந்து தளர்த்தி நல் லுணர்வுகளைத் தரவல்ல ஔஷதம். எண்ணங்களை அறிவால் கட்டுப் படுத்து. அணைகட்டிப் பாய்ச்சுகின்ற நீரால் உலகமே செழிக்கும். கரைகளை உடைத்துப் பாய விட்டால் உன்னை மட்டுமல்ல ஊரையும் அழித்து விடும்...."

"என் வேதனை தெரியாமல் அறிவுரைகளை வீசுகிறாய். அவள் இல்லையென்றால், இந்த உடலுக்கு உயிரைப் பிடித்துவைத்துக் கொள்ளும் வலிமை இல்லாமற் போய் விடுகிறது. உடல் பலவீனமாயிருக்கும் போது அறிவை எங்ஙனம் பயன்படுத்துவது?"

"மீண்டும் சொல்கிறேன். உடலில் இல்லை காமம். உன் முளைக்குள் இருக்கிறது. அறிவால் அதை ஆளப்பார். பல்போன கிழப் பசு கூட புல்லைத் தன் நாவால் தடவி இன்பம் அடையும். காரணம் புல்லின் சுவையோ, நாவின் தினவோ அல்ல. அந்தப் பசுவின் ஆசைதான். அந்தப் பசுவினது ஆசையின் அளவாகத்தான் புல்லின் சுவை அமைகிறது. அதுபோலத்தான், நமது நினைப்பைப் பொறுத்ததுதான் காமமும்."

"அப்போ, என் உடலைப் புரட்டிப் போடும் இந்தத் துன்பம் என் வேண்டாத நினைப்பிலிருந்துதான் வருகிறது என்கிறாயா?"

"ஆமாம். அறிவால் உன் எண்ணங்களை நேர்ப்படுத்திப் பார். உடம்பை உன் உள்ளம் வேண்டியபடி செலுத்தலாம். அறிவிலே தெளிவு. அதனால் உள்ளத்திலே உரம். கூடவே உடலிலே வலிமை, இவற்றை உடையவர்களைக் காமம் ஒன்றும் செய்ய முடியாது. காமத்தால் இவர்களே பயன் பெறுவர். காமம் இவர்களுக்கு விருந்தாகும்.

தருவது **முழுடில்யன்**

காமம், காமம் என்ப; காமம்
அணங்கும் பிணியும் அன்றே;
நினைப்பின்
முதைச் சுவல் கலித்த முற்றா
இளம்புல்,
மூதா தை வந்தாங்கு
விருந்தே காமம்;
பெருந்தோளோயே.

*(குறுந்தொகை: 204)*

# சிந்தியா பதில்கள்

மீசையில் இப்போது ஒரு சிறுதுகளும் இல்லை).

✪❊

❑ **எமக்கெல்லாம் விடிவு எப்போ?**

த.கனகமைந்தன், யாழ்ப்பாணம்.

*நீங்கள் விழிக்கும் போது!*

✪❊

★ **நடிகர் பொன்னம்பலத்தைப் பற்றி?**

எம்.பிரியதர்ஷன், யாழ்ப்பாணம்.

*35 எம்.எம்மிலிருந்து 70 எம்.எம்முக்கு எகிறிய சினிமாவின் பிரம்மாண்டத்தை விளக்கும் உதாரண புருஷர். படப்பிடிப்பு வேளையில் அசைவ சாப்பாடு, அதிக சாப்பாடு எல்லாம் கிடைக்காவிட்டால் தாங்க மாட்டார். படத்தையே உதறிவிட்டு வந்துவிடும் நபர். எடுக்கும் சம்பளத்தில் பாதிக்கு மேல் சாப்பாட்டிற்கே செலவாகி விடுகிறதாம்.*

*எடை 112 கிலோ. இருந்தும் வரிச்சுத் தடி மாதிரியான ஹீரோக்களிடமெல்லாம் உதை வாங்குவார். உயரப் பறந்து பறந்து விழுவார்.*

*நீதிபதி, கறுப்புக் கோட் வழக்கறிஞர்கள், பொலிஸ், அமைதி எல்லாம் பார்த்துப் பயந்துபோயிருந்தார் நம்மாள். எதிர்த் தரப்பு வழக்கறிஞர் இவரது நடுக்கத்தைப் பார்த்து இளக்காரத்துடன் கேட்டார்.*

*"இவ்வளவு பயந்து நடுங்குறீங்களே... உங்களுக்குக் கல்யாணமாகி விட்டதா?"*

*"ஆகியிட்டுது ஐயா!"*

*"யாரைக் கட்டியிருக்கிறீங்க?"*

*"ஒரு பொண்ணை!" நம்மாள் நடுங்கிய படியே சொன்னார்.*

*வழக்கறிஞருக்குக் கடுப்பு உண்டாகி விட்டது.*

*"பொண்ணைக் கட்டாமல் ஆம்பிளையையா கட்டுவாங்க?" என்றார் எரிச்சலோடு.*

*"என் தங்கச்சி கட்டியிருக்கிறாளே...." என்றார் நம்மாள் அப்பாவியாக.*

✪❊

❑ **இன்றைய இளைஞர்களின் விருப்பம் எது? (விடை மூன்று எழுத்தில் இருக்க வேண்டும்.)**

எம்.எச்.றியால், நிந்தவூர்-08.

*'கா' என்றெழுதத் தொடங்கிவிட்டு, தீவிரமாக யோசித்ததில், 'தல்' என்று போட முடியவில்லை; வெறும் 'ட்சி' தான்!*

✪❊

❑ **மேற்கத்திய சங்கீதத்தில் இரைச்சலைத் தவிர வேறென்ன இருக்கிறது? ஏன் இப்படி உரு வந்து சாமியாடுகிறவர்கள் போல கண்ணீர் மல்கக் கதறுகிறார்கள்? சிந்தியாவுக்கு ஏதாவது புரிகிறதா?**

க.தயாளன், ஹற்றன்.

*புரியாத எதன்மீதும் பொறாமை கொள்வதும், ஒன்றுமில்லை என்று ஒதுக்கிவிடுவதும் இயல்பான மனித குணம். ஆனால், உடலை அதிர வைத்து கண்ணீர்த்துளி வர உள்ளுருக்கும் எல்லா இசைகளுமே மேன்மையானவை தாம். மேற்கத்திய இசை வெறும் சத்தமல்ல; இரத்தத்தையும் சித்தத்தையும் துள்ள வைக்கும் இனிய சங்கதிகளும் பாடல் வரிகளும் உண்டு அதில். 60களிலும் 70களிலும் உலகை இசையால் ஆக்கிரமித்த பீட்டில்ஸ் குழுவைக் கேள்விப் பட்டிருப்பீர்கள். அந்நாளைய நம் இளைஞர்களின் ஹிப்பித் தலை மோகத்திற்கும் காரணமாயிருந்தவர்கள். அந்தக் குழுவினரின் ஒரு பிரபல பாடலின் தமிழாக்கம் இது:*

*சொர்க்கம் இல்லையென்று கற்பனை*
*-செய்யுங்கள்*

*முயற்சியுங்கள் மிக எளிது*
*நமக்குக் கீழே நரகம் கிடையாது*
*மேலே வானம் மட்டும்தான்*
*எல்லா மக்களும் இன்றைக்காக*
*வாழ்கிறார்கள் என்பதை கற்பனை செய்யுங்கள்*
*நாடுகளே இல்லையென்று கற்பனை*
*-செய்யுங்கள்*

*அது ஒன்றும் கடினமல்ல*
*எதற்காகவும் கொல்லவோ, இறக்கவோ*
*-தேவையில்லை*

*மதமும் கிடையாது*
*எல்லா மனிதர்களும் அமைதியாய்*
*வாழ்கிறார்கள் என்பதை கற்றபனை*
*-செய்யுங்கள்*

*நீங்கள் என்னை கனவு காண்பவன்*
*என்று சொல்லலாம்*
*ஆனால் நான் மட்டுமில்லை*
*நீங்களும் ஒரு நாள் என்னுடன்*
*இணைவீர்கள் என்று நம்புகிறேன்*
*உலகமே ஒன்றாகிவிடும்.*

✪❊

❑ **'வானொலிக் குயிலின்' 'இரவின் மடியில்' சிந்தியா மயங்கியதுண்டா?**

ஏ.என்.எம்.ஜவாத், புத்தளம்.


*உண்டு. ஓசைகளோய்ந்த அப்பொழுதில், மனதைக் காதுகளிடம் கொடுத்துவிட்டு கண் மூடிப் படுத்திருந்தால், இசை திரவமாகி இமை ஓரங்களில் வழிந்து தலையணை நனைக்கும். அதிலும், நேயர்களை வசப்படுத்தியே தீருவது என்ற ஈடுபாட்டோடு உழைப்பைச் சிந்தும் அறிவிப்பாளருக்கு எப்போதும் வெற்றிமாலைகள்தான்.*

✪❊

❑ **தென்னாபிரிக்காவில் எப்படி மண்கவ்வல்?**

ஐ.ஜெபநேசன், கொழும்பு-13.

*அது வந்து... தென்னாபிரிக்கா... இலங்கையிலிருந்து எம்மாந் தொலைவு... சூழல் தட்ப வெப்ப மாற்றம்... அவர்களது அம்பயர்கள் வேறு நம்மூர் அரிச்சந்திர கதை கேட்டுவளர்ந்திருக்க மாட்டார்கள்.... மக்கண்சியோ சிம்பன்சியோ என்று புதுசு புதுசாய் ஆட்கள் வேறு... இந்த சுட்டிப் பையன் ரோட்ஸ் பாய்ந்து பாய்ந்து பந்தைப் பொறுக்கினால் போதாதோ? மட்டையடியிலும் என்ன ஆக்ரோஷம் வேண்டிக் கிடக்கிறது? ம்... நம்முடைய என்ஜின்களும் பழக்கத்துக்கு வர வேண்டும். முதலிரண்டு போட்டியும் அப்பிடி இப்பிடித்தான் இருக்கும். தை பிறக்கட்டும், பாருங்கள்! (அப்பாடா!*



'வாழ்க்கையில் நீங்கள் பிரமித்தது எதைப் பார்த்து?' என்ற கேள்விக்கு நடிகர் விவேக்கின் பதில்: "பொன்னம்பலத்தை!"

✪❊

❑ **சிந்தியா, மரணத்தை எண்ணிப் பயப்படுவதுண்டா?**

இ.சரண்யா, திருகோணமலை.

*அதற்கு இன்னும் எவ்வளவு காலமிருக்கிறது. இந்தச் சின்ன வயசிலேயே அதையெல்லாம் யோசிக்க வேண்டுமா என்ன? தவிரவும், 'மரணம் என்பது ஓர் உண்மையுள்ள நண்பன். நமது அறியாமைதான் துக்கத்திற்குக் காரணம்' கவலைப்படாதே சகோதரா, என்று வாழும் வர்க்கம் நான்!*

✪❊

❑ **நீங்கள் அப்பாவியா, புத்திசாலியா?**

எம்.எம்.இமாம் ஹஸன், ஹெம்மாதகம.

*அப்பாவியிடம் புத்திசாலித்தனம் இருக்க முடியாது என்று யார் சொன்னது? முதல் தடவையாக சாட்சி சொல்வதற்காக கோர்ட் படியேறிய நம்மாள் ஒருத்தரைப் பற்றிச் சொல்கிறேன். கொஞ்சம் பழசுதான் என்றாலும் கேளுங்கள்:*


❑ **இயற்கைச் சமநிலை என்றால் என்ன சிந்தியா?**

என்.கே.பாமதி, கொழும்பு-06.

ஒன்றைவிட ஒன்று மிகையாகி எல்லாம் அழிந்து விடாமல் ஒன்றுக்கொன்று துணையாக உயிர் வாழத் தேவையான சமநிலையைப் பேணி வைத்திருக்கிறது இயற்கையின் அமைப்பு. எளிமையான ஓர் உதாரணம் சொல்வதென்றால், மான்களைப் பாதுகாப்பதற்காக மான்களைக் கொல்லும் விலங்குகளை அழித்து விட்டீர்களானால் இயற்கைச் சமநிலை குலையும். இதனால் மான்கள் பெருகி அது மான்களுக்கும் ஆபத்தாக முடியும். இயற்கையின் இந்த அபாரமான அறிவியல் சமன்பாட்டை நிரூபிக்க சில விஞ்ஞானிகள் வினோதமாகவும் முயன்று பார்த்திருக்கிறார்கள், ஆபிரிக்காவின் ஒரு குறிப்பிட்ட பகுதியில், இருக்கும் யானைகளின் மொத்த எடையை அளந்தார்கள். பின்னர் அந்தப் பகுதியில்உள்ள எலிகளின் மொத்த எடையையும் அளந்தார்கள். என்ன ஆச்சரியம்! ஏறக்குறைய இரண்டும் ஒரே அளவு தான். ■

# ஸ்போர்ட்ஸ்

## 'சாதனையை முறியடிப்பார் பிரெட் லீ'



'அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளரான 24 வயது பிரெட் லீ, உலகின் வேகப்பந்து வீச்சாளரான ஜெஃப் தொம்சனின் சாதனையை முறியடிப்பார்' என்று அவுஸ்திரேலிய அணியின் விக்கெட் காப்பாளர் அடம் கில்கிறைஸ்ட் கூறியுள் ளார்.

முன்னாள் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளரான ஜெஃப் தொம்சன் மணிக்கு 160.45 கிலோமீட்டர் வேகத்தில் பந்து வீசியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் பிரெட் லீ இடம்பெறவில்லை. லீ இதுவரை 42 டெஸ்ட் விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். உலகிலேயே அதிவேகமாகப் பந்து வீசும் வீரர்கள், அணி மற்றும் பந்து வீச்சு வேகம் போன்ற விவரங்கள் வருமாறு:

| வீரர் | அணி | வேகம் |
|---|---|---|
| 1. ஜெஃப் தொம்சன் | அவுஸ்திரேலியா | 160.45 கிமீ/ம |
| 2. டெவன் மல்கம் | இங்கிலாந்து | 156.10 கிமீ/ம |
| 3. பிரெட் லீ | அவுஸ்திரேலியா | 156.00 கிமீ/ம |
| 4. அலன் டொனால்ட் | தென்னாபிரிக்கா | 155.40 கிமீ/ம |
| 5. சொனகல் அக்தர் | பாகிஸ்தான் | 154.50 கிமீ/ம |
| 6. வக்கார் யூனுஸ் | பாகிஸ்தான் | 159.00 கிமீ/ம |
| 7. டரன் கொஃப் | இங்கிலாந்து | 146.20 கிமீ/ம |

## நியூஸிலாந்துக்கு சுற்றுப்பயணம்

**இ**ந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஸிம்பாப்வே கிரிக்கெட் அணி, 2 டெஸ்ட் போட்டிகளிலும், 5 ஒருநாள் போட்டிகளிலும் இந்தியாவுடன் மோதியது.

டெஸ்ட் தொடரில் 0-1 என்ற கணக்கிலும், ஒருநாள் தொடரில் 1-4 என்ற கணக்கிலும் தோல்வியைத் தழுவியது ஸிம்பாப்வே.

இதைத் தொடர்ந்து ஸிம்பாப்வே அணி, நியூஸிலாந்திற்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒரு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

ஸிம்பாப்வே-நியூஸிலாந்து டெஸ்ட் போட்டி கிறிஸ்துமஸ் தினத்திற்கு அடுத்த நாளான டிசம்பர் 26ம் திகதி பொக்ஸிங்டே அன்று தொடங்குகிறது. இதே தினத்தில் அவுஸ்திரேலியா-மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதும் 4வது டெஸ்ட் போட்டியும் இலங்கை-தென்னாபிரிக்க அணிகள் மோதும் முதலாவது டெஸ்ட் போட்டியும் தொடங்குகின்றன.

ஸிம்பாப்வே-நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி ஜனவரி 2ல் டொப்போவிலும், 2வது ஒருநாள் போட்டி ஜனவரி 4ல் வெலிங்டனிலும், 3வது ஒருநாள் போட்டி ஜனவரி 7ல் ஒக்லாண்டிலும் நடைபெறுகின்றன.

நியூஸிலாந்து சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு ஸிம்பாப்வே அணி, அவுஸ்திரேலியா செல்கிறது. அங்கு அவுஸ்திரேலியா-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுடன் இணைந்து கால்டன் அண்ட் யுனைடெட் முத்தரப்பு ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது ஸிம்பாப்வே. ■

# மன்னாதி மன்னன் 37

அமிர்தவல்லி காளி கோயிலுக்குச் சென்று அன்னையை வணங்கி, கணவனுடன் நீடூழி வாழ்வதற்கான வரத்தையும் பெற்று, குணபத்திரனிடம் வந்து சேர்ந்தாள். ஆனால் குணபத்திரன் கூறிய கதை அமிர்தவல்லியை திகிலடைய வைத்தது.

குணபத்திரன் தன்னுடைய நண்பன் இறந்து விட்டமையினால் தான் தன் மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ முடியாது, என்று கூறியதுடன், தற்கொலை செய்யப் போவதாகவும் அமிர்தவல்லியிடம் கூறினான். கலக்கமடைந்த அமிர்தவல்லி சற்று நேரம் யோசித்துவிட்டு, "நாதா! என் இஷ்ட தெய்வமான காளிகாம்பாளை சற்று முன்னர்தான் 'கணவருடன் நீடூழி வாழ்வா' யென்று எனக்கு வரமளித்தாள். இப்பொழுது நீங்கள் உங்கள் நண்பன் இறந்துவிட்டமைக்காக உயிரை விடப் போவதாகக் கூறுகிறீர்கள். அவ்வாறு நடக்குமானால், அம்பாள் எனக்குத் தந்த வரம் பொய்யாகி விடுமே. எனவே சற்றுப் பொறுமையாக இருங்கள். எனக்கு வரம் தந்த என் தாயிடமே செல்கிறேன். அவள் கூற்றுப் பொய்க்காது. அவளிடமே சென்று இதற்குப் பரிகாரம் தேடி வருவேன். அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வந்து விடாதீர்கள்?" என்று கூறிக் கொண்டு காளிகாம்பாள் கோயிலை நோக்கி விரைந்து சென்றாள்.

அம்பாளின் சந்நிதியில் நின்று மனமுருக பிரார்த்தித்தாள். அவளுடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொண்ட அம்பாள் பிரசன்னமானாள். "மகளே! உனக்கு என்ன நேர்ந்தது? ஏன் இவ்வளவு விசனத்துடன் காணப்படுகிறாய்?" என்று வினவினாள்.

அமிர்தவல்லி அம்பாளை நோக்கி, "தாயே! நீ எனக்கு கணவனுடன் நீடூழி வாழ்வாயாக என்று சற்று முன்னர்தான் வரம் கொடுத்தருளினாய்.

ஆனால், என் கணவனோ தனது நண்பன் மரணமடைந்து விட்டமையினால் தானும் உயிருடன் வாழப் போவதில்லை என்று கூறுகிறார். என் கணவன் மரணமாவதானால், தாயே, நீ கொடுத்த வரம் பொய்யாகிப் போகுமே அம்மா!" என்று தழுதழுத்த குரலில் முறையிட்டாள்.

"மகளே! எதற்கும் வருந்தாதே? நான் கொடுத்த வரம் என்றுமே பொய்யானதில்லை. நிச்சயமாக பலித்தே தீரும். இதோ நான் தரும் விபூதிப் பிரசாதத்தைக் கொண்டு போய் உன் கணவனின் கையில் கொடுத்து அவருடைய நண்பரின் சடலத்தின் மீது தூவச் சொல். அவர் உயிர் பெற்று எழுந்து விடுவார். அதன் பின்னர் நீங்கள் இருவரும் என் கூற்றுப்படி நிச்சயமாக நீடூழி வாழ்வீர்கள்!" என்று கூறி அமிர்தவல்லியின் கையில் ஒரு வெள்ளிப் பேழையைக் கொடுத்தாள்.

விபூதிப் பிரசாதம் இருந்த அந்த வெள்ளிப் பேழையை அமிர்தவல்லி பயபக்தியுடனும் மகிழ்ச்சியுடனும் பெற்றுக் கொண்டு நேராக வீடு சென்றாள்.

குணபத்திரன் தங்கியிருந்த மாளிகைக்குச் சென்று விபூதிப் பேழையை அவனிடம் கொடுத்து, காளிகாம்பாள் கோயிலில் நடைபெற்ற சம்பவங்களை விவரமாகக் கூறினாள். குணபத்திரன் தன் மனைவியின் பதிபக்தியையும் அம்பாள் மீது அவள் வைத்திருந்த அளவிட முடியாத பக்தியையும் மெச்சிவிட்டு, தனது நண்பன் சன்மார்க்கனுடைய சடலமிருந்த இடத்திற்குச் சென்றான். காளிகாம்பாள் கொடுத்த விபூதியை எடுத்து அம்பாளை நினைத்து, பிரார்த்தனை செய்து கொண்டு விபூதியை சடலம் முழுவதும் தெளித்தான்.

சன்மார்க்கன் அப்போதுதான் தூங்கி எழுந்தவன் போல் எழுந்தான்.

அவன் உயிருடன் எழுந்து விட்டதைக் கண்டு அமிர்தவல்லியும் குணபத்திரனும் பெருமகிழ்ச்சியடைந்தனர். இருவரும் சோழ நாடு சென்றதிலிருந்து அப்போது வரை நடைபெற்ற சம்பவங்களை குணபத்திரன் தன் நண்பனுக்கு விளக்கினான்.

கலிங்கநாட்டு அரசனின் விருந்தினர்களாக சில நாட்கள் தங்கியிருந்துவிட்டு அரசகுமாரனும் குணபத்திரன், அவன் மனைவி அமிர்தவல்லியும் பிரம்மபுரம் போய்ச் சேர்ந்தனர்.

பிரம்மபுரத்து மன்னன் தன் மகனை நீண்ட நாட்களுக்குப் பின்னர் கண்டு பெரும் மகிழ்வடைந்தான். அரசகுமாரனுக்கு மற்றொரு நாட்டின் அரசிளங்குமாரியை மண முடித்து வைத்தான். மகனிடம் அரசுரிமையைக் கொடுத்து அரியாசனம் அமர்த்திவிட்டு மன்னன் கானகம் சென்று தவ வாழ்க்கை மேற்கொண்டான்.

இந்தக் கதையை முனிவர் கூறி முடித்து, வில்லியசிங்கனிடம், "பார்த்தாயா! உண்மை நண்பனென்றால் குணபத்திரனைப் போன்றிருக்க வேண்டும். சித்திரசேனனோ சுயநலக்காரன். அத்தகைய சிநேகிதர்களுடன் நீ நட்புக் கொள்ளலாகாது" என்று அறிவுரை கூறி வில்லியசிங்கனை மன்னித்து வழியனுப்பி வைத்தார்.

***

## ஆண்வாடை விரும்பாத சண்பகவல்லி!

சண்பகவல்லி, விக்கிரமவல்லி என்ற பெயருடன் தன்னுடன் தங்கியிருந்த விக்கிரமாதித்தனிடம் இந்தக் கதையைக் கூறினாள். "குணபத்திரனும், சன்மார்க்கனும் எத்தகைய நட்புக் கொண்டிருந்தார்களோ அவ்வாறு நாமும் இந்தச் சிறிய இடைவேளையில் நட்புக் கொண்டு விட்டோம். ஆனால் உன் முகத்தில் ஏற்பட்டுள்ள கவலைக் கோடுகளுக்கான காரணத்தை என்னிடம் கூற மறுக்கிறாயே?" என்று கேட்டாள்.

சண்பகவல்லி இவ்வாறு கூறியதைக் கேட்ட விக்கிரமவல்லி என்ற விக்கிரமாதித்தன். "என் கவலையெல்லாம் உன்னைப் பற்றியது தான், நீயோ இந்த நாட்டின் இளவரசி சகல சௌபாக்கியங்களும் கொண்டவள். அதுமட்டுமல்லாமல் பேரழகியுமாகத் திகழ்கிறாய். அவ்வாறிருந்தும் நீ ஏன் ஆண்களை வெறுக்கிறாய்? காலாகாலத்துக்கு ஒரு கட்டழகனை கலியாணம் பண்ணி இந்த இராச்சிய பாரத்தைத் தாங்குவதற்கு ஏற்ற வாரிசைப் பெற்றுத் தரவேண்டும் அல்லவா? இதனால் தான் நான் உன்னையெண்ணிக் கவலைப்படுகிறேன்!" என்றாள்.



சண்பகவல்லி, கலகலவென்று சிரித்தாள். "இதற்குத்தானா நீ இத்தனை கவலைப்பட்டாய்? முன்னதாகவே நீ இதனைக் கேட்டிருந்தால், நான் சொல்லியிருப்பேன். இவ்வளவு நெருக்கமான நட்புடன் பழகிய உன்னுடன் நான் எதையும் ஒளிக்க மாட்டேன். நான் இந்த விரதத்தைக் கைக்கொண்டமைக்குரிய காரணத்தைச் சொல்கிறேன் கேள்!" என்றாள் சண்பகல்லி.

### சண்பகவல்லி கூறிய கதை

இங்களவனம் என்ற ஒரு காட்டில் இங்களாதேவி என்றோர் தெய்வத்தின் ஆலயம் இருந்தது. அந்தக் கோயிலின் எதிர்ப்புறத்தில் ஒரு மூங்கிற்காடு, அதிலுள்ள ஒரு மரத்தில் கூடுகட்டிக் கொண்டு சல்லன் சல்லரி என்ற இரு புறாக்கள் வாழ்ந்து வந்தன.

நீண்ட நாட்களாக இந்தப்புறாக்களுக்கு குஞ்சு பிறக்கவில்லை. இதனால் இரண்டுமே மிக்க வேதனையடைந்தன. அவையிரண்டுமே ஒவ்வொரு நாட்காலையிலும் மாலையிலும் இங்களா தேவியின் ஆலயத்தில் வந்து நின்று பிரார்த்தனை செய்து தங்களுக்கு வாரிசு கிடைக்க வரமருளுமாறு வேண்டிக் கொண்டன. இதனைத் தொடர்ந்து சல்லரி கருவுற்று இரு முட்டைகளை ஈன்றது. சில நாட்களில் அழகான இரு குஞ்சுகள் அம்முட்டைகளிலிருந்து வெளிப்பட்டன. தங்களுக்கும் குஞ்சுகளுக்கும் இரை தேடுவதற்காக சல்லனும், சல்லரியும் காலையிலேயே புறப்பட்டுச் சென்றுவிடும். எங்கெங்கெல்லாமோ அலைந்து, பறந்து திரிந்து குஞ்சுகளுக்கு இரை தேடிக் கொண்டுவந்து அவற்றை அன்போடு வளர்த்து வந்தன.

ஒரு நாள் சல்லனும், சல்லரியும் இரை தேடப்பறந்து சென்றபோது, அந்த மூங்கிற்காட்டில் தீபற்றிக் கொண்டது. அந்தத் தீயில் புறாக் குஞ்சுகள் இரண்டும் வீழ்ந்து பொசுங்கி மாண்டுபோயின.

இரை தேடச் சென்ற இரு பறவைகளும் திரும்பி வந்து பார்த்த போது தங்கள் அன்புக் குஞ்சுகள் தீயில் வெந்து சாம்பராய்ப் போனதைக் கண்டு துயரம் தாங்காமல் அழுது புலம்பின. தங்கள் குஞ்சுகள் தீயில் மாண்டதைப் போல தாங்களும் அதே தீயில் வீழ்ந்து இறந்து போவதற்கான திட்டம் தீட்டின.

இவ்வாறு இரு புறாக்களும் தீயில் குதிப்பதற்கு ஆயத்தமானபோது, சல்லன் என்ற ஆண்புறா அங்கிருந்து நழுவித் தப்பிச் சென்றுவிட்டது. இதனைக் கண்ட பெண் புறாவான சல்லரி, சல்லனைத் திட்டித் தீர்த்துவிட்டு இங்களாதேவி அம்மனின் சந்நிதியில் போய், நின்று அழுது புலம்பியது.

தான் உள்ளன்போடு நேசித்த தன் கணவனான சல்லன் தனக்குத் துரோகம் செய்துவிட்டதாக வருந்தியது. "அம்பாளே! என் கணவன் ஒரு கோழைபோல் பயந்து என்னைவிட்டு ஓடிவிட்டான். ஆனால் நான் திட்டமிட்டபடி தீயில் விழத்தான் போகிறேன். இருப்பினும், தாயே, எனக்கு மற்றொரு பிறவி நீ அருள வேண்டும். நான் ஓர் அரசகுமாரியாக அரண்மனையில் பிறக்க வேண்டும் என்னுடலில் எப்போதும் சண்பக மணம் வீச வேண்டும். எனது முற்பிறவியின் நினைவு என்னை விட்டு என்றுமே அகலக்கூடாது இந்த வரத்தை எனக்குத் தந்தருள வேண்டும்!" என்று வேண்டிக் கொண்டு தீயில் வீழ்ந்து உயிரை விட்டது.

அம்பாளின் அருளால் சல்லரி என்ற பெண் புறாவே அரசனின் மகளாக பிறந்தாள். அவள் வேறு யாருமல்ல நானேதான் என்று கூறிய சண்பகவல்லி, "இப்போது என்ன சொல்லுகிறாய்? நான் ஆடவர்களின் வாடையே வேண்டாம் என்று ஒதுங்கியிருப்பதற்கான காரணத்தை அறிந்து கொண்டாயல்லவா?" என்று விக்கிரமவல்லியிடம் கேட்டாள்.

இராஜகுமாரன்

இதைக் கேட்ட விக்கிரமவல்லி என்ற விக்கிரமாதித்தன் என்ன பதில் கூறுவதென்று தெரியாமல், "உனது விரதத்திற்கான காரணத் தெரிந்து கொண்டேன்!" என்று மட்டும் கூறி நிறுத்திக் கொண்டான்.

சண்பகவல்லியும் விக்கிரமவல்லியும் இவ்வாறு உரையாடிக் கொண்டிருந்ததை அணில் உருவத்தில் வளையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த பட்டி, அங்கிருந்து கீழிறங்கி தன்னுடைய உடலைப் பாதுகாத்துக் கொண்டிருந்த வேதாளத்திடம் சென்றான். அணில் கூட்டிலிருந்து தனது உயிரை நீக்கியெடுத்து தனது சொந்த உடலில் பட்டி புகுந்து கொண்டான்.

*(மன்னன் வருவான்...)*

# காதில பூ கந்தசாமி



காதில பூ வைச்சவனெல்லாம் கந்தசாமி ஆகிவிடமாட்டான். கந்தசாமி ஆனவனெல்லாம் காதில பூ வைச்சுவிடமாட்டான். இதை ஏன் துணிஞ்சு சொல்லுறனெண்டால், இப்ப நிறையக் கள்ளக் கந்தசாமிகள் தலையெடுக்கத் தொடங்கிட்டாங்கள். ஆனால் பாருங்கோ அவையளுக்கும் நிஜக் கந்தசாமி எனக்கும் ஒரு பெரிய வித்தியாசம் அப்பட்டமாகத் தெரியும். என்னவென்று கேட்பியள். நீங்கள் கேட்காவிட்டாலும் நான் சொல்லுறதுக்கு உரிமையிருக்கு. அது என்னவெண்டால் நான் என்ர சத்திய வாக்கியத்தை அப்பட்டமாக ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லிப் போட்டுத்தான் மற்றக்கதை பேசுறனான். அதாவது "நான் சொல்லுவதெல்லாம் பொய், பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை" என்றதுதான் என்ர சத்திய வாக்கியம். ஆனால் இங்க உலாவுற கள்ளக் கந்தசாமிகளோ அந்த வாக்கியத்தை ஒருபோதும் வெளியால சொல்லுறதில்லை. தங்களுக்குள்ளேயே மூடி மறைச்சுக்கொண்டு வெளியால உண்மை பேசிறதாக் காட்டப்பாக்கினம். பொய்யைப் பொய்யெண்டு சொல்லாமல் பொய்செல்லுற பொய்யர்களுக்கு மத்தியில பொய் பேசியே பொய்யைப் பொய்த்துப்போக வைக்கப் புறப்பட்டிருக்கிறவன் நான் பாருங்கோ. மெய்யே மெய்யெண்டு உணராத உலகத்துக்கு, பொய்யைப் பொய்யெண்டு உணரவைச்சாலாவது மெய்யைப் பொய்யெண்டும் பொய்யை மெய்யெண்டும் நம்பிப் பொய்மையில உழலாமல் திருத்தலாமெண்டு பொய்யை நம்பிப் புறப்பட்டிருக்கிறவன் நான். அதனால.... பிளீஸ், ஃபலோ மீ!

விடயத்தில இறங்க முன்னர் நான் சொல்லுறத அப்படியே நம்புவீர்கள் எண்டும் அதைத் தவிர வேறு எதையும் சிந்திக்கும் உரிமை உங்களுக்கு அறவே இல்லையெண்டும் ஏற்றுக்கொண்டும் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டால் மட்டுமே இந்தப் பகுதியை வாசிக்க நீங்கள் அனுமதிக்கப் படுவீர்கள் எண்டதை இந்த முறையும் திரும்பவும் சுட்டிக்காட்ட விரும்பிறன். சிலபேர் நான் சொன்னதையும் மீறி சுயமாகச் சிந்திக்கத் தலைப்படுகிறதாய் அறியிறன். ஆபத்தை விலைக்கு வாங்காதேங்கோ, எதுக்கும் அடுத்த முறையில இருந்து உங்களிட்ட ஒரு சத்தியக் கடுதாசிய எழுத்தில வாங்கிப்போட இருக்கிறன். தயாராக இருங்கோ. இம்முறை சில சுவாரசியமான செய்திகள் வந்திருக்கு. '....க்ர்ம் ..கெக்..கெர்ம் ...! செருமிக்கொண்டு செய்தி வாசிப்பவர் காதில பூ கந்தசாமி!'

இனவாதமொன்றே சமாதானத்துக்கான சன்மார்க்கம் என்ற தலைப்பில் இலங்கையின் கொலை உறுமயக் கட்சித் தலைவர் எழுதிய அரைப்பக்க நோட்டீசுக்காக அவருக்கு இவ்வருடத்துக்கான மனித உரிமைகளுக்கான நோபல் பரிசை வழங்கவேண்டுமென்று மகா சிங்கத்தனரால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து ஜெய(வேவா).வி.பி. நடத்திய உண்ணும் விரதப் போராட்டத்தில் தாங்கள் இதைவிட உக்கிரமான இனவாத சுலோகங்களை நாலுவரிப் போஸ்ட்டர்களாகத் தெருவெங்கும் போட்டிருந்த போதும் அவற்றை இனவாதமாகக் கணிக்காது இடதுசாரிக் கோஷங்களாகத் தட்டிக் கழித்து விடுவது ஜனநாயகத்துக்குச் செய்யும் படு துரோகமென்றும் இதற்குப் பின்னணி சி.ஐ.ஏ. என்பதை தாம் கட்டை விரலால் சுட்டிக் காட்டுவதாகவும் தெரிவித்துள்ளது.

மலையகத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கங்கணம் கட்டியுள்ள தொழிற்சங்கத் தலைவர் வறிய மக்களுக்காக விடுத்த வருட இறுதிச் சொற்பொழிவில், வறுமை கொடுமையானதென்பதைத் தான் வசதியாக வாழ்ந்து பார்த்த அனுபவத்தில் அறிந்துகொண்டதாகவும், நிழலின் அருமை வெய்யிலில்தான் தெரியுமென்பதுபோல வறுமையின் அருமை தனக்கு வசதிகள் வரும் போதுதான் தெரிகிறதெனவும், இன்னும் நன்றாகத் தெரிந்துகொண்டபின் தான் நடவடிக்கைகளில் இறங்கப்போவதாகவும் மலையுச்சியில் நின்றபடி உரையாற்றினார். அத்தோடு வறுமையை ஒழிக்க வேண்டுமென்று தான் கட்டியுள்ள கங்கணத்தை தனது தாத்தாதான் தனக்குக் கட்டிவிட்டதாகவும் அதற்கு முன்னர் அதை அவர் கட்டியிருந்ததாகவும் அதற்கு முன்னர் அவரது தகப்பன் தாத்தாமார் கட்டியிருந்ததாக தனக்கு அவர் நிலவு காட்டிச் சோறூட்டிய காலத்தில் சொல்லியிருக்கிறாரென்றும் தனக்குப் பின்னும் தனது பிள்ளைகுட்டிகள் பேரன் பேத்திகள் இக் கங்கணத்தைக் கட்டியபடியே இப் பொன்னான மண்ணின் தேயிலைச் செடிகளுக்கு மத்தியில் தவண்டு விளையாடுவார்களெனத் தான் உறுதியாக நம்புவதாகவும் அவர் உணர்ச்சிகரமாக உரையாற்றினார்.


கூட்டணியின் கொரில்லாப்படைத் தலைவர் அழுக்கு சங்கரியின் ஆயுதங்கள் ஆசிரியை ஒருவரின் மறைவிடத்திலிருந்து கைப்பற்றப்பட்டதையடுத்து பாக்கு வெட்டி, பேனாக்கத்தி, குறடு, கத்திரிக்கோல், பிளேடு, குண்டூசி போன்ற தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை வைத்திருப்போருக்கும், வைத்திருப்பவர்களைத் தெரிந்தும் தகவல் தெரிவிக்காதிருப்போருக்கும் எதிராகக் கடுமையான சட்டங்களைத் தமிழீழச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப் போவதாகத் தெரிவித்துள்ள புலிகளின் பாதுகாப்பு அமைச்சர் கூட்டணியை வன்முறையைக் கைவிட்டு ஜனநாயகப் பாதைக்குத் திரும்புமாறு வேண்டுகோள் விடுத்தார். அதற்குப் பதிலளிக்க மறுத்த அ.சங்கரி தமக்குப் பாதை முக்கியமல்ல, பயணம் தான் முக்கியமென்றும் பேச்சுவார்த்தைகளுக்குத் தாம் விதித்த நிபந்தனைகளை முதலில் நிபந்தனைகளல்ல என்று ஏற்றுக் கொள்வார்களானால் பின்னர் அடுத்த கட்டத்தைப் பரிசீலிக்கலாமென்றும் தெரிவித்தார்.

பார்த்தெழுதல் பரீட்சையில் பக்கத்து மாணவனின் பரீட்சைத் தாளைப் பார்த்து எழுதத் தடைவிதித்த ஆசிரியரைப் பகிடிவதை செய்த குற்றத்துக்காக மாணவன் ஒருவனுக்கு அதிகபட்சத் தண்டனையாக மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**மரணச் செய்தி:** வைரஸ் காய்ச்சலால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட கம்பியூட்டர் ஹாட் டிஸ்க் ஒன்று மெமறி ஃபெயிலியரால் மரணமடைந்துள்ளது. அன்னாரின் ஈமைச்சடங்குகளில் கலந்து கொள்ளுமாறு, மனைவியர் மொனிட்டரும் மாமனார் கீபோடும் பிள்ளைகள் மவுஸ், ஸ்பீக்கர், மற்றும் உறவினர்களான சி.டி. மற்றும் ஃபுளப்பி டிஸ்க்குகள் யாவரும் ஆழ்ந்த துயரத்துடன் வேண்டிக் கொள்கின்றனர். இந்த மரணம் ஈ-மெயில்களால் பரவும் பயங்கர வைரஸ் தொற்று நோயால் சம்பவித்ததென்று தெரிவித்த மருத்துவர் இவ் ஈ-மெயில்களைக் கட்டுப்படுத்தாவிட்டால் இன்னும் பல கொம்பியூட்டர்களுக்கு இந் நோய் வரவும் அபாயமுண்டெனா எச்சரித்துள்ளார்.

**விளம்பரம்:** ஈ-மெயில்களை ஒழிக்கக்கூடிய கொம்பியூட்டர் கொசுவர்த்திகள் விற்பனைக்குண்டு. உடன் நாடவேண்டிய இடம்-ஈ ஒழிப்புக் கூட்டுத்தாபனம், இழிச்சவாயன் தெரு, ஈச்சம்பத்தை.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**


அருள் ஜூவல்லர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன
105, காலி வீதி வெள்ளவத்தை, கொழு - 06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lapls.com/arul







ஸ்ரீ கல்யாணி ஜூவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


உத்தமன் இயேசு பாலன் பிறந்தார்
சத்தியம் நிலைத்திட சகத்தினில் தோன்றி
நித்திய வாழ்வில் நிலவொளி துலங்கிட
வைத்தனன் அவனடி வணங்கிடுவோமே!





## ஆஹா...

↑ அழகழகான பலப்பல வண்ணங்களிலும், பற்பல வடிவங்களிலும் காட்சி தருகின்ற இவற்றைப் பார்க்கும் போது வாயில் நீரூறத்தான் செய்யும். ஆனால் இவையெதுவுமே உண்பதற்கான பழங்களுமல்ல, வாயில் போட்டு மெல்லுவதற்கான பண்டங்களுமல்ல. இவையத்தனையும் மெழுகுவர்த்திகள். உங்கள் குழந்தைகள் பிறந்தநாள் கொண்டாடும் போது, இவற்றை வாங்கி அலங்காரமாக வைத்துக் கொளுத்துவதற்கு விரும்பினால், தயவு செய்து இவற்றை எந்தக் கடையில் வாங்கலாம் என்று எம்மிடம் தொலைபேசியில் கேட்டு விடாதீர்கள்! இவையாவும் எங்கேயோ உற்பத்தி செய்யப்பட்டவை.



## நினைவுப் பயணம்

↑ இந்தியாவின் தேசியச் சின்னம் பொறித்த இந்தப் பிரமாண்டமான பலூனும் அதற்கு இடதுபுறம் காணப்படும் பலூனும் அந்நாட்டின் மேற்குக் கரையிலுள்ள கோவாவின் மைதானத்தில் வைத்து விண்ணில் பறக்க விடப்பட்டன. இந்த பலூன்கள் முதலில் தென் கோடியிலுள்ள கன்னியாகுமரியிலிருந்து புறப்பட்டு இடையில் கோவாவில் இறக்கப்பட்டன. இதில் பயணம் செய்த பயணிகள் தங்களை ஆசுவாசப்படுத்துவதற்காகவே பலூன்கள் கோவாத் தரையில் இறக்கப்பட்டன. கன்னியாகுமரியிலிருந்து வடஇந்தியாவிலுள்ள புனே நகருக்குப் பயணம் மேற் கொண்டன.

பாகிஸ்தானிடமிருந்து இந்தியாவின் உதவியுடன் பங்களாதேஷ் தனி நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்ட 25வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் முகமாகவே இந்த பலூன் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

← கொரியாவிலுள்ள ஒரு பூங்காவுக்குச் சென்ற படப்பிடிப்பாளருக்கு இந்த அற்புதமான காட்சியைக் 'கிளிக்' செய்ய ஆசையேற்பட்டதனால், எமது வாசகர்களுக்கு இப்படத்தைப் பார்த்து இரசிக்க வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

பூங்காவுக்கு வரும் சகலரையும் மகிழ்வூட்டுவதற்காக ஆண்களும் பெண்களுமாக இவ்வாறு வேடங்கள் புனைந்து ஆடிப்பாடி மகிழ்வூட்டுவார்களாம்.

நுணுக்கமாகப் பார்த்தால் ஒரே வேடத்தை இருவர் வீதம் புனைந்து காட்சிதருவதை அவதானிக்கலாம். இந்தப் பூங்காவுக்குப் போவதனால் பெரியவர்கள் தங்கள் குழந்தைச் செல்வங்களையும் அழைத்துச் சென்றால்எம்மை விட அவர்கள்தான் மிக ஆனந்தமாகப் பொழுதைக் கழிப்பார்கள்.



1ம் பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் ஷிவனேஷன் ஷியான்ஷன் 29.12.2000

## குஷி

→ அண்மையில் இங்கிலாந்தில் தலைநகர் இலண்டனில் நடைபெற்ற உலக அழகுராணிப் போட்டியில், இந்தியாவின் அழகுராணி பிரியங்கா சோப்ரா உலக அழகு ராணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

50 வருடங்களாக நடைபெற்று வரும் உலக அழகுராணிப் போட்டிகளில், இந்தியா சார்பாக உலக அழகிப் பட்டம் வென்ற முதல் அழகி ரீடா ஃப்ரியா. 60களில் அழகிப் பட்டம் வென்றார்.

இவருக்குப் பின் அண்மைக்காலமாக இந்திய அழகிகளே உலக அழகிகளாகத் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர். 1994ல் ஐஸ்வர்யா ராய், சுஷ்மிதா சென் (பிரபஞ்ச அழகி), 1997ல் டயானா ஹெய்டன், 1999ல் யுக்தா முகி, 2000தில் லாரா தத்தா(பிரபஞ்ச அழகி) கடைசியாக பிரியங்கா.

95 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் கலந்து கொண்ட அழகிப்போட்டியின் ஒரு பகுதியாக மாலைதீவுகளில் 'பீச் வெயர்' போட்டியும் நடந்தது. இங்கு அழகிகள் நீச்சல் உடைகளில் பூனை நடை (அதுதான் காற்ஸ் வோக்) போட்டனர். இதில் உலக அழகி பிரியங்கா ஒய்யாரமாக புன்னசிரிப்புடன் நடை பயின்ற காட்சிதான் இது.



நடையழகி